# சுதந்திரன்

SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1998 வைகாசி திங்கள் 24-ம் நாள் (7—6—67) புதன்கிழமை ஸபர் 27 | புத்தகம் 20

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12. தொலை பேசி எண்-3411 த. பெ. 1183 | இதழ் 46


# தமிழருக்கு கைவிரிப்பு

# இ. போ. ச. ஓரவஞ்சனை

## 127 தமிழ் பட்டதாரிகளில் ஒருவருக்கு கூட இடமில்லையா?

இலங்கைப் போக்கு வரத்துச் சபையில் தமிழர்களுக்கு எதிராக பாரபட்சம் காட்டப்பட்டு வருவதாக அறியப்படுகிறது, நிர்வாகத்தில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு வருவது ஒருபுறமிருக்க வெற்றிடங்களுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதிலும் தமிழர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று தெரிகிறது. அண்மையில் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரித் தகுதி காண் நிலையினர் தேர்வில் 14 சிங்களவர் தெரிவு செய்யப்பட்ட போது தமிழர்கள் ஒருவர் தானும் தெரிவு செய்யப்படாதது மேற்கண்ட உண்மையை ஊர்ஜிதம் செய்வதாக இருக்கிறது.

தேசிய அரசாங்கம் ஏற்பட்ட பின்னர் கூட இ. போ. ச. தமிழ் மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் எதிராகப் பாரபட்சம் காட்டி வருவதாக தமிழ் மக்கள் மத்தியில் பலத்த குற்றச்சாட்டு இருந்து வருவது தெரிந்ததே. தமிழுக்கு இ. போ. ச. நிர்வாக சபையில் இடம் கொடுக்கப்படுவதில்லையென்றும் இ. போ. ச. வில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு ஊழியர்களைத் தெரிவு செய்யும் போதும் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவதாக வும் குற்றச்சாட்டு இருந்து வருகிறது.

அண்மையில் இ. போ. ச. வுக்கு தெரிவு செய்யப்பட்ட பட்டதாரித் தகுதி காண்நிலையினரைத்தெரிவுசெய்வதிலும் பாரபட்சம் காட்டப்பட்டதாகக் கூறப்பட்டதையடுத்து இப்பிரச்சினையை பாராளுமன்றத்தில் இவ்வாரம் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கிளப்பினார்.

பட்டதாரித் தகுதி காண் நிலையினருக்கு தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களின் புள்ளி விபரங்களை வெளியிடுமாறு அவர் தேசிய மய சேவை அமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

அமைச்சரின் பதிலில் பின்வரும் விபரங்கள் தரப்பட்டன:

தகுதி காண் நிலைப் பட்டதாரிகள் தெரிவுக்கு விண்ணப்பம் அனுப்பியவர்கள் சிங்களவர் 465, தமிழர் 127, முஸ்லிம்கள் 11 ஏனையோர் 2.

தெரிவு செய்யப்பட்டவர்கள் சிங்களவர் 14, முஸ்லிம் 1 தமிழர் 0. சிங்களவர் 93 வீதமும், முஸ்லிம்கள் ஏழு சத விகிதமும் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழர் ஒரு சத விகிதம் தானும் தெரிவு செய்யப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

---

# சுற்று நிருபத்தை வாபஸ் வாங்குக!


## தபால் அமைச்சரிடம் இரத்தினம் வற்புறுத்து

'தமிழ் மொழியை அஞ்சற் திணைக்களங்களில் உபயோகப்படுத்துவது பற்றி அண்மையில் அஞ்சற் திணைக்கள மாஅதிகாரி வெளியிட்டுள்ள சுற்றறிக்கை தமிழ் மொழிச் சட்டத்திற்கு முரணாக இருப்பதுடன், விரைவில் தமிழ் மொழி விசேட விதிகளை நடை முறைப்படுத்துவதற்கு நிதியமைச்சினால் வெளியிடப்படவிருக்கும் அறிக்கைக்கும் முரண்பாடாக இருக்கிறது. ஆகவே அந்த அறிக்கையை உடனடியாக வாபஸ்வாங்குமாறு உத்தரவிடுங்கள்" இவ்வாறு தபால் தந்தி போக்குவரத்து அமைச்சரை கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கோரியுள்ளார்.

இது பற்றி திரு. இரத்தினம் சுதந்திரன் நிருபரிடம் கூறியதாவது:—

'அஞ்சல் மா அதிகாரியின் குறித்த சுற்றறிக்கை, தமிழர்கள் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கும் சில உரிமைகளைக்கூடபறிமுதல் செய்வதாக இருக்கிறது. தமிழையோ, தமிழ்மொழிச்சட்டத்தையோ பொருட்படுத்தாத அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளரின் ஆலோசனைப்படி செய்யப்பட்ட முடிவு எப்பொழுதும் தமிழர்களுக்கு பாதமானதாகவே இருக்கும். தமிழை அழிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ள மொழித்திணைக்கள ஆணையாளர் தமிழை வாழ வைக்க எப்படி ஆலோசனை கூறுவார்?

'தமிழ் மொழிச் சட்டத்துக்கு முரண்பட்டுக் காணப்படும் அஞ்சல் மா அதிகாரியின் அறிக்கை உடனே வாபஸ் வாங்கப்பட வேண்டும். தமிழ் மொழியை நடைமுறைப் படுத்துவது பற்றி நிதியமைச்சரின் புதியசுற்றறிக்கை வெளி வந்ததும், அதையொட்டியே அஞ்சல் மா அதிகாரி மொழிச் சட்டத்தை அமுல் நடத்த நடவடிக்கையெடுக்க வேண்டும். இது பற்றி தபால் அமைச்சரிடம் தெட்டத் தெளிவாக தெரிவித்திருக்கிறேன்.'



யாழ்ப்பாணத்தில் மோட்டார் யந்திரங்களுக்கு "கிறுங்சாவ்ற் கிறைன்டிங்" செய்து கொடுக்கும் இயந்திரம் ஒன்று இயக்கப்படுவதை நல்லூர்த்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சித் தலைவருமான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் பார்வையிடுகிறார்.

---

# கமிஷன் வேண்டும்

## துரைரத்தினம் கோரிக்கை

அண்மையில் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற பொலீசாரின் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி ஒரு கமிஷன் நியமித்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று இவ்வாரம் பாராளுமன்றத்தில் பேசிய பருத்தித்துறை பிரதிநிதி திரு. க. துரைரத்தினம் பிரதமரைக் கேட்டுக்கொண்டார்.

திரு. துரைரத்தினம் ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசுகையில், வல்வெட்டித் துறை சம்பவத்தில் சிவஞான சுந்த

(9-ம் பக்கம் பார்க்க)

---

சுதந்திரன்

## யுத்த நிலை

மத்திய கிழக்கில் பெரும் கொந்தளிப்பு. எல்லையில் ஒரு தீப்பொறி பறந்தால் போதும்! பயங்கர யுத்தம் வெடித்து விடும். வெடித்தால், அதனை உலகயுத்தமாக வளர்ப்பதற்கு வல்லரசுகளும் தயார்!

அரபு-இஸ்ரேல் தகராறில் வல்லரசுகளும் சிக்கிக் கொண்டுள்ளன. யுத்தம் மூளும் போது வல்லரசுகளும் தாக்குதலில் இறங்கி விடும். அமெரிக்க, சோவியத் கப்பற் படைகள் மத்திய தரைக் கடலில் மோதலுக்குத் தயாராயிருக்கின்றன.

சூயஸ் போரின் போது ஏவு கணையைப் பிரயோகிப்பதாக ரஷியா செய்த எச்சரிக்கைதான் அன்று ஐக்கிய அரபுக் குடியரசுக்கு வெற்றியைத்தேடிக் கொடுத்தது. இன்றும் ஐ. அ. குடியரசுக்குப் பின்னால் ரஷியா நிற்கிறது.

அகாபா வளைகுடாவை ஜனாதிபதி நாசர் மூடியதால் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் ஆத்திரம் ஏற்பட்டுள்ளது. வளைகுடா கப்பற் பாதையைத் திறப்பதற்காக பிரதமர் வில்சனும், ஜனாதிபதி ஜோன்சனும் திட்டமிடுகின்றனராம். அதனைத் திறக்கும் முயற்சியில் அவை இறங்கினால் சூயஸ் கால்வாயையே மூடிவிடுவதாகக் கடுமையாக எச்சரித்துள்ளார் நாசர்.

அந்நிலை உருவாகினால், நாசர் அமெரிக்காவுடனும் பிரிட்டனுடனும் நேரடியாக மோதுவார். இது ஓர் அபாயகரமான நிலைமை!

நாசருக்கு ஏற்கனவே 3 வெற்றிகள் கிடைத்து விட்டன. அவைகளாவன: 1. அவர் அகாபா வளைகுடாவை கைப்பற்றிக் கொண்டார். 2. ஐ. நா. துருப்புகளை அகற்றிவிட்டார். 3. எதிரிகளை எதிர்ப்பதில் அரபு உலகத்தை ஐக்கியப்படுத்தி விட்டார். முதல் வெற்றி கிடைத்து விட்டதால் அவர் இப்பொழுது சமாதானத்தில் நாட்டம் கொண்டிருப்பதாக கூறப்படுகிறது. இது ஒரு நல்ல செய்தி!

ஐ நா தீவிரமாக இறங்கினால் ம. கிழக்கில் சமாதானம்சாத்தியமாகலாம். வியட்நாம் பிரச்சினையில் ஐ. நா. தோல்விகண்டது. ம. கிழக்கிலும் அதற்கு அதே கதி ஏற்படவும் இடம் உண்டல்லவா?

ம. கிழக்கில் சமாதானம் அமெரிக்கா, ரஷியா ஆகிய இரு வல்லரசுகளின் கையில் தான் இருக்கிறது. இலங்கை உட்பட ஆசிய நாடுகள் உடனடியாக இதில் தலையிட்டு அவ்விரு வல்லரசுகளை வற்புறுத்தி வழிக்குக் கொண்டுவர வேண்டும். இதுதான் இன்றுள்ள சமாதானத்துக்கான வழி!

இஸ்ரேலும் வல்லரசுகளின் தயவில் உயிர் வாழ்வதைக் கைவிட்டு, இம்முறை சமாதானம் ஏற்பட்டதும், அரபு நாடுகளுடன் நட்பு உறவு பூண்டு, அவற்றின் மனப்போக்கை மாற்றி, அரபு நடுாகளின் நல்லநண்பனாக வாழ வேண்டும். இல்லையேல் இஸ்ரேலின் நிலை நித்திய கண்டமாகத் தான் இருக்கும்.

அகாபா வளைகுடா பிரச்சினையைச் சர்வதேச நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு நகர்ப் பிரவேசம்

**கவலையை விளக்குவதும் அதே நேரத்தில் நகைச்சுவை விருந்து அளிப்பதும் இத்தொடரின் நோக்கங்கள் ஆதலின் இதன்கண் பல்வேறுபட்ட பாத்திரங்கள் இடம் பெறுகின்றன.**

புகையிலைச் சுருட்டு வியாபாரத்தில் முன்னணியில் நிற்கும் கொக்குவில் சின்னையரை அறியாதார் அறியாதாரே! புகையிலைச் சுருட்டு வருமானத்தாலேயே தாம் வளர்ந்து தமக்குத் திருமணமும் செய்து இவ்வுலகிற்கு ஏழு ஆத்மாக்களையும் உதவி அவற்றில் ஒன்றைக் கொழும்பு சர்வகலாசாலைக்கும் அனுப்பியவர் அவர்.

அப்பேர்ப்பட்ட கியாதி வாய்ந்த சின்னையருக்கு கொழும்பு சர்வகலாசாலையில் கல்வி கற்கும் தம்முடைய சிரேஷ்ட புதல்வனைச் சர்வகலாசாலையில் மாணவக் கோலத்தில் காண வேண்டும் என்றும் அவனது கல்வி, கீர்த்தி, செல்வாக்கு இவை பற்றிச் சர்வகலாசாலையில் உள்ளவர்கள் கூறுவதைக் கேட்க வேண்டும் என்றும் ஆசைகள் எழுந்தன. இவை போன்ற விபரீத ஆசைகள் அவருக்குத் தோன்றுவது சர்வசாதாரணம் என்பது நமக்குத் தெரியாவிட்டாலும் அவரது தர்ம பத்தினி சின்னம்மாவுக்குத் தெரியும்.

'சண்ணே சின்னம்மா நான் கொழும்பிற்குச் சென்று நமது அருந்தவப் புதல்வனைப் பார்த்துவரப் போகிறேன்' என்று கொக்குவில் சின்னையர் நாடகபாணியில் கூறியபோது, அதே தொனியில் அவருடைய தர்ம பத்தினி 'சின்னம்மா' 'பிராணநாதா! இந்த விபரீத ஆசை உங்களுக்கு வேண்டாம். நீங்கள் கொழும்புக்குச் செல்லச் செலவாகும் பணத்தையும் அவனுக்கு அனுப்பி வையுங்கள் அது தான் தர்மமும் கர்மமும்' என்றாள். சொல்லப்படுவது சரியாக இருந்தாலும் பிழையாக இருந்தாலும் சொல்லுபவர் மனைவியாக இருந்தால் அதற்குப் பணியக் கூடாது என்பது சின்னையரின் சித்தாந்தம். (இந்தச் சித்தாந்தம் சின்னையருக்கு மட்டும் சொந்தம் அன்று, ஆளுங்கட்சியின் கருத்தை எதிர்க்கட்சியும், எதிர்க்கட்சியின் கருத்தை ஆளுங் கட்சியும் சரி பிழை என்று பாராது எதிர்ப்பது பாராளுமன்றத்தில் உண்டு) பயந்து நடந்தால் 'பெண்டிலுக்குப் பயந்தவன்' என்று உலகம் வசை கூறும் என்பது அவரது அச்சம். ஆதலால் அவர் பணிந்தார் இல்லை.

மாலைக் கொழும்புரயில் கொக்குவில் ஸ்டேசனில் சின்னையரை ஏற்றும் பேறு பெற்றது. அவருடைய பாதாரவிந்த ஸ்பரிசத்தால் புகை வண்டியின் அழுக்கில் சிறிது நீங்கியது. புகையிலை நிறத்தில் இருந்த அவருடைய வேட்டியும் சால்வையும் ரயிலில் இருந்தவர்களுக்குச் சிரிப்பை ஊட்டின. வீட்டுக்கு ஒரு உடுப்பு வெளியில் ஒரு உடுப்பு என்னும் பாரபட்சம் அவரிடம் இல்லை.

ஏன் சிரிக்கிறார்கள் என்பது விளங்காமற் போகவே அவருக்கு ஓர் ஐயம் உண்டாகியது. வெளியே நின்ற ஒருவரை நோக்கி 'இந்த ரயில் அங்கொடைக்குப் போகிறதா?' என்று கேட்டார். வெளியே நின்றவர் 'இந்த ரயில் அங்கொடைக்குப் போகவில்லை; இந்த ரயிலில் இருக்கும் ஒருவர் அங்கொடைக்குப் போகிறார்' என்றார். வெளியில் நின்றவர் கூறியது விளங்கிய காரணத்தாலோ அல்லது விளங்காத காரணத்தாலோ சின்னையர் விரைந்து சென்று தமது இடத்தில் அமர்ந்தார்.

பக்கத்தில் இருந்தவர்கள் சம்பாஷிப்பதற்கு ஏற்றவர்களில்லை என்று நினைத்த அவர் தம்முடைய மகனைப் பற்றிச் சிந்திக்கலானார். 'என்னைப் போலப் புத்திசாலியாகவே என்னுடைய மகனும் பிறக்கும் போது இருந்தான். நான் பெருவிரல் அடையாளம் வைக்கும் அளவுக்குக் கற்றாலும் என்னுடைய மகன் மேலும் கற்க வேண்டும் என்று விரும்பினேன். அவன் சுறு சுறுப்புள்ளவனாயும் புத்திசாலியாயும் வளர்ந்தான்' யாழ்ப்பாணப் படிப்பெல்லாம் முடித்து இப்போது மேற்படிப்புக்குக் கொழும்புக்குப் போயிருக்கிறான். யூனிவேசிற்றீலை படிக்கிறான். எப்படி இருக்கிறானோ ...'? இப்படிப் பலவற்றைச் சிந்தித்தார்.

ரயில் பளை ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தது. சிலர் தமது உணவுக் கட்டுக்களை அவிழ்த்தனர். நாகரிகமாகச் சிறிது உணவே கொண்டுவந்தனர்.

கொக்குவில் சின்னையரின் மனைவி சின்னம்மா கணவனின் உடல் நலத்தில் கவனம் உள்ளவள் ஆதலின் போதிய பிட்டு (இக்கால இளைஞர் நால்வருக்குப் போதும்) கட்டிக் கொடுத்தாள். சின்னையர் உணவுக் கட்டை அவிழ்த்ததும் மற்றவர்கள் ஆச்சரியத்தால் இமையாது பார்த்தனர். அவர் நாவூறுபடும் என்று அஞ்சி ஓரளவு மறைத்துக் கொண்டு சாப்பிட முயன்றார்.

அப்படியிருக்கவும் பக்கத்தில் இருந்த ஒருவர் 'நாலு பேருக்குப் போதிய உணவு இருக்கிறதே' எங்கே மற்ற மூவரும்?' என்று கேட்டார்.

'எனக்கு நாலாட் பலம் இருக்கிறது' என்று சின்னையர் சமாளித்தார். பின்பு அவருடைய வாய் பேசவில்லை-கை பேசியது. அதாவது கையினால் வாய்க்குஉணவை அனுப்பினார்.

சிலர் ரயிலுள் இருக்கும் சிற்றுண்டி நிலையத்துக்குச் சென்று மது அருந்தி விட்டு வந்தனர். சிற்றுண்டிநிலையத்துக்கு அவர்கள் போகும் போதும் சின்னையர் அவர்களைக் கவனித்தார். திரும்பி வரும் போதும் கவனித்தார். பக்கத்தில் இருந்தவரிடம் 'இவர்கள் உந்தப் பக்கம் போகும் போது உற்சாகமாகப் போனார்கள். திரும்பி வரும் போது மயக்கம் போட்டுப் பெண்களுக்கு மேலும் பிள்ளைகளுக்கு மேலும் விழுகிறார்கள். அங்கே மயக்க மருந்து கொடுக்கிறார்களா?' என்று கேட்டார். பக்கத்தில் இருந்தவர் 'அப்படியல்ல அங்கே மது விற்கிறார்கள்' என்றார்.




'இது என்ன வம்பு' என்றார் சின்னையர்.

'வருமானத்துக்காக அரசாங்கம் அனுமதிக்கிறது, என்றார் மற்றவர்.

'வருமானத்துக்காக அரசாங்கம் தவறு செய்வதும் உண்டு' என்பதைச் சின்னையர் அறிய ஆரம்பித்தார்.

சின்னையர் இருந்த ஆசனத்துக்கு முன் ஆசனத்தில் ஓர் அழகிய இள மங்கை இருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் நாகரிக உடையணிந்த வாலிபன் ஒருவனும் அவனை அடுத்து முதியவள் ஒருத்தியும் இருந்தனர். வாலிபனின் உடை நாகரிகமாக இருந்ததே அல்லாமல் செயல் நாகரிகமாக இருக்கவில்லை. நித்திரையினால் விழுபவன் போல அந்தப் பெண்ணுக்கு மேல் விழுவதும் ஆங்கிலத்தில் 'சொறி' என்பதுமாக இருந்தான். சின்னையருக்கு இந்தச் செயல் சிறிதும் பிடிக்கவில்லை.

அந்த வாலிபனைப் பார்த்து' 'என்னமோனை நித்திரைக்குக் கூடக் குமரி கிழவி வித்தியாசம் தெரிகிறதே!' நானும் தான் பார்க்கிறேன் நீ பல முறை விழுந்தாய் ஆனால் கிழவி மீது ஒரு முறை கூட விழவில்லை' என்றார். வாலிபன் சின்னையரின் பேச்சைப் பொருட்படுத்தாது நித்திரை செய்பவன் போல் கண்ணை மூடிக் கொண்டான். சின்னையர் அவனை லேசில் விடவில்லை.

'தம்பி நீர் என்ன செய்கிறீர்' என்று கேட்டார்.

'நான் டாக்டருக்குப் படிக்கிறேன், என்றான்.

'பல்லுப் பிடுங்கிற டாக்குத்தரா?' என்றார் சின்னையர்.

'மிருக டாக்குத்தர்' என்றான் அவன்.

'நல்ல வேளை தம்பி நீ மனிஷருக்கு வைத்தியம் செய்தால் பெண்கள் பாடு தொல்லையாய் இருக்கும். மிருக வைத்தியம் செய்வது தான் நல்லது' என்றார்.

வாலிபன் இவருடைய பேச்சைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. காமவெறி 'நித்திரைவெறி, மது வெறி போன்ற பல வெறிகள் நடமாடும் இடம் ரயில் என்பதைச் சின்னையர் அறியலானார்.

தாம் நித்திரை கொண்டால் தம்மிடமிருக்கும் பணத்துக்கும் தமது சிறிய பெட்டிக்கும் தம்மோடு உள்ள உறவு அற்றுப் போம் என்பதை அறிந்த சின்னையர் தம் கைப்படச் சுற்றிய சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்தார். சுருட்டுக் கையில் இருக்கும் போது உறக்கம் தம்மை அணுகாது என்பது அவர் அனுபவ வாயிலாகக் கண்ட உண்மை.

பிரயாணம் செய்யும் போது மூக்குத் தூள், பாக்கு வெற்றிலை, நெருப்புப் பெட்டி போன்ற பொருட்களைப் பக்கத்தில் இருப்பவரிடம் இலவசமாக வாங்கிப் பயன் படுத்துவது எந்த வகையிலும் தன்மானத்துக்கு இழுக்காகாது என்பது பிரயாணிகள் சங்க முடிபு ஆதலின் சின்னையரிடம் தீப்பெட்டி இரவல் கேட்டார் ஒருவர். எதிலும் சிக்கனம் வாய்ந்த சின்னையர் தமது சுருட்டைக் கொடுத்து அதிலே மூட்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். ஒரு விதமாகக் காலை 5.30 மணிக்குக் கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்தை அடைந்தது சின்னையர் பிரயாணம் செய்த ரயில்,

(வளரும்)

# பல் சுவை

முசோலினி ஒரு தடவை யாரும் அறியா வண்ணம் சினிமா கொட்டகைக்குள் போனானாம். காட்சி முடிவில் முசோலினியின் படம் காட்டப்பட்டபோது மக்கள் முணுமுணுத்தபடி எழுந்து நின்றார்களாம். முசோலினி மாத்திரம் உட்கார்ந்திருந்தானாம். அந் நேரத்தில் பக்கத்திலிருந்தவர், 'எழுந்து நில்லப்பா நாங்கள் கூட உன்மாதிரி உட்கார்ந்திருக்கத்தான் நினைக்கிறோம். என்ன செய்வது? முசோலினியின் துப்பாக்கி மிரட்டுகிறதே எழுந்து நிற்கச் சொல்லி'— என்றாராம்.

★

பைரனின் கையெழுத்து அழகாயிருக்கமாட்டாதாம். பைரனும் தமது கையெழுத்தைத் திருத்திக் கொள்வதற்கு பெரிதும் முயன்றார். அந்த முயற்சியில் அவருக்குத் தோல்விதான் கிட்டியது. கையெழுத்து நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டே வந்ததாம்.

ஒரு நாள் அவர் அச்சகம் ஒன்றிற்கு அச்சிடுவதற்காக தமது கையெழுத்துப் பிரதியை அனுப்பி வைத்தார். அச்சக நிர்வாகியாலோ அச்சுக்கோப்பவராலோ அதனை ஒருவரி கூட படிக்க முடியவில்லை. எனவே கையெழுத்துப் பிரதி பைரனிடமே திரும்பி வந்தது திருத்தி எழுதி அனுப்பும்படி.

பைரனும் அதனைப் பிரித்துப் படிக்க முயன்றார் எழுதிய அவரால் கூட அதைப் படிக்க முடியவில்லை. அப்படியும் இப்படியும் வைத்துப் பார்த்தார். பக்கத்தில் பிடித்தும் தூரத்தில் பிடித்தும் படிக்க முயன்றார் அவருக்கே புரியவில்லை.

'இதை எழுதும் போது என்ன எழுதினேன் என்று எனக்கும் தெரியும் ஆண்டவனுக்கும் தெரியும். ஆனால் இப்பொழுதோ, அந்த ஆண்டவன் ஒருவனுக்குத்தான் தெரியும்' என்றார் பைரன்.

★

பாஸ்போர்ட் அலுவலகத்தில் ஹலிவூட் நடிகையொருத்தியின் விண்ணப்பத்தை அதிகாரி பூர்த்தி செய்து கொண்டிருந்தார். 'கல்யாணமானவரா?' என்று கேட்டபோது நடிகை அளித்த பதில்: 'சிற்சில வேளைகளில்'.

★

நெடு நாட்களாகத் தாடி வளர்த்துக் கொண்டிருந்தார் வில்சன். திடீரென்று ஒருநாள் அலுவலகத்திலிருந்து வரும் போது சலூனில் நுழைந்து தாடியை எடுத்து விட்டார். அவரை அறியாமலே அவருக்கு மகிழ்ச்சி.

வீடு திரும்பியவுடன் மகிழ்ச்சிப் பெருக்குடன் மனைவியை அள்ளி முத்தமிட்டார்.

'என்ன இன்று திடீரென்று உங்களுக்கு?'

'தாடியை எடுத்து விட்டேன். அதுதான்...ஆனந்தம்.'

மனைவி அப்போதுதான் அவனை உற்றுப் பார்த்தாள்.

'ஓ...நீங்களா?' என்றாள் அவள்.

★

இங்கிலாந்திலே நரிகளின் தொல்லை அதிகமாகி வருகிறதாம். காடுகளிலே வாழவேண்டிய குள்ள நரிகள் நகரங்களினுள்ளே புகுந்து அட்டகாசம் செய்கின்றனவாம். எனவே நரிகளை ஒழித்துக்கட்ட 'நரி வேட்டை சங்கம்' என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் 242 குட்டிச்சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. சென்ற ஆண்டு கிட்டதட்ட 5000நரிகளை தீர்த்துக் கட்டி விட்டனராம். எப்படி? வேட்டையாடியும் சுட்டும், கூண்டு வைத்துப் பிடித்தும் விஷமிட்டும் ஒழித்துக் கட்டினார்களாம். மேற்படி சங்கங்களில் 42000 உறுப்பினர்கள் இருக்கின்றனர் ஏறக்குறைய 2 கோடி ரூபா செலவு செய்தார்களாம் நரிவேட்டையில்.

★

'கண்ணிமைப் பொழுது, ஒருநொடிப் பொழுது என்கிறோம். இதில் கண்ணிமைப் பொழுதின் கால அளவு எவ்வளவு தெரியுமா? ஒரு விநாடியின் (செக்கன்ட்) மூன்றில் ஒரு பங்கு நேரத்தில் கண்ணிமைக்கிறோம். ஒரு மணிநேரத்தில் பதினாயிரம் தடவைக்கு மேல் கண்ணிமைக்கிறோம். மேற்படி கணக்கு 'ஷெபீல்ட்' நகர பல்கலைக் கழக பேராசிரியர் டாக்டர் காசன் ஆராய்ச்சி செய்து வெளியிட்டதாகும். அவையெல்லாம் சராசரியாக கணக்கிடப்பட்டவை

சிலர் குறைவாகவும் கண்ணிமைக்கின்றனராம். அதிக முறைகள் கண் இமைப்பவரும் உண்டு. குறுகிய கண்ணிமைப் பழக்கமுள்ளவர்கள் அநேகமாக விளையாட்டு வீரர்கள் தானாம். வேகமாக கண் இமைப்பவர்கள், மோட்டார் ரயில், விமானம் ஓட்டுபவர்களாக ஆக முடியாதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வி. முத்துசாமி,
பூண்டுலோயா.

கே: தொண்டமானின் காங்கிரஸ் கூட்டிக் கொடுத்ததே பத்து சதம்! ஆனால் 50 சதம் காங்கிரசுக்குச் சந்தா செக்ருேலில் பிடித்துக்கொள்ள தோட்ட முதலாளிகளுடன் ஒப்பந்தம் செய்திருக்கிறது. இது சரியா?

ப: அப்படியானுல் உங்களுக்கு 40 சதம் நஷ்டமா? பேஷ், நல்ல ஏற்பாடுதான்! சரியோ, சரியில்லையோ உங்களுக்கு பட்டை நாமம்தான்.

ஃ

கே. நவதாசன்,
நெடுங்கேணி.

கே: நைலோன் சேட்டுடனும் நல்ல மீசையுடனும் ஒரு காதலி வேண்டுமென்று தேடிக்கொண்டிருக்கின்ருனே என் நண்பன்?

ப: நைலோன் சேட்டுடன் கிடைத்தாலும், நல்ல மீசையுடன் காதலி கிடைப்பது சாத்தியமே இல்லை.

ஃ

மோ. ரொசாரியோ,
கொழும்பு-13.

கே: அகலவத்தை இடைத் தேர்தல் சமசமாஜிஸ்டுகளுக்கு என்ன பாடத்தை கற்பித்து இருக்கும்?

ப: இலங்கை—இந்திய மசோதாவும் மாவட்டசபை மசோதாவும் இடைத் தேர்தல் பிரசாரத்துக்குத் தகுதியற்றவை என்ற பாடத்தைக் கற்பித்து இருக்கும்.

கே: பண்டாரநாயக்கா காலத்துக்குப் பின் வாளாவிருந்த பிக்குகள், திரும்பவும் அரசியலில் கலக்கிருர்களே, இதன் முடிவு என்னுகும்?

ப: மதச்சார்புள்ள ஓர் அரசாங்கம் ஏற்பட ஏதுவாகும்.

கே: தோட்டத் தொழிலாளர் ஒன்றுபட்டு ஒரே கொடியின் கீழ் செயல்பட வாய்ப்பு இருக்கிறதா?

ப: இருக்கிறது சுயநலத் தலைவர்களைப் பிடித்து அந்தமானுக்கு நாடுகடத்தி விட்டால்.

ஃ

க. சு. பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை.

கே: த. க. யின் இலட்சியம் மிகவும் சிறந்ததென்று ஒரு காலத்தில் கூறிக்கொண்டிருந்த ஒரு செனட்டர் இப்போது பொன்னரின் வாலைப் பிடிப்பதேன்?

ப: யார் வாலையாவது பிடித்தாற்தான் அவரால் நிற்க முடியுமாம்.

கே: உலக அரங்கில் மீண்டும் யுத்த மேகங்கள் திரளுகின்றனவே காரணம் என்ன?

ப: உலகில் சனப் பெருக்கமும் யுத்தக் கருவிகளும் அதிகரித்ததுதான் காரணம்.

ஃ

தமிழ்ப்பிரியன்,
கண்டி.

கே: மாவட்டசபை என்ற கருவே இன்னும் உருவாகவில்லை என்பது போலல்லவா இருக்கிறது பிரதமரின் பத்திரிகை நிருபர் மகாநாடு? இந் நிலையில் இக்கூட்டத் தொடர் முடியுமுன் பிள்ளை பிறக்குமா?

ப: மாவட்ட சபைக்கான திட்டம்பற்றி விவாதித்திருப்பதாகப் பிரதமர் கூறுகிருரல்லவா? அந்தத் திட்டந்தான் கரு—எனவே கரு ஏற்கனவே உருவாகி விட்டது. ஆனால் பிள்ளை பிறக்க 10 மாதங்கள் வேண்டாயா? ஆகவே அடுத்த கூட்டத் தொடரிற் தான் பிள்ளை பிறக்கும். கரு உருவாகி விட்டதால் பிள்ளை பிறக்கும் வரை பொறுத்திருப்பதுதானே புத்திசாலித்தனம். இப்பொழுதே பிள்ளை பிறக்க வேண்டுமென்ருல் அது குறைப் பிரசவமாக முடிந்து விடுமே!

கே: தமிழரசுக் கட்சி தேசிய அரசிலிருந்து நீங்குவதற்கு தடையாயிருப்பது எது?

ப: நீங்குவதற்கான காரணம் ஒன்று இல்லாதிருப்பது.

ஃ

பி. அரிச்சந்திரன்,
புசல்லாவ.

கே: ஒரு சிங்கள மாணவி என்னைக் கண்டதும் பல்லைக் காட்டுகிருள். என்ன செய்யலாம்?

ப: அவளின் பல்லைத் தட்டி விடாதீர்! ஏனெனில் இப்பொழுதுதான் அவள் பல் கட்டிக்கொண்டிருக்கிருள் அதுதான் உங்களுக்குப் பல்லைக் காட்டுகிருள்.

ஃ

ஆர். இருஷ்ணசாமி,
இறம்பொடை.

கே: கற்ற கவிமணிகள் கண்ணீர் விடுவானேன்? விற்ற வியாபாரி விமானம் விடுவானேன்?

ப: கற்பதில் கையிலிருந்ததைக் கரைத்துவிட்டதால் கண்ணீர் விடுகிருன். 'விற்றதில் ஆயிரமாயிரமாகக் கிடைத்திருப்பதால் வியாபாரி விமானம் விடுகிருன்.

ஃ

க. வே. பா. சந்தர்,
வீமன்காமம்,
தெல்லிப்பளை.

கே: த. அ. கட்சியின் வருங்கால திட்டங்களை கூறுவீர்களா?

ப: இந்நாட்டில் ஒரு சமஷ்டி ஆட்சியை அமைப்பதே கட்சியின் எதிர்காலத் திட்டம்.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> 194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
> கொழும்பு-12

கே: மாவட்டசபை மசோதா கடைசி அடுத்த பாராளுமன்றக் கூட்டத் தொடரின் போதாவது கொண்டுவரப்படுமா?

ப: நிச்சயமாக கொண்டு வரப்படும் இதில் சந்தேகமே வேண்டாம்.

ஃ

வே. யோகானந்தம்,
மன்னிங்பட்டனம்.

கே: மரித்த ஒரு பிராணியின் இதயம் பேயுருவம் கொள்கின்றது, எனச் சென்ற வாரம் நீர் கொழும்பு அன்பரின் ஒரு கேள்விக்குப் பதிலளித்திருந்தீர். இதனை விளக்கவும். 'பேய்என்று ஒன்றுமில்லை, மனிதனின் பயம் தான் அப்படி நினைப்பது' என நான் கூறுகின்றேன்?

ப: உங்களின் கருத்துதவறு. ஒவ்வொரு பிராணிக்கும் உள்ளுருவம் ஒன்று உண்டு. அது அந்தப் பிராணியின் உருவத்தில் ஆனால் பளுவின்றி இருக்கும். இந்த உருவத்தை ஆத்மா, உயிர் இதயம் என்றெல்லாம் விஞ்ஞானிகள் கூறுவர். மரிப்பதென்பது அந்த உள்ளுருவம் வெளியேறுவது தான். அந்தப் பிராணி பாபச் செயல்களில் ஈடுபட்டிருந்திருக்குமாயின் அதன் விளைவாக உள்ளுருவம் கறுப்பு நிறமாக மாறி பயங்கரமான முறையில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும். அதைப் பேய் என்று சிலர் கூறுவர். புண்ணிய கருமங்களில் ஈடுபட்ட பிராணியாயின் உள்ளுருவம் வெண்மை நிறம் பெற்று வானவெளிக்குச் சென்று மற்றொரு பிராணிக்குள் நுழையும்வரை அங்கே சஞ்சரிக்கும்.

ஃ

ஆர். கே. திருகோணசுந்தரம்,
புதுவட்டகொடை.

கே: வடக்கு கிழக்கு மாகாணங்களில்மாவட்டசபைகள் நிறுவப்பட்டால், அனைத்தும் தமிழிலேயே நடைபெறும், ஏனைய மாகாணங்களில் தனிச் சிங்களத் [illegible] படியால் அம்மாகாணங்களிலுள்ள தமிழர்களின் நிலையென்ன?

ப: அதற்காகத்தான் தமிழ் மொழி விசேட விதிகள் இயற்றப்பட்டுள்ளன. அதன் மூலம் இதர மாகாணங்களில் நியாயமான தமிழ் உபயோகத்துக்கு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

கே: இலங்கையில் நடந்து முடிந்த இடைத் தேர்தல்கள் அனைத்திலும் எதிர்க் கட்சிகளே வெற்றி யீட்டியுள்ளன. இது எதை காட்டுகிறது?

ப: 'எலெக்ஷன் பெட்டிசன்' மூலம் எதிர்க்கட்சி ஆசனங்களைப் பறித்துவிடலாம் என்று எண்ணுவது தவறு என்பதைக் காட்டுகிறது.

கே: பிரிட்டன் பொது சந்தையில் சேருவதால், இலங்கைக்கு ஆபத்து ஏற்படுவது உண்மையா?

ப: இலங்கைக்கு என்ன? பிரிட்டனிலேயே வாழ்க்கைத் தரம் குறைய ஏதுவாகும்.

கே: இலங்கை ஒரு மாபெரும் விவசாய நாடாகவிருந்தும், பொருளாதார துறையில் பின் நிற்பதின் காரணம் என்ன?

ப: விவசாய நாடாக இருப்பதுதான் பின் நிற்கக் காரணம். நாட்டில்தொழில்வளர்ச்சியின்றேல் பொருளாதாரத் துறையில் நாடு முன்னேறமுடியாது.

ஃ

தி. உ. கோடீஸ்வரர்,
கொல்லங்கலட்டி.

கே: மாவட்டசபை மசோதாவை எதிர்க்கட்சியுடன் சேர்ந்து பொ. கட்சி எதிர்த்து வாக்களிக்கப் போகிறதாமே?

ப: எதிர்க்கட்சியுடன் இரகசிய ஒப்பந்தமோ?

கே: ஓய் குயுக்தியாரே, உமது புகைப்படத்தை சுதந்திரனில் பிரசுரிப்பீரா?

ப: அது புகைந்துபோய்விட்டதே! எப்படிப் பிரசுரிக்க முடியும்?

ஃ

பிரணவநாதன்,
பதுளை.

கே: கையில் காணப்படும்மேடுகளை கணக்கிடுவது எப்படி?

ப: பள்ளங்களைக் கணக்கிடுங்கள் மேடுகளின் எண்ணிக்கையைக் கண்டுபிடித்துவிடலாம்.



### பேயும் இரங்கும்!

எதிர்க் கட்சித் தலைவரின் காரியாலயத்துக்கு தேசிய அரசாங்கம் சென்ற ஆண்டு அதிகம் செலவழித்துள்ளது.

— செய்தி

— பெண் என்ருல் பேயும் இரங்கும் போது தேசிய அரசாங்கம் இரங்குவதில் என்ன ஆச்சரியம்?

### ஆத்மதிருப்தி

காங்கிரசையே தி. மு. க. பின்பற்றுகிறது.

— திரு. பக்தவத்சலம்

— அப்படியாவது சொல்லி 'ஆத்ம' திருப்தியடையட்டுமே என்கிருர் ஒரு தமிழ்நாட்டு தி. மு. க. தோழர்.

### காரணம் என்ன?

அங்கொடை ஆஸ்பத்திரியில் இவ்வாண்டு மனநோயாளர் தொகை அதிகரித்துள்ளது.

— செய்தி

— காரணம் அரசியல்வாதிகளின் தொகை அதிகரித்திருப்பதுதான்.

### அவர் கவலை!

ஆண்டு துவைக்க முடியாத ஆடையொன்று மேற்கு ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டது.

— செய்தி

— அந்த ஆடை இலங்கையில் விற்பனைக்கு கிடைக்கு முன்பே உலக யுத்தம் மூண்டுவிடும் போலிருக்கிறதே என்று அஞ்சுகிருர் 80 வயதுப் பெரியவர் ஒருவர்.

### பிரச்சினை தீரலாம்

நாடற்ருேர் பிரச்சினை பற்றி அரசாங்கம் நூல் வெளியிடும்.


— செய்தி

— இந்த நூல் வெளிவருமுன்பு நாடற்ருேர் பிரச்சினையே தீர்ந்து விடலாம் என்று கிண்டல் செய்கிருர் ஒரு அரசாங்கக்கட்சி எம். பி.

அதிக பஸ்கள் ஓடியும் இ. போ. ச. வுக்கு வருமானம் குறைந்தது.

— செய்தி

இதில் போனுல் சங்கடம் என்று மக்கள் கருதியதும் ஒரு காரணமாக இருக்கலாம்.




உங்கள் கட்டிடத் தேவைகளுக்கு ஸ்லொட்டெட் ஆங்கிளும் ஷெல்வும் வேண்டுமென்று கேட்கும் போதெல்லாம் நீங்கள் சரியான காரியத்தையே செய்கிறீர்கள்.

ANTON

அன்டன்

ஸ்லொட்டெட் ஆங்கிளையும் ஷெல்வையும் துரிதமாகப் பொருத்தலாம். துளைக்கவோ, இணைக்கவோ, வர்ணம் பூசவோ வேண்டியதில்லை.

சிக்கனமானது — கூலிச் செலவு அதிகமிராது. நிர்மாணிப்பதற்கு அதிக நேரம் பிடிக்காது. முழுமையாக மறுபடியும் உபயோகிக்கக் கூடியது.



உறுதிமிக்க கட்டுமானங்களை உருவாக்குகிறது. துளைகளும் துவாரங்களும் விஞ்ஞான முறைப்படி இடம் பார்த்து அமைக்கப்பட்டுள்ளமையால் பொருத்துகளிலும் மூலைகளிலும் அதிகமான சுரை ஆணிகளை இணைக்க இடமளிக்கிறது; கூடுதலான வலிமை கொடுக்கிறது; பொருத்துகள் ஒன்றுக்கு மேல் ஒன்ருக அமைவது மிகவும் குறைகிறது.

மேல் விபரங்களுக்கு இன்றே எழுதுங்கள்

விநியோகஸ்தர்கள்:

சென்ற் அந்தனிஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ், லிமிட்டெட்., 5[illegible], ஸ்ரீன்ஸ் ரோட்டு தெரு, கொழும்பு 10

ஹன்டர் அன்ட் கம்பனி லிமிட்டெட், 130, பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.

உற்பத்தியாளர்கள்:

சென்ற் அந்தனிஸ் இன்டஸ்ட்ரீஸ் (குழு)
752/1, பேஸ்லைன் ரோட்டு, கொழும்பு 9.
தொலைபேசி - 92161 - 92162

GRANT 231

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநலத் தலைவர்களுக்குச் சூடு

'மலைநாட்டுத் தமிழர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேறினால் அவர்களை கள்ளத்தோணிகளென பிடித்துக்கொடுத்துவிடுவார்கள்' வடக்கு கிழக்கில் சுவாத்தியம் ஒத்துவராது. எனவே மலையகத்து தமிழர்களுக்கு பாதுகாப்பான இடம் மலைநாடுதான், மலைநாட்டில்தான் அவர்கள் மான, மரியாதையுடன் வாழ முடியும் மந்திரி திருச்செல்வத்தின் அழைப்பு அர்த்தமற்றது. தீர்க்கதரிசனமற்றது என்று சிலர் பத்திரிகைகளில் அறிக்கைகள் விட்டிருப்பது ஒருபுறம் விந்தையாகவும் வேடிக்கையாகவும் இருப்பதோடு வேதனையாயுமிருக்கிறது.

மலையகத்தமிழர்கள் வடக்கு கிழக்கில் குடியேறுவதை அவர்கள் கடுமையாக எதிர்ப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள்தான் அரத்தமற்றதாகவும் திர்கதரிசனமற்றதாகவும் இருக்கின்றது.

'எனக்கென்றுஒன்றும்வேண்டாம். எம் இனத்தாருக்கு தமக்கென்று சொல்லிக்கொள்ள ஒரு நாடு வேண்டும். அந்த நாடுதான் மலைநாடு. அதை விட்டு வடக்கே குடியேற விடமாட்டோம்! என்று கூறியிருந்தால் அவர்களின்

**மலை மொழியாள்**

இனப்பற்றை பாராட்டியிருக்கலாம். 'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானினும் நனி சிறந்தவை' என கூறியிருந்ததால் அவர்களின் நாட்டுப் பற்றைப் போற்றியிருக்கலாம். 'மலைநாட்டைவிட்டு வடக்கே குடியேறினால் சிங்கள வகுப்பு வாதிகளிடம் மலைநாடு பறிபோய்விடும். வடக்கு கிழக்கு எப்படி உங்களுக்கு தாய்நாடோ அதுபோல் எமக்கு மலைநாடுதான் தாய் நாடு, தமிழ் நாடு. அதை எந்த ஒரு தமிழனும் சிங்களவனுக்கு பயந்து விட்டோடி விடமாட்டான். இப்படி சுட்டிக்காட்டியிருந்தால் அவர்களின் வீரத்தையும் விவேகத்தையும் கண்டிருக்கலாம்.

தமிழ் பேசும் இனத்தின் விடுதலை போராட்டத்திற்கு பொருளாதாரம் அவசியம் அப் பொருளாதாரத்திற்கு மாத்திரமல்லாது இந் நாட்டின் பொருளாதாரத்திற்கே அச்சுப் போன்ற மலைநாட்டை விட்டு வெளியேறேம் என கூறியிருந்தால் அவர்களை பொருளாதார மேதைகள் என கூறலாம்.

திருவாளர் தொண்டமான் அவர்களோ திரு. ஜேசுதாசன் அவர்களோ இப்படி கூறவில்லை.

வடக்கே சென்றால் கள்ளத்தோணிகளென பிடித்துக்கொள்வார்கள். சுவாத்தியமும் ஒத்துக்கொள்ளாது. ஆனால் அந்தமான் தீவிற்கோ அல்லது பிஜித்தீவுக்கோ, அல்லது அசாம் தீவுக்கோ சென்றால் சுவாத்தியம் ஒத்துக்கொள்ளுமா? என்பதற்கு திர்க்கதரிசனமுள்ள இவர்கள் கூறுவார்களா?

காலை 7மணிக்கு மலைக்குச் சென்று மாலை 6மணிக்கு வீடு திரும்பினால் கிடைப்பது ரூபா 2.50 சதம். அதுவும் அரைப்பேர் போடாமல், வீட்டுக்கு விரட்டாமல் இருந்தால் அதுவும் கிடைக்கும். அதிலும் பெண்களுக்கு அதிலும் குறைவு. இதுதான் மலைநாட்டுத் தமிழரின் வருமானம். இருப்பிடமோ, பத்தடி நீளமும் எட்டடி அகலமும் கொண்ட கொட்டிலைப் போன்ற வீடுகள் வெளிச்சமற்ற, நல்ல காற்று அற்ற இடம். இந்த இடத்தில்தான் அவரவர் சம்பந்தப் பட்ட கல்யாணமும், சடங்குகளும், சாவுகளும். இறப்புகளும், பிறப்புகளும் மலைநாட்டுத் தொழிலாளர்களின் கண்ணை சரித்திரத்தில் கூர்ந்துபார்த்தால் அவர்களது சரித்திரமே இக் காம்பாராக்குள்ளாதன்.

அதை ஓரளவு மலைநாட்டுத் தலைவர்களைவிட நன்கறிந்தவர் மந்திரி திரு.திருச்செல்வம் என்பதை தெளிவு படுத்துகிறார்கள் கடமைக்கு அறிக்கை விடும் அப்பாவி காங்கிரஸ்காரர்கள். இவர்கள் கூறும் காரணத்தை எந்த ஒரு மலைநாட்டுத் தமிழனும் மதிக்கமாட்டான் என்பது அவர்கள்

## அந்தமானில் குடியேறலாம்
## ஆனால் தமிழ்பகுதி வேண்டாமாம்

அறிக்கையிலிருந்து தெரிகிறது.

அறிக்கையிலே முழுகிப் போன பிரச்சனைகள் எத்தனை எத்தனை. காங்கிரஸ் மலைநாட்டைப் பொறுத்தவரையில் ஓர் அறிக்கை விடும் தொழிற் சங்கம் மாத்திரம்தான் என்பதை உணர்ந்துவிட்டனர் மலைமக்கள். ஒரு ரூபா ரேட்டு, முதல் உருப்படியான வீடுகள் தொழிலாளர்களுக்கு கட்டிகொடுப்பது வரை இ. தொ. காங்கிரஸ் அறிக்கையிலே முடித்துவிட்டது என்றால் மிகையாகாது.

மந்திரி அறிச்கைவிட்டதில் தவறு காணும் காங்கிரஸார் இன்றுவரை மலையகத்தில் படித்து வேலையற்றிருக்கும் வாலிபர்களுக்கு எங்கெங்கு வேலை வாய்ப்பு தேடி கொடுத்துள்ளார்கள். ஆசிரிய வேலைகள் பெற்றுக் கொடுக்கப்படும் படித்த மலைநாட்டு வாலிபர்களுக்கு என்று அறிக்கைக்குமேல் அறிக்கை வந்ததே பெற்றுக்கொண்டவர் எத்தனைபேர்!. கூறுவார்களா பெற்றுக்கொடுத்த காங்கிரஸார்தான் கூறுவார்களா?

அட்டன் பொகவந்தலாவ, தலவாக்கொல்லை பகுதி காங்கிரசாரின் கோட்டை என்று கூறிக்கொள்ளும் கங்கிரசாரே அப்பகுதி படித்தவாலிபர்களுக்கு செய்த சேவை என்ன? ஒன்றுமில்லை. தாய் தந்தையரின் உழைப்பிலே படித்துவிட்டு இன்றும் தொழில் ஏதும் கிடைக்காமல் அவர்கள் மேலும் மேலும் தங்களது தாய் தந்தையருக்குச் சுமையாக இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வு எப்போதும் கானல் நீராகத்தான் இருக்க வேண்டுமா?

மலையகத்தில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் வாலிபர்கள் வடக்கு கிழக்கில் குடியேறி தங்களையும் தங்கள் நாட்டையும் வாழ வைக்க பயிர் செய்கையில் ஈடுபடுங்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறியதில் என்ன தவறு இருக்கின்றது.

அந்தமானிலே செங்குருதி சிந்தி காடழிக்க வாருங்கள் என்று நேசகரம் நீட்டி மலையகத்தாரை அழைக்கும் காங்கிரஸார் இந்த நாட்டிலே பண்பால், கலையால், கலாச்சாரத்தால் ஒன்று பட்ட மக்களோடு மக்களாய், எட்டடி காம்பராவுக்குள் இருந்து அழுதழுது நாளெல்லாம் கஷ்டப்படும் இழிநிலை மாற வேண்டும். இந்த நாட்டில் தமிழர்கள் அனைவரும் ஓர் தாய் மக்கள் போல் வாழ வேண்டும் என்றால் நாம் வடக்கு கிழக்கு மக்களுடன் உறவாடி எமது நல்ல தன்மையை நடத்தையை அவர்களுக்கு உணர்த்தல் வேண்டும். அவர்களது நல்ல தன்மைகளையும் அறிந்து நாம் எல்லாரும் ஒரு தாய் பெற்ற பிள்ளைகளாய் வாழ வேண்டும் என்று அமைச்சர் சொல்வது காங்கிரஸ்காரர்களுக்கு பிற்போக்கு தனமாக தெரிகிறது.

ஆனால் ஒரு ரூபாய் ரேட்டு பெற்றுதருவோம் என கூறிக்கொண்டே 17.50 போராட்டத்தை முறியடித்து தற்சமயம் ஒரு ரூபாய்க்கு பதிலாக பத்துசத பிச்சைக்காசை பெற்று கொடுத்து தங்கள் நலத்தை காப்பாற்றிக்கொண்டது. இது பிற்போக்குதனமில்லையா என்று கேட்க விரும்புகிறார்கள் மலையக மக்கள்.

இப்படியே கூறிக்கொண்டு போனால் எண்ணற்றவைகளை கூறமுடியும். ஆனால் நல்லது எது என்பதை யார் சொன்னாலும் செய்தாலும் அதற்கு ஆதரவு தரவேண்டுமே தவிர தான் தனது என்பதை காப்பாற்றிக்கொள்ள சொல்வதற்கெல்லாம் அறிக்கை விடுவதனால் மலையக தொழிலாளி எல்லாத்தையும் நம்பி விடுவான் என்பதை கொண்டல்ல, மலைநாட்டு மக்களுக்கு தான் ஏகபோக தலைவன் என்று காட்டிக்கொள்ள என்று தோன்றுகிறது. அதை விடுத்து மலையகத்தின் அவல நிலை மாற ஆவன செய்வதற்கு வருமாறு அகில இலங்கைத் தலைவர்களையும் மலைநாட்டார் அன்புக்கரம் நீட்டி அழைக்கிறார்கள்.

**மக்கள் குரல்**

# மாவட்ட சபையை எதிர்ப்பவருக்கு பதில்

ஈழம் வாழ் தமிழ்ப் பேசுமினத்தின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக மாவட்டசபை மசோதா உருவாகும் இவ்வேளையில், அதனைத் தகர்த்தெறிந்து தமிழனைக் குழிதோண்டிப்புதைக்கும் அரும்பணியில் தமிழனே ஈடுபட்டிருப்பது பெரும் விசித்திரமாகவும், அதே சமயம் துரோகத்தின் எல்லைக் கோடாகவும் விளங்குகிறது.

மாவட்ட சபையை எதிர்ப்பதாகக் கூறும் திரு. பொன்னம்பலம் காட்டும் காரணங்கள் கேலிக் குரியதாகவும், அரசியற்துறையில் சிறு பிள்ளைத்தனமாகவும், அமைந்துள்ளது.

இம்மசோதா நிறைவேற்றப் பட்டால் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தமிழர் நடமாட முடியாத சூழ் நிலையை ஏற்படுத்தி விடும் என்று கூறும் அவர் சற்று நேரம் அருகிலுள்ள இந்திய அரசியலமைப்பை உற்றுப் பார்க்கட்டும்.

மொழிவாரி மாவட்டங்களாகப் பிரிந்து, சமஷ்டியமைப்பில் ஆட்சி நடத்தும் இந்தியா ஒரே ராஜ்யமாகத்தான் இருந்து வருகிறது. ஆட்சியை இலகுவாக்கும் பொருட்டு, பல்வேறு மக்களையும் திருப்திப் [illegible] ணப்பிரிவுகளை ஏற்படுத்தி, பொதுவில் ஒரு மத்திய அரசையும் நிறுவி பரிபாலனம் நடத்தும் பாரதத்தில் ஒரு மாகாணத்தில் உள்ளவர்கள் மற்றோர் மாகாணத்தில் வசிக்க, தொழில் தேட, நடமாட, முடியாத சூழ் நிலை இருப்பதாகத் திரு. பொன்னம்பலம் அவர்களால் நிரூபிக்க முடியுமா?

உதாரணமாக தமிழ் நாடு ஒரு தனி மொழிவாரி மாகாணமாக இருந்தும், தமிழகத்தைச் சேர்ந்த ஏராளமானோர் கன்னடம், ஆந்திரம், மைசூர், பம்பாய், டில்லி, கல்கத்தா போன்ற இடங்களில் அரசாங்க உத்தியோகம் உட்பட பல்வேறு தொழில் துறைகளிலும் தாராளமாகவே ஈடுபட்டுள்ளனர் என்ற சிறு விடயம் கூட அவர் அறியாததல்ல.

இதே போன்று இந்தியாவின் ஏனைய மாகாணங்களில் உள்ள பலரும் தமிழ் நாட்டில் குடிபுகுந்து, தொழில் நடத்துகின்றனர் என்ற விடயமும் திரு. பொன்னம்பலம் உணராததல்ல. எந்த நாடும் அது ஒரே நாடாக இருக்கும்வரைக்கும், அந்த நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் உரிமையோடு நடமாட, தொழில் தேட ஒவ்வொரு பிரசைக்கும் சுதந்திரமுண்டு. இது தெரியாதா திரு. பொன்னம்பலத்திற்கு.

இலங்கையில் மாவட்டசபை நிறுவப்பட்ட பின்னரும் இதே நிலைமைதான் இருக்குமேயொழிய திரு. பொன்னம்பலம் கூறுகிறபடி, ஏனைய ஏழு மாகாணங்களில் வாழும் தமிழர்களும் கிழக்கில் வாழும்சிங்களவர்களும் தத்தம் பிரதேசத்தை நோக்கி விரட்டப்படமாட்டார்கள்.

துரதிர்ஷ்டவசமாக அப்படித்தான் ஒரு நிலைமை ஏற்பட்டாலும், அது பிரிவினைக்குத்தான் வித்திடும். அதற்குரிய முழுப் பொறுப்புக்களையும்சிங்களத்தலைவர்கள்தான் ஏற்க வேண்டி வருமே தவிர தமிழர்கள் அதற்குப்பொறுப்பாகமாட்டார்கள். அப்படி ஒரு சூழ் நிலை ஏற்பட்டு அதற்குத் தன்னைப்பலியாக்க எந்த சிங்களப் பெருமகனும் விரும்பமாட்டான்.

1958ம் ஆண்டு நடைபெற்ற வகுப்புக் கலவரத்தின் போது, தமிழருக்கென ஒரு தாயகம், சொந்த நிலம் இருந்தபடியினால் தான் உயிரோடாவது தப்ப முடிந்தது. தற்போதைய ஆட்சியமைப்பில் இப்பிரதேசங்களும் பறி [illegible]

இத்தகைய ஒரு நிலையை மாற்றியமைக்க வேண்டுமானால் அது பிராந்திய சுயாட்சி முறையால் மட்டுமேதான் முடியும். வேறு எந்தப்பரிகாரமும் ஒன்றுக்கு மேற்பட்ட இனமக்கள் வாழும் நாட்டுக்குப்பொருந்தவே பொருந்தாது.

திரு. பொன்னம்பலம் கூறுகிறபடி, 'வட, கீழ் மட்டுமல்லாது இலங்கை முழுவதிலுமே தமிழன் சம அந்தஸ்துடன் வாழவேண்டும்' என்று நினைத்துக்கொண்டிருந்தால் ஈற்றில் கைவசம் உள்ள பிரதேசங்களையும் இழந்து, நாடற்ற நிலைமைக்கு நாம்தள்ளப்படவேண்டிய நிலைதான் ஏற்படும். இரண்டிற்கும் காரணகர்த்தா திரு. பொன்னம்பலம் தான் என்ற புகழும் சரித்திரத்தில் 'பொன்னெழுத்தில்' பொறிக்கப்படலாம்.

இதனைத்தான் திரு. பொன்னம்பலம் விரும்புகிறாரா? நாடு முழுவதிலும் தமிழுக்கு சம அந்தஸ்து என்றகொள்கை பேச்சளவில் நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் சாத்தியமாகுமா? என்பதுதான் கேள்வி.

நூற்றுக்கு நூறு வீதம் தமிழர்கள் வாழும் வட, கிழக்குப் பிரதேசங்களிலேயே, தமிழை ஒழித்துக் கட்டவேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கும் சிங்கள வெறியர்களிடம் இருந்து சம அந்தஸ்து பெறலாம். என்று நினைப்பதை விட பைத்தியக் காரத்தனம் வேறொன்றுமில்லை.

முதலில் நமது சொந்தப் பிரதேசங்களை அடிமைப்படுத்தும் அபாய சக்திகளைக் களைந்தெறிந்து விட்டு அதனை நிச்சயமாக நமதாக்கி பின்பு, வேண்டுமானால் சம அந்தஸ்தைப் பற்றிப் பேசுவது விவேகமும், பொருத்தமானதாகவும் இருக்கும். இவற்றையெல்லாம் திரு. பொன்னம்பலம் உணராமலில்லை. இருந்தும்குட்டையைக்குழப்புகிறார். காரணம்? நல்ல இடங்களையெல்லாம் தமிழரசுக் கட்சி தனதாக்கிக் கொண்டதே என்ற பொறாமையும், பொச்சரிப்பும்தான்!

இறுதியாகக் கூறுமிடத்து, தந்தை செல்வநாயகத்தைப் பார்க்கிலும், தமிழர்களின் வாழ்வை அரசியல் அரங்கில் ஒளிரச் செய்யக்கூடிய பல வாய்ப்புக்கள் பொன்னம்பலத்துக்கு இருந்தும் பதவி ஆசையால் உந்தப்பட்டு முதலில் இந்திய வம்சாவழியினரான தமிழர்களையும் பொறுமைக்கு உட்பட்டு

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போப்துரையின் முகத்திலும் தலையிலும் பதினேழு காயங்கள்

உயர் நீதி மன்றத்தில் நீதியரசர் சூட்ஸ் அவர்களின் முன்னிலையில் போப் கொலைவழக்கு தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டது.

பிரபல நியாயதுரந்தரர் திரு. ஆர். எல். பெரேரா கே. ஸி., திரு. ஜே. ஆர். ஜயவர்தன (தற்போதைய ராஜாங்க அமைச்சர்), திரு. பி. எச். டபிள்யூ. டி. சில்வா (முன்னாள் அமைச்சர்), திரு. ஆர். என். இலங்ககோன், திரு. பி ஜி. எஸ். டேவிட், திரு. எச். டபிள்யூ. ஜயவர்த்தன (இப்பொழுது கியூ. ஸி.) ஆகியோர் எதிரிகளின் சார்பில் ஆஜராகியிருந்தனர்.

அட்டோர்னி ஜெனரல் திரு. ஈ. ஜி. பி. ஜயதிலக்கா கே. ஸி வழக்கு விபரத்தை எடுத்துரைத்தார்.

பின்னர் அவர் ஜூரிமார்களைப் பார்த்துக் கூறினர்:—

"கனவான்களே, நான் இப்பொழுது சாட்சிகளை அழைக்கிறேன். அவர்கள் கூறும் சாட்சியங்களைக் கொண்டு குற்றச்சாட்டுக்கு எதிரிகள் குற்றவாளிகளா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்வேன்,"

டிசம்பர் 3ம் திகதி தொடர்ந்து விசாரணை ஆரம்பமானதும், புஸெல்லாவ மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஸ்டீபன் டி. சில்வா சாட்சி கூண்டுக்கு அழைக்கப்பட்டார். அரசாங்கத்தரப்பு வழக்கறிஞர் திரு கிரொஸெப் தம்பையா அவரைக் குறுக்கு விசாரணை செய்தார்.

டாக்டர் ஸ்டீபன் டி. சில்வா தமது சாட்சியத்தில் கூறியதாவது;

### டாக்டர் வருமுன்பே......

'ஸ்டெலன்பர்க் தோட்டத்துக்கு வரும்படி 1941 மே 10ந் திகதி நடுநிசியில் 12-30 மணிக்கு ஒரு டெலிபோன் செய்தி எனக்குக் கிடைத்தது. நான் அங்கே சென்றேன்.

நான் தோட்டத்தை அடையும் போது அதிகாலை 2 மணியாகிவிட்டது. நான் முதலில் துரையின் பங்களாவுக்குச் சென்றேன். போப் துரையின் சடலம் ஓர் அறையில் இருந்தது. ஏற்கனவே அவரது உயிர் பிரிந்து விட்டது. ஆனால் அப்பொழுது உடலில் சூடு இருந்தது. நான் அங்கு செல்ல சில நிமிடங்களுக்கு முன்பு தான் அவர் இறந்திருக்கக் கூடும். அதாவது 2 மணியாக சில நிமிடங்களுக்கு முன்பு.

அதே பங்களாவில் காலை 9-30 மணிக்கு நான் பிரேத பரிசோதனை செய்தேன்.

டெல்டா தோட்டத்தின் டிஸ்பென்சர் ஜோசப் பெரேராவும், ஸ்டெலன்பர்க் தோட்டக் குமாஸ்தா எஸ். வேலுப்பிள்ளையும் பிரேதத்தை அடையாளம் கண்டனர்.

இறந்தவரின் உயரம் 5 அடி 8 அங்குலம். வயது ஏறத்தாழ 45 இருக்கும். நல்ல உடற்கட்டுள்ளவராகத் தெரிந்தார்.

### உடலில் 29 காயங்கள்

உடலில் 29 காயங்கள் காணப்பட்டன. மண்டை 3 இடங்களில் உடைந்திருந்தது. அதிர்ச்சியாலும் இரத்தம் வெளியேறியதாலும் மரணம் சம்பவித்தது. முகத்திலும் தலையிலும் 17 காயங்களிருந்தன.

காயங்களின் எண்ணிக்கையை விட அதிகமான அடிகள் அவர் மீது விழுந்திருக்கலாம். மொட்டையான ஆயுதங்கள் தாக்குதலுக்கு உபயோகப் படுத்தப்பட்டிருக்கலாம் இறந்தவர் கையை உயர்த்தி தாக்குதலை எதிர்த்திருக்கிறார் என்பதை இரு காயங்கள் எடுத்துக் காட்டின.

கோர்ட்டாரின் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், இக் காயங்களை ஒன்றுகச் சேர்த்து பார்த்தால் மரணம் தவிர்க்க முடியாது என்று டாக்டர் ஸ்டீபன் டி. சில்வா கூறினர்.

எதிரிகளின் வழக்கறிஞரான திரு. ஆர். எல். பெரேரா கே. ஸி. பின்னர் டாக்டரைக் குறுக்கு விசாரணை செய்தார்.

அவரது கேள்விகளுக்குப்பதிலளிக்கும் போது சாட்சி கூறியதாவது:

### எதிரிகள் சோதனை

'2வது எதிரியான வேலாயுதத்தையும், 5 வது எதிரியான சின்ன முனியாண்டியையும் 6வது எதிரியான மாரிமுத்து வேலாயுதத்தையும் மே 22 ந் திகதி கம்பளை கோர்ட் கட்டிடத்தில் வைத்துப் பரிசோதனை செய்தேன்.

தன்னை ஒரு போலிஸ் கன்ஸ்டபிள் அடித்ததாக வேலாயுதம் என்னிடம் கூறினர். அவர் உடலில் காயம்பட்ட அடையாளம் எதுவும் இருக்கவில்லை. ஒரு போலிஸ் இன்ஸ்பெக்டர் தன்னைத் தாக்கியதாக சின்ன முனியாண்டி புகார் செய்தார். ஒரு உராய்ந்த புண்ணின் தழும்பு தவிர வேறு காயங்கள் அவரது உடலில் காணப்படவில்லை.

பின்னர், கண்டி சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வி. துரைசாமி சாட்சியமளித்தார்.

### தலைமுற்பகுதி சவரம்

முதலாவது எதிரியை (வீராசாமி) மே 12 ந் திகதி நான் பரிசோதனை செய்தேன். அவரது இடது முழங்கையில் 2 அல்லது 3 தினங்களுக்கு முன்பு ஏற்பட்ட ஒரு காயம் இருந்தது.

### எதிரிகள்

(1) வீராசாமி

(2) வேலாயுதன்

(3) ஐயன் பெருமாள்

(4) ரெங்கசாமி

(5) சின்ன முனியாண்டி

(6) மாரிமுத்து வேலாயுதன்

அவர் தனது சாட்சியத்தில் கூறியதாவது:

'நான் ஸ்டெலன்பர்க தோட்டத்தில் டீ மேக்கராக் இருக்கிறேன். கடந்த சுமார் மூன்றரை வருடங்களாக இத் தோட்டத்தில் வசிக்கிறேன். திரு. போப் இந்தத் தோட்டத்தில் சுமார் 3 வருடங்களாக சுப்பிரன்டன்டாக இருந்தார்.

நான் காரை நிறுத்தினேன். துரையின் அனுமதியின்றி எந்தக் காரையும் தொழிற்சாலையைக் கடந்து மேலே செல்ல அனுமதிக்க வேண்டாமென்று எனக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

நான் துரைக்குடெலிபோன் செய்து கார் மேலே செல்ல அனுமதி கேட்டேன். துரை அனுமதியளிக்க மறுத்து விட்டார்.

துரை அனுமதி அளிக்கவில்லை என்று நான் மெய்யப்பனிடமும் 2வது எதிரியிடமும் கூறினேன். ஆனால் அவர்கள் அதே காரில் தோட்டப்பாதையில் மேலும் முன்னால் சென்றனர். அவர்களுடைய லைன்வீடுகளுக்குத் தொழிற்சாலையிலிருந்து சுமார் ஒரு மைல் தூரம் செல்ல வேண்டும். துரையின் பங்களாவைக் கடந்துதான் அவர்களுடைய லைனுக்குச் செல்ல வேண்டும்.

அவர்கள் பங்களாப் பக்கம் சென்ற போது என்ன நிகழ்ந்தது என்பது எனக்குத் தெரியாது.

### வீராசாமி தகராறு

முதலாவது எதிரி வீராசாமி 1940 ல் தொழிற்சாலையில் ரோலிங் அறையில் வேலை செய்து கொண்டிருந்தார். ஒரு நாளைக்கு 60 சதம் அவருக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டது. தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு 54 சதம் சம்பளம்.

1940 அக்டோபர் 25ல் அவர் என்னைத் தாக்குவதாக பயமுறுத்தினர். அது பற்றி நான் போப் துரைக்குப் புகார் செய்தேன்.

உடனே துரை முதலாவது எதிரியை தொழிற்சாலையிலிருந்து தோட்ட வேலைக்கு மாற்றி விட்டார்.

(கொலைக்கான நோக்கத்தை நிரூபிப்பதற்காகவே இந்தச் சாட்சியம் அளிக்கப்படுவதாக இக் கட்டத்தில் அரசாங்கத் தரப்பு வழக்கறிஞர் திரு. கிரொஸட் தம்பையா கோர்ட்டாரிடம் தெரிவித்தார்.)

பின்னர், சாட்சியை திரு. ஆர். எல் பெரேரா குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்தார்.

# 2-வது எதிரியின் கழுத்து காயம் பற்றி டாக்டர்

அவரது தலையின் முன்பகுதி சவரம் செய்யப்பட்டிருந்தது. பின்பக்க முடி வெட்டப்பட்டிருந்ததும். ஒரு தமிழர் இம்மாதிரி தலை முடி வெட்டிக் கொண்டிருப்பதை நான் பார்த்ததில்லை.

திரு. ஆர். எல். பெரேராவின் கேள்விகளுக்குச் சாட்சி பதிலளிக்கையில், தமிழர்கள்




தாயித்தைத் தொங்க விடுவதற்காக இம்மாதிரிக் கயிற்றைக் கழுத்தில் அணிவதுண்டு என்றும், இந்தக் கயிறு தாயித்துக் கட்டுவதற்காக உபயோகப் படுத்தப் பட்டதென்று தன்னால் கூற முடியாதென்றும் யாராவது பின்னலிருந்து கயிற்றை இழுத்திருந்தாற்தான் இரண்டாவது எதிரியின் கழுத்தில் இம்மாதிரி காயம் ஏற்பட முடியுமென்றும் கூறினர்.

கேள்வி: இந்தக் கயிற்றால் அவரது கழுத்திற் காயம் ஏற்பட்டிருந்தால் சமாந்தரமான இரு காயங்கள் கழுத்தில் ஏற்பட்டிருக்க வேண்டு மல்லவா?

பதில்: ஆம்! இரட்டைக் காயங்களை நான் காணவில்லை. ஒன்று தான் இருந்தது. ஒரு மனிதன் ஓடும் போது உடுபிடவைகள் காயவைப்பதற்கான கொடிக் கயிறு கழுத்தில் பட்டாலும் இம்மாதிரி காயம் ஏற்பட முடியும்.

### சாட்சியம்

அதன் ... [illegible] ... சாட்சிக் கூண்டில் ஏறினர்.

அவர் திரு கிரோஸெட் தம்பையாவின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது கூறியதாவது.

### கழுத்தில் நீண்டகாயம்

'நான் மே 16ந் திகதி இரண்டாவது எதிரியான வேலாயுதத்தைச் சோதனை செய்தேன் அவரது கழுத்தின் மத்தியில் குறுக்கே 5 அங்குலம் நீளம் ஒரு காயம் இருந்தது. இடது கண் அருகில் உராய்ந்த காயமொன்றும், கணுக்கால் உட்பக்கத்தில் ஒரு காயமும் இருந்தன.

நான் பரிசோதனை செய்ய 5 அல்லது 6 நாட்களுக்கு முன்புஇந்தக் காயங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

இது போன்ற (ஒரு கயிற்றைக் குறிப்பிட்டு) கயிற்றை இரண்டாவது எதிரி கழுத்தில் அணிந்திருந்து, ஒரு கைகலப்பின் போது கயிற்றை யாராவது பிடித்து உன்னி இழுத்திருந்தால், அதனல் [illegible] கழுத்துக் காயம் ஏற்பட்டிருக்கலாம்.

இத்தோட்டத்தின் விஸ்திரணம் 475 ஏக்கராகும். இது தேயிலைத் தோட்டம். மேற்கணக்கில் 250 தொழிலாளர்களும் பணியக் கணக்கில் 150 தொழிலாளர்களும் வேலை செய்கிருர்கள் திரு. போப் தோட்ட பங்களாவிலேயே வசித்தார்.

மெய்யப்பன் என்னும் தொழிலாளி இங்கே வேலை செய்தார். அவர் பணியக் கணக்கில் வேலை செய்தார். இந்த எதிரிகள் அனைவரும் பணியக் கணக்கில் வேலை செய்த தொழிலாளர்களே.

### மெய்யப்பனின் கார்பிரச்சினை

1940 ஜூலை 20-ந் திகதி வாக்கில் காலை 10 அல்லது 10-30 மணியளவில் மெய்யப்பன் ஒரு காரில் தோட்டத்துக்கு வந்தார். அந்தக் காரில் மெய்யப்பனும், அவரது மனைவியும், 2வது எதிரி வேலாயுதனும், மற்றொரு தொழிலாளியும் இருந்தனர்.

தேயிலைத் தொழிற்சாலை அருகில் கார் வந்த போது




'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்
ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-00
நிர்வாகி
சுதந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிங்கள'ே ஊதும் அபாயச் சங்கு!

"நாம் தமிழர் அபாயம், இந்தியர் அபாயம், தமிழரசு அபாயம் ஆகிய ஆபத்துகளிடையே இன்னல்களை அனுபவிக்கும் மலைநாட்டு விவசாய மக்கள் இப்போது மற்ெருரு தமிழ் அபாயத்தையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது." — சிங்களே

## மலைநாட்டுக்கு விவசாயிக்கு மற்ெருரு தமிழ் அபாயம்

சிங்களே (31-5-67) கீழ்க் காணும் செய்தியைப் பிரசுரித்துள்ளது:—

'மலை நாட்டில் முக்கிய பயிர்ச் செய்கைப் பகுதிகளில் கடமையாற்றும் பெரிய அதிகாரிகளில் பெருந் தொகையானோர் தமிழர்களாதலின், மலைநாட்டு விவசாயிகள் பெரிதும் கஷ்டநஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

அந்த அதிகாரிகளில் பெரும்பாலோருக்குச் சிங்களம் பேசவோ சிங்களத்திற் கடமையாற்றவோ தெரியாது.

அவர்களில் சிலரின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன.

மலைநாட்டில் விவசாய ஆராய்ச்சிப் பகுதி:

1. டாக்டர் சித்தம் பிரநாதன்.

2. ரங்கல ஆராய்ச்சி அதிகாரி திரு. ஜயபாலன்.

3. காய் கறி, உருளைக் கிழங்கு பரிசோதனை அதிகாரி திரு. கணேசன்,

4. காய் கறி ஆராய்ச்சியாளர் திரு. குமாரசாமி.

5. உருளைக் கிழங்கு ஆராய்ச்சி விவசாய ஆலோசகர் திரு. இராசநாயகம்.

6. காய்கறி ஆராய்ச்சி விவசாய ஆலோசகர் திரு. தம்பிநாயகம்.

7. புல் ஆராய்ச்சி விவசாய கன்டக்டர் திரு. பாலசிங்கம்.

8. புல் ஆராய்ச்சி விவசாய ஆலோசர் திரு. பரராஜன்.

9. அம்பேவெல மிருக வளர்ப்புப் பண்ணை நிர்வாகி திரு. பி. ஆறுமுகம்.

10. போபத்தலாவ பண்ணை நிர்வாகி திரு. கோபாலசுந்தரம்.

11. நுரளை பசு வைத்தியர் திரு' குமாரசாமி.

12. விவசாயப் பொறுப்பு அதிகாரி திரு, நயில்ஸ்.

13. நிர்வாகப் பண்ணை அதிகாரி திரு. சுப்பிரமணியம்.

14, விதைக் கிழங்கு அங்கீகரிக்கும் அதிகாரி திரு. சோமசுந்தரம்.

15. சீத்தாயெலியப்பண்ணை அதிகாரி திரு. தம்பிஐயா.

16. எப்பிலிபானப் பண்ணை நிர்வாகி திரு. அந்தோனிப் பிள்ளை.

17. உடரதல்லப் பண்ணை நிர்வாகி திரு. வடிவேலு.

18. நுரளை மாவட்ட விவசாய அபிவிருத்தி அதிகாரி திரு. சத்தியநாதன்.

19. கடவத்சத்துரயில் விவசாய ஆலோசகர் திரு. கனகசபாபதி.

20. நுரளை மாவட்ட விவசாய அபிவிருத்தி அலுவலக பிரதான எழுதுவினைஞர் திரு. கிறிஸ்டி டேவிட்.

**சிங்கள இதழ்களில்...**

# செனட்டில் தமிழரசு இரு இடங்கள் கோருகிறது

## சிங்கள ஏட்டின் ஆருடம்

'அடுத்த அக்டோபரில் காலியாகும் செனட்சபைஸ்தானங்களுக்காக ஏழு கூட்டுக் கட்சிகள கொண்டாடும் உரிமை ஒரு நெருக்கடியாக உருவெடுத்திருக்கிறது. காலி ஆசனங்களுக்கு உரிமை கோருபவர்களிடையே தமிழரசுக் கட்சி, தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் காங்கிரஸ் ஆகியவைகளும் உண்டு.' இவ்வாறு "எத்த" (1-6-67) ஒரு செய்தி வெளியிட்டுள்ளது.

இச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது: 'அக்டோபரில் 10 செனட்டர்களின் பதவிகாலம் காலாவதியாகிறது. அவர்களில் ஐந்து பேர் எம். பிகளின் வாக்குகளைக் கொண்டு தெரிவுசெய்யப்படுவர். ஐந்து பேர் தேசாதிபதியால் நியமிக்கப்படுவர்.

• வாக்குகளின் எண்ணிக்கையின்படி இக்காலிஸ்தானங்கள் 10ல் 2 எதிர்க்கட்சிகளுக்குக் கிடைக்கும்.

டாக்டர் எம். வி. பி. பீரிஸ் அமைச்சராதலின் அவர் மீண்டும் நிச்சயமாக நியமிக்கப்படுவார். எனவே உரிமைகோருவதற்கு எஞ்சியிருப்பது 7 ஆசனங்கள் மட்டுமே!

தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு ஓர் ஆசனம் போதாதென்று கூறும் திரு. தொண்டமான் தனது ஸ்தாபனத்தின் மற்ெருருவருக்கும் மூதவை உறுப்பினர் பதவி வழங்கப்பட வேண்டுமென்று கோருகிறார். இப்பொழுது அவரது சங்கத்தைச் சேர்ந்த திரு. ஜேசுதாசன் செனட்டராக இருக்கிறார்.

தமிழ் காங்கிரஸ்காரர் ஒருவருக்கு இம்முறை கண்டிப்பாக ஓர் ஆசனம் கொடுக்க வேண்டுமென்று திரு. பொன்னம்பலம் கோருகிறார். செனட்டர் பதவி இரண்டுக்கு உரிமை கோருகிறது தமிழரசுக் கட்சி.

திரு. வீரவிமலரத்ன திரு. எஸ். டி. எஸ். சோமரத்ன ஆகியோருக்கு மீண்டும் செனட்டர் பதவி வழங்க வேண்டுமென்று திரு. சி. பி. டி. சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

திருமதி சித்தா மொலமுரேயும், உல்லாசப் பிரயாண இயக்கத்தின் ஒரு தலைவியான திருமதி தெல்மா முலரும் செனட் பதவிகளைக் கோரும் மற்றும் இருவர்களாவர்.

1960 ஜூலைப் பொதுத் தேர்தலில் வடகொழும்பு ஆசனமொன்றினைத் தியாகம் செய்த திரு. எட்மன்ட் சமரவிக்ரமாவுக்கும் இலங்கை உல்லாசப் பிரயாணக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு. [illegible] செனட்டர் பதவிகள் பெற்றுக் கொடுக்க முயற்சி செய்யப்படுகிறது.'

## தமிழ் நுழைகிறதாம்

நுராளைத் தொகுதியிலே இரு அரசாங்கச் சிங்களப் பாடசாலைகளில் தமிழ்ப்பகுதிகள் ஆரம்பிக்கவும் தமிழ் ஆசிரியர்களை நியமிக்கவும் தொடங்கியுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் நினைவாக அக்கரபத்தனையில் அரசாங்க சிங்கள வித்தியாலயத்தினதும், ஹோல்புறூக் அரசாங்க வித்தியாலயத்தினதும் சிங்கள மாணவர்கள் பெரிதும் கலக்கமடைந்துள்ளனர்.

தமிழ்ப் பகுதி ஆரம்பித்ததையும், அதற்காக வித்தியாலயக் கட்டிடங்களையும் உபகரணங்களையும் உபயோகப்படுத்துவதையும் ஆட்சேபித்து பெற்றோர் ஆசிரியர் சங்கம் அந்தத் தொகுதி எம். பிக்கும், கல்வி அதிகாரிகளுக்கும், கல்வி அமைச்சருக்கும் மகஜர் அனுப்புவதென்று முடிவு செய்துள்ளனர். இது சம்பந்தமாக அந்த வித்தியாலய மாணவர்கள் அண்மையில் வகுப்புகளைப் பகிஷ்கரிப்பார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.'

"எத்த" (6-1-67)

## திரு. நாராயணசாமிக்கு இடமாற்றம் வேண்டுமாம்

அரசகரும மொழி இலாகா துணை ஆணையாளர் திரு. நாராயணசாமி தன்னை அந்த இலாகாவிலிருந்து இடமாற்றம் செய்யும்படி திறைசேரியைக் கேட்டிருப்பதாக எத்த (1-6-67) ஒரு செய்தியை வெளியிட்டது.

'தன்னிலும் கனிஷ்ட அதிகாரியான திரு. பீட்டர் த பீ. அபேசேகராவின் கீழ் பணியாற்ற முடியாததால் தன்னை இடமாற்றம் செய்யும்படி அவர் கேட்டுள்ளார். திரு. பீட்டர் பீ. அபேசேகரா முன்பு காரியதரிசியாக இருந்தவர். திரு. நாராயணசாமியோ ஒரு சிரேஷ்ட சிவில் அதிகாரியாவார்.

தன்னை ஆணையாளராக நியமிப்பதானால் இந்த இலாகாவில் கடமையாற்றத் தான் தயாரென்று அவர் கூறியிருக்கிறார். இல்லையேல் தன்னிலும் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை அரசகருமமொழி ஆணையாளராக நியமிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.' என்று எத்த மேலும் எழுதியுள்ளது.

## மீண்டும் ஞாயிறு விடுமுறை?


வாரம் ஐந்து நாள் வேலை என்ற போர்வையில் மீண்டும் ஞாயிற்றுக் கிழமையை விடுமுறை தினமாக்குவதற்கு அரசாங்கம் தயாராகிறது என்று எத்த (2-6-67) எழுதியுள்ளது.

ஊழியர்களின் நலனை முன்னிட்டு வாரம் 5 நாட்கள் வேலை கொடுப்பதல்ல அரசாங்கத்தின் நோக்கம் ஞாயிற்றுக் கிழமை விடுமுறையை ஒழித்ததால் கத்தோலிக்கரிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தியை போக்குவதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

இந்த நடவடிக்கை நீர்கொழும்பு இடைத் தேர்தலில் ஏற்பட்டுள்ள பாதகமான நிலைமையை அகற்றுவதற்கும் பயன் படுமென்று கருதப்படுகிறது.

ஞாயிற்றுக் கிழமை விடுமுறையை ஒழித்ததால் நீர்கொழும்புப் பகுதி கத்தோலிக்கரிடையே அதிருப்தி ஏற்பட்டிருப்பதாக அரசாங்க ஆதரவாளர்கள் அரசாங்கத்தை எச்சரித்துள்ளனர்' என்று எத்த மேலும் கூறுகிறது.


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்பரேசன்
14, டாம் வீதி, கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு? ஓர் அரசாங்கக் கட்சியின் தலைமறைவுச் சதி

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒரு அரசியற்கட்சி, அடுத்த பொது தேர்தலில் கூட்டாட்சி வாதிகளுடன் தேர்தல் உடன்பாடுசெய்துகொள்ள முயற்சித்து வருவதாக சுதந்திரனுக்கு தகவல் கிடைத்துள்ளது. தேசிய அரசாங்கத்திலிருந்து கொண்டே கூட்டாட்சி வாதிகளுடன் இக் கட்சியினர் உறவு கொள்வது தேர்தல் உடன்பாடு செய்து கொள்ளப்போவதாக கூறப்படுவது பற்றியும் அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரச்சினை கிளப்ப சில பின்வரிசை உறுப்பினர்கள் முயன்று வருவதாகவும் தெரிகிறது.

மூன்றே மூன்று எம். பிகளைக் கொண்ட இக்கட்சியினர் கடந்த சில மாதங்களாக கூட்டாட்சிக் கட்சிகளுடன் இரகசியமாக மிக நெருங்கிய உறவு கொண்டு வருவதை சுதந்திரன் ஏற்கனவே பலமுறை அம்பலப்படுத்தியுள்ளது.

இலங்கை இந்திய ஒப்பந்த மசோதாவை பாராளுமன்றத்தில் ஆதரித்த இக்கட்சியினர் வெளியில் சுதந்திரக்கட்சியினருடன்சேர்ந்துகொண்டு அதை எதிர்த்து வருவதாக பாசாங்கு காட்டிவருவதும் மாவட்ட சபைகளை எதிர்த்து வாக்களிக்கப்போவதாக கூறித்திரிவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தேசிய அரசாங்கத்துள் இருந்து கொண்டே அதை கருவறுக்கும் பணியை இக் கட்சிக்கு சுதந்திரக்கட்சி விட்டிருப்பதாக தெரியவருகிறது.

இக்கட்சியின் தலைவர் சுதந்திரக்கட்சியின் ஆதரவு இல்லாமல் தேசிய அரசாங்கத்தால் எப்பிரச்சினையையும் தீர்க்க முடியாது என்று பகிரங்கமாகவே கூறத்தலைப்பட்டுள்ளதென்று தெரிகிறது.

இதற்கிடையில், அடுத்த தேர்தலில், கூட்டாட்சிக்கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு செய்து கொள்ளவும் இக்கட்சி முயன்று வருவதாகவும் கூறப்படுகிறது.

தேசிய அரசாங்கத்திலிருந்து கொண்டே அரசாங்கத்துக்கு துரோகம் செய்யும் இக்கட்சியினர் மேல் உடனடியாக நடவடிக்கை யெடுக்க வேண்டுமென்றுஅரசாங்கபாராளுமன்றக்குழுக்கூட்டத்தில்பிரச்சினை கிளப்பவும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிய வந்துள்ளது.

# இராசேந்திர சோழன் காலத்து கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது

## திருச்சியில் சமணர் குகைகள்; தஞ்சையில் பல்லவர் சிற்பம்

தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் சமீபத்தில் கடாரம்கொண்ட இராசேந்திர சோழனின் 30 வது ஆண்டு ஆட்சிக்காலத்திய கல்வெட்டு ஒன்றை கண்டுபிடித்துள்ளனர். இதைவிட, தஞ்சை மாவட்டத்தில் பல்லவர் காலச் சிற்பம் ஒன்றும் திருச்சி மாவட்டத்தில் சமண முனிவர்கள் வாழ்தந் குகைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வடஆற்காடு மாவட்டத்தில் பெரும் புலிப் பாக்கம் என்ற ஊரில் ஒரு பழைய கோயிலில் இருக்கும் கல்வெட்டு தமிழக அரசின் தொல் பொருள் ஆய்வுத் துறையினரால் படியெடுக்கப்பட்டுள்ளது.

வைரமேக வர்மன் என்ற மன்னனின் மூன்றும் ஆண்டு ஆட்சிக் காலத்திய கல்வெட்டாகும்இது; அகத்திசு வரமுடையார் கோவிலுக்கு நந்தா விளக்கு எரிக்க 20 கழஞ்சு மானியம் வழங்க வேண்டும் என்று இதில் பொறிக்கப்பட்டுள்ளது.

திருமங்கை மன்னன், வைரமேக வர்மனைப் பற்றித் தனது பாடலில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. திருமங்கை மன்னனைப் பற்றிய சேதியைக் குறிப்பதாகவும் இது உள்ளது.

கடாரம் கொண்ட சோழனை இராசேந்திரச் சோழனின் 30-வது ஆண்டு ஆட்சிக் காலத்திய கல்வெட்டு ஒன்றும் காணப்பட்டுள்ளது. இதில் இராசேந்திரச் சோழனுடைய மூத்த நம்பிராட்டி மலையன் குந்தவை என்றும் செம்பியன் மாதேவியார் குறிக்கப்பட்டுள்ளார். இந்த அரசியின் பெயர் இக் கல்வெட்டில் தான் முதன்முதலாகக் காணப்படுகிறது.

இவ்வூருக்கு அருகில் 5 கல் தொலைவில் 'பிர்மதேசம்' என்ற ஓர் ஊர் உள்ளது. இங்கே தான் இராசேந்திரச் சோழனும், அவனைப் பின்பற்றி அவன் மனைவி வீரமா தேவியும் இறந்தனர். அவர்களைப் பள்ளிப் படுத்திய இடத்தில் பள்ளிப் படைக் கோயில் ஒன்றும் கட்டப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

தஞ்சை மாவட்டம் நாகை வட்டத்தில் உள்ள வடக்காலத்தூர் பெருமாள் கோயில் உள் பிரகாரத்தில், பல்லவர் காலச் சிற்பம் ஒன்றையும் தமிழக அரசின் தொல் பொருள் ஆய்வுத் துறையினர் கண்டு பிடித்துள்ளனர்.

சுமார் 6 அடி உயரமுள்ள இச்சிலை, காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் காணப்படுவது போன்ற மனற் கல்லால் ஆனது. திருமகளோடும் பூமகளோடும் கூடிய திருமாள் சிலையாகும் இது.

இதன் அருகில், 'சிம்ம விஷ்ணு சதுர்வேதிமங்கலம்' என்ற பெயரில் ஒரு கல் வெட்டும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

சிம்மவிஷ்ணு, புகழ் பெற்ற மகேந்திர வர்ம பல்லவனின் தந்தை பாவார்.

சிம்ம விஷ்ணு சோழநாட்டைக் கைப்பற்றியதாகச் செப்பேடுகளில் குறிக்கப் பட்டுள்ளது.

இராசசிம்ம பல்லவன் (காஞ்சிகைலாசநாதர்கோயிலைக் கட்டியவன்) நாகப் பட்டினத்தில் இருந்த புத்த விகாரை ஒன்றிற்கு இச்சிலையைப் பரிசு வழங்கியதாக வரலாறு கூறுகிறது.

நாகை வட்டத்தில் பல்லவர் சிற்பம் கிடைத்தது இதுவே முதற் தடவையாகும்.

வடக்காலத்தூர், தமிழக கல்வியமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் அவர்களின் சொந்த ஊர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சமண முனிவர்கள் வாழ்ந்த குகைகள்

திருச்சி மாவட்டம் புகளூர் அருகில் உள்ள வேலகயுதம் பாளையத்தில், சங்ககாலச் சேர மன்னன் கோ ஆதன் [illegible] காணப்படுவது தெரிந்ததே.

(14-ம் பக்கம் பார்க்க)

# உருளைக் கிழங்கு உற்பத்தி

## யாழ்விவசாயிகளுக்கு ஒரு வாய்ப்பு

'யாழ்ப்பாண விவசாயிகள் உருளைக் கிழங்கு உற்பத்தியில் தீவிரமாக ஈடுபடவேண்டும். அவர்கள் உருளைக் கிழங்குச் செய்கையில் பூரண அக்கறை எடுத்தால், இலங்கைக்கு தேவையான உருளைக் கிழங்கு முழுவதையும் நாமே உற்பத்தி செய்துவிட முடியும். இதனால் ஏறத்தாழ 75 லட்சம் ரூபா உள் நாட்டிலேயே தங்குவதற்கும் வாய்ப்பு ஏற்படும்' இவ்வாறு பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:—

'உருளைக்கிழங்கு இறக்குமதிக்காக பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை வருடந்தோறும் இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளுக்கு கொடுத்து வந்துள்ளது. ஆனால் நடப்பு ஆண்டில் ஓரளவு நிலைமை மாறிவிட்டது.

'நமக்குத் தேவையான உருளைக் கிழங்கை ஓரளவு எம்மால் உற்பத்தி செய்ய முடியுமென்பதை யாழ்ப்பாண விவசாயிகள் கடந்த முறை பயிரிட்டுக் காட்டி விட்டார்கள்.

கொக்குவில்,கோண்டாவில் திருநெல்வேலி ஆகிய இடங்களில் மாத்திரம் சுமார் 125ஏக்கரில்உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

விவசாயிகள் மனம் வைத்தால் அடுத்த 3வருடங்களுக்குள் இலங்கைக்குத் தேவையான முழு அளவு உருளைக் கிழங்கையும் எம்மாலேயே விளைவிக்க முடியுமென்பது நிச்சயம். இதனால் ஏறத்தாழ ரூபா 75லட்சம் நம் மக்களிடையே தங்கவும் வழியேற்படும்.'


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் அச்சு வார்ப்பகத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ் ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்த எங்கள் இயந்திரம் சாதாரண எழுத்துக்களையும், அலங்கார, எழுத்துக்களையும் வார்க்கக் கூடியது.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் அச்சு வார்ப்பகம்,**

194 ஏ. பண்டாரநாயக்கா வீதி,

கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சிறுபான்மையோர்

இலங்கை கீழைத்தேச பண்பாட்டில் கட்டி எழுப்பப்பட்டு மேலைத்தேச கலாச்சார அரசியல் முறைகள் வலுவந்தட்படுத்தி ஏற்படுத்தப்பட்டு அதனால் பழக்கப்பட்ட பாதிப்பை கொண்ட நாடு.

இந்நாட்டில் பல மொழி, மத, இன கலாச்சார மக்கள் தத்தம் பாரம் பரியத்தோடு வாழ்ந்து வருகிறார்கள். குடிசனப்புள்ளி விபரப்படி (1953)

| இனம் | தொகை | வீதம் |
| --- | --- | --- |
| சிங்களவர் | 5621332 | 69.3 |
| இலங்கைத் தமிழர் | 908705 | 11 |
| இந்தியத்தமிழரெனப்படுவர் | 984327 | 12 |
| முஸ்லிம்கள் | 468146 | 5.7 |
| இந்தியரூர், ஐரோப்பியர் | 155436 | 2 |
| மொத்தம் | 8137936 | 100 |

"உலகிலே தமிழ்ப் பேசும் மக்கள் தொகை கோடிக்கணக்கானது. ஆனால் சிங்கள மக்கள் ஒரு கோடியே இல்லாத சிறுபான்மையினர். சிங்கள மக்கள் வசிக்கும் ஒரே நாடான இலங்கையை பௌத்த சிங்கள நாடாக்குவதில் தவறு இல்லை" இது சில தீவிரவாதச் சிங்களத் தலைவர்களின் கூற்று.

உலகில் தமிழ்ப்பேசும் மக்கள் பலகோடி தொகையின ராக இருந்தாலும் கூட எந்த நாட்டிலும் தம் மொழி கலாச்சாரத்தைப் பேணக் கூடிய ஒரு ஆட்சிமுறையைக் கொண்டதில்லை. காரணம் எல்லா நாட்டிலும் தமிழர் சிறுபான்மையினரே.

பல சிறுபான்மையரைக் கொண்ட போதும் கூட இங்கு சிங்கள மக்களைப் பேணும் ஆட்சி முற்றாக உண்டு.

தமிழ்ப் பேசாத முஸ்லிம் மக்களைப் பேணும் ஆட்சி பாகிஸ்தான், ஐக்கிய அரபுக் குடியரசு நாடுகளில் உண்டு.

தமிழ்ப் பேசும் மக்கள் மலாயா, சிங்கப்பூர் நேட்டல் (NATAL) கெனியா, பிஜிதீவு, தங்கனிக்கா, மொறிசஸ் இலங்கை இந்தியா எனப்பல நாடுகளில் 4 கோடியளவு தொகையினர் வாழ்கிறார்கள். ஆனால் இவர்கள் வாழும் எந்த நாட்டிலும் அந்நாட்டு மக்கள் தொகையில் பெரும்பான்மை இடத்தைப் பெறவில்லை.

ஆனால் இந்நாடுகளின் மொத்த சனத்தொகைகளில் தமிழ் பேசும் மக்கள் கூடிய அளவு விதம் வகிப்பது இந்தியா வல்ல. இலங்கையே. சிங்களவர் 69.3% தமிழ்ப்பேசும் மக்கள் 28-7% ஆனால் 43 கோடி மக்களைக் கொண்ட இந்தியாவில் சுமார் 3½ கோடி மக்களே தமிழர்.

தமிழருக்கு இந்நாடுகளில் விமோசனம் கிடைக்கவேண்டுமானால் அதற்குக் கூட பொருத்தமானதும் எமது நாடே. காரணம் இந்நாட்டிலே தான் தமிழர் கூடிய வீதத்தை (29-7) கொண்ட தமிழ்ப்பேசும் சிறுபான்மையினர் என முன்கண்ட முடிபேயாகும்.

வியட்னாமில் 1963ம் ஆண்டில் பௌத்தர்களைக் கத்தோலிக்கர்கள் அடக்கி ஒடுக்கி தாங்கொணாத் தொல்லை கொடுத்தார்கள். இலங்கைப் பௌத்தர்களால் அவர்களுக்கு உதவ முடிந்ததா?

தென் ஆபிரிக்காவில் 'நாங்கள் வெள்ளையர்களது வீட்டு நாய்களிலும் கூடப் பத்து மடங்கு புண்படுத்தப்பட்டு சீர்கெட்டு வாழ்கிறோம்" என 90 லட்சம் நீக்ரோக்கள் 30லட்சம் வெள்ளையர் துயரால் கண்ணீர் வடித்தபோது அமெரிக்க நீக்ரோக்களால் அவர்களின் துயரைத் துடைக்க முடிந்ததா?

அண்டை நாட்டில் அமரர் நேருவின் மொழிக் கொள்கையைக் கைவிட்டு அமரர் சாஸ்திரி தென் இந்தியத் தமிழர் மீது இந்தி மொழியைத் திணித்த போது, பல மாணவர் நசுக்கப்பட்டனர். அவர்களுக்கு எம்மால் உதவ முடிந்ததா? எனவே உலகில் பல நாட்டில் தமிழர் சிறுகச் சிறுக வாழ்ந்தும் எமக்கென்ன பயன்?

### உண்மைச் சுதந்திரம் கிடையாது!

உண்மைச் சுதந்திரத்தை நாம் அனுபவிக்கவில்லை என்பது இன்று உரிமை மறுக்கும் இடதுசாரி, சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் வாதத்தில் கூடத் தெட்ட தெளிவாகவுள்ளது.

"1956ல் காலம் சென்ற பண்டாரநாயகாவின் ஆட்சியோடுதான் நடைமுறைக் கலாச்சார சமுக பொருளாதார அரசியல் சுதந்திரம் கிடைத்தது" என்கிறார்கள்.

உண்மைச் சுதந்திரத்தை நல்க காலம் சென்ற பண்டாரநாயகா எடுத்த நடவடிக்கைகள் சோசலிச நடவடிக்கைகளுமல்ல. சுதந்திர நடவடிக்கைகளுமல்ல.

வங்கிகள், பாடசாலைகள், பெரும் தோட்டங்கள் இன்சூரன்ஸ் கம்பனிகள், பெற்றோலியம் கம்பனிகள் ஆகிய முக்கிய பொருளாதார நிறுவனங்கள் 1956 ல் தேசிய மயமாக்கப் பட்டனவல்ல. பதில் வகுப்பு வாதத் தனிச்சிங்களமே இந்நாட்டின் அரசகரும மொழியாக்கப்பட்டது. பௌத்த மதம் அரசாங்க மதமாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இவைதான், உண்மைச் சுதந்திரத்தை சிங்கள மக்களுக்கு வழங்கினால், தமிழ்ப் பேசும் மக்களுக்கு இத்தகைய உரிமைகள் முற்றாகக்கிடைக்காமையால் நடைமுறைச் சுதந்திரமிழந்தவர்கள் என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது.

'இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் முற்றாக உரிமை பெற்றவர்களல்ல' என்பது விரும்பியோ, விரும்பாமலோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ பலராலும் ஏற்கப்பட்டது. ஆனால் எந்தளவுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டன என்பதில் தான் கட்சிகளிடையே வேறுபாடு.

### நீதி மந்திரி ஒப்புக்கொண்ட உண்மை

எடுத்துக்காட்டாக, முன்னாள் நீதி மந்திரி (2-11-61 ல்) செனட் சபையில் பேசும் போது,' 'நாங்கள் மொழி உரிமையைத் தவிர வேறு உரிமைகளை மறுக்கவில்லை' என உரிமைமறுப்பின் ஓர் பகுதியை ஏற்றுக் கொண்டார்.

சிறுபான்மையினர் உரிமைகள் பறிபோன வரலாற்றை இரு முக்கிய கால கட்டத்துள் வகுத்து விளக்கலாம்.

### இரண்டுகால கட்டங்கள்

சுதந்திரமுயற்சிகள் முற்றிய 1947 ம் ஆண்டு தொட்டு மேற்கத்தைய முறையிலிருந்து வேறுபட்டதாகக் கூறப்படும் ஆட்சியமைத்த காலம் சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் (1956 ல்) ஆட்சி ஆரம்பம் வரை முதற் காலம். பண்டாரநாயக்கா ஆட்சி தொட்டு தேசிய அரசாங்கம் நிறுவும் வரை (1965 வரை) யுள்ள காலம் இரண்டாம் பகுதி.

1947ல் இலங்கையில் நடந்த தேர்தல் சிறுபான்மையரது முக்கியத்துவம் பெற்றதொன்று.

101 உறுப்பினரைக் கொண்டிருந்த பாராளுமன்றத்திற்கு 95 பிரதிநிதிகள் தொகுதி வாரியாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சி 42 தொகுதிகளில் வெற்றியீட்டி, வெற்றியீட்டிய கட்சிகளுள் கூடிய பெரும்பான்மை பெற்றிருந்தது.

மலைநாட்டில் 7 இலங்கை இந்தியக் காங்கிரஸ் உறுப்பினர் தெரியப்பட்டனர். பல இடதுசாரி உறுப்பினர்கள் மலையகத் தமிழ் மக்கள் வாக்குகள் பெற்றே வெற்றி பெற்றனர்.

அந்நேர எதிர்கட்சிகளது, குறிப்பாக இடது சாரிக் கட்சிகளது பலத்தை அடுத்தடுத்த தேர்தல்களிலாவது குறைக்க எண்ணிய அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 1948 அக்டோபரில் பிரசாவுரிமைச் சட்டத்தைக் கொணர்ந்தது.

### எட்டுலட்சம்பேர் உரிமை இழந்தனர்

இச் சட்டத்தின்படி 1948 அக்டோபருக்கு முன்பு இலங்கையில் பிறந்தோருக்கும், அவர்களின் சந்ததியினருக்குமே தான் இலங்கைப் பிரசாவுரிமை வழங்கப்பட்டது. இத் திகதிக்குப் பின் பிறப்போர் விடயத்தில் அவர்கள் தந்தை இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும், இலங்கையில் பிறவாதவர்களைப் பொறுத்த மட்டில் அவர் தந்தை, தந்தையின் தந்தை இலங்கையில்

## இ. அப்பாத்துரை

# மிதக்கும் வாக்குகள் திசை திரும்பியதேன்?

சென்ற வாரம் காற்றுாடி மலைநாட்டுத் தோட்டங்கள் மீது பறந்து கொண்டிருந்த போது கூட்டம் கூட்டமாக வெளியேறுவதைக் கண்டது.

யார் எங்கிருந்து ஏன் வெளியேறுகிறார்கள் என்று கேட்கிறீர்களா?

வெளியேறுவதுவேறு யாருமல்ல, தோட்டத் தொழிலாளர்கள் தான்.

அவர்கள் தோட்டங்களிலிருந்து வெளியேறுகிறார்களா? உள்ளூராட்சி மந்திரியின் அழைப்பை ஏற்று தமிழ்ப் பகுதிகளில் குடியேறுவதற்காக கிளம்பிவிட்டார்களா? என்றெல்லாம் கேள்விகளைக் கடாவுவதில் பயனில்லை.

ஏனெனில் அவர்கள் வெளியேறுவது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்தேயன்றி, தோட்டங்களிருந்தல்ல.

ஏன் இந்த வெளியேற்றம்?

காற்றாடிக்குச் சந்தேகம் வந்துவிட்டது. சில தோட்டங்களைச் சுற்றி சுற்றிப் பறந்த போது அத் தோட்டங்களிலிருந்து வதந்திகள் [illegible] மேலே செல்வதைக் காற்றாடி அவதானித்தது. இ. தொ. கா. சம்பள உயர்வு வாங்கிக் கொடுத்து விட்டதாம். அதற்காகத்தான் அதிலிருந்து வெளியேறுகிறார்களாம். இதுதான் அந்த வதந்தி!

இதைக் கேட்டதும் காற்றாடிக்குச் சந்தேகம் தீர்ந்து அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டது. சம்பள உயர்வு வாங்கிக் கொடுத்ததற்காகவா இ. தொ. கா. விலிருந்து வெளியேறுகிறார்கள்? வேடிக்கையாக இருக்கிறதே! அப்பொழுது மற்றொரு வதந்தி வேகமாகக் கிளம்பி வந்து, காற்றாடியில் மோதி சிதறிய போதுதான் வானத்தில் உண்மை பளிச்சிட்டது.

கிடைத்தது 10 சதம் சம்பள உயர்வாம் இது தொழிலாளர்களுக்கு பெரிய ஏமாற்றமாம்! ஒரு ரூபாயைக், காட்டி, 10 சதத்தைக் கொடுத்தால் ஏமாற்றமாக இருக்காதா? போதிய சம்பள உயர்வு பெறக்கூடிய வாய்ப்பை இந்த 10 சதம் நாசமாக்கிவிட்டதென்று மற்ற தொழிற் சங்கங்கள் செய்யும் பிரசாரத்தை நம்பி, அவர்கள் கூட்டம் கூட்டமாக இ. தொ. கா. விலிருந்து வெளியேறுகிறார்களாம்.

வெளியேறி எங்கே போகிறார்கள்? அதுதான் தெரியவில்லை. "ஆனால் நிச்சயமாக அந்தமானுக்கு அல்ல!

அகலவத்தைத் தேர்தல் போட்டி முடிந்து 3 வாரங்களாகிவிட்டன. ஆனால் [illegible] இன்னும் தணியவில்லை. வெற்றி பெற்றவரு [illegible]

அகலவத்தை வாக்குகள் [illegible]

போதிய அதிகப்படியான 'வோட்டுகள்' கிடைக்கவில்லையே என்ற கவலை சிலரைப் பிடித்தாட்டுவது தான் சூடுநிலைத்து நிற்பதற்கு காரணம்.

இதற்கு சிலர் என்னென்னவோ கற்பனைக் காரணங்களைக் கூறுவதைக் கேட்டால் காற்றாடிக்கு சிரிப்புத்தான் வருகிறது.

தேர்தல் சமயத்தில் காற்றாடி பல தடவை அகலவத்தை மீது பறந்து தேர்தல் பிரசாரத்தின் போக்கை நோட்டம் பார்த்திருக்கிறது.

## காற்றாடி

பிரதமர் திடீரென்று கூட்டாட்சிவாதிகளை நிராயுதபாணியாக்கி விட்டார். இதனால் கூட்டாட்சிப் பீரங்கிகள் செய்வதறியாது வாயடைத்து நின்றனர். எனவே மிதக்கும் 'வோட்டு'கள் அரசாங்கக் கட்சியை நோக்கி மிதந்து செல்வதைக் காற்றாடி கண்டது.

மிதந்து செல்லும் ஒரு 'வோட்டைப்' பிடித்து காற்றாடி குறுக்கு விசாரணை செய்த போது, அது சொன்ன கதையை நீங்களும் கேளுங்கள்.

வாதிகள் மூன்று ஆயுதங்களைப் பிரயோகித்தனர்.

(1) இலங்கை— இந்திய மசோதா.

(2) மாவட்ட சபை மசோதா.

(3) தமிழரசுக் கட்சி மாவட்டசபை மசோதா மூலம் நாட்டை கூறு போடப் போவதாகப் பிரசாரம்.

கடைசி நிமிடத்தில் கூட்டாட்சிவாதிகளிடமிருந்து முந்திய இரு ஆயுதங்களைப் பிரதமரும், கடைசி ஆயுதத்தைத் தமிழரசுக் கட்சியினரும் பறித்து விட்டனர்.

தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்பு பிரதமர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில், இலங்கை—இந்திய மசோதாவில் தமக்கு அவசரம் கிடையாதென்றும், மக்களின் கருத்தறிந்து அதற்கிணங்கவே அது சட்டமாகும் என்றும் கூறினார். மாவட்ட சபை மசோதா இன்னும் தயாரில்லை என்றும் அதற்கான திட்டங்களைப் பற்றி பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருப்பதாகவும் கூறினர்.

இதனால் இரு முக்கிய பிரசார ஆயுதங்களை இழந்தனர் கூட்டாட்சிவாதிகள். ஆனால் பிரதமர் கூற்றை தமிழரசுவாதிகள் மறுப்பார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

'பிரதமர் கூறியது சரியே' என்று தமிழரசார் கூறியதும் கூட்டாட்சிவாதிகளின் கடைசி ஆயுதமும் பறிபோயிற்று.

அவர்கள் நிராயுதபாணிகளாக களத்தில் நின்று தவித்தனர். இதைக் கண்டதும் நாங்கள் பிரதமர் இருக்கும் திசையை நோக்கி மிதந்து செல்கிறோம்' என்றது அந்த மிதக்கும் 'வோட்டு'

இவ்வாரம் காற்றாடி கடற்கரையோரமாகப்பறந்து செல்லும் போது, கல்கிஸை கடற்கரையில் நாலைந்து பேர் எதையோ மிக அக்கறையுடன் தேடிக் கொண்டிருந்தனர்.

யார் அவர்கள்? எதைத் தேடுகிறார்கள்? என்று காற்றாடி அவ்வழியே பறந்து வந்த ஒரு சக காற்றாடியிடம் விசாரித்தது.

'அவர்கள் கூட்டாட்சிப்பிரமுகர்கள் கையிலிருந்த ஆயுதங்கள் பறிபோய் விட்டதால் அடுத்து வரும் இடைத் தேர்தல்களில் பிரயோகிப்பதற்கு புதிய ஆயுதம் ஏதாவது கிடைக்காதா என்று தேடிக் கொண்டிருக்கிறார்கள்' என்றது சக காற்றாடி.

இதைக் கேட்டதும் 'பாவம் கூட்டாட்சிவாதிகள்!' என்று முணுமுணுத்தது காற்றாடியின் வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைகள்

பிறந்தவராக நிரூபிக்கப்பட வேண்டும்.

இதன் விளைவாக எட்டு இலட்சத்திற்கு அதிகமான மக்கள் வாக்குரிமை இழந்தனர். எனவே 1952, 1956, 1960 மார்ச், 1960 ஜூலை, 1965 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் எந்த ஒரு மலை நாட்டுத் தமிழனும் போட்டியிட்டு வெற்றி பெறமுடியாது போயிற்று.

குடிவழிப் பிரசை ஆவதற்கு வழங்கப்பட்ட சலுகைகள்கூட நடைமுறைச் சாத்திய மற்றவை.

பரம்பரைப் பிறப்புரிமை இந்நாட்டில் இருந்தாலும் கூட அதனைநிரூபிக்கப்பிறப்புப் பதிவு செய்யப்பட்ட மக்களை எதிர்பார்ப்பது மடமை. 1865 ல் தான் பிறப்புரிமை பதிவுச் சட்டம் நடைமுறையில் வந்தது. இது கூடப் பிறப்புப் பதிவைக் கட்டாயப் படுத்த வில்லை. எனவே பிறப்புப் பதிவை மக்கள் அன்று பொருட்படுத்தவில்லை.

## இன்னொரு சட்டம்

இன்னொரு சலுகைச் சட்டத்தையும் கொண்டு வந்தனர். அதுவே 'இந்தியப் பாகிஸ்தானியப் பிரசாவுரிமைச் சட்டம்.'

இச்சட்டத்தின்படி '1-1-1946 முன் ஏழுவருடம் தொடர்பாக வசிக்கும் விவாகமாகாதவர், பத்து வருடம் தொடர்ந்துவசித்ததாகக்காட்டினால் இலங்கையில் பதிவுப் பிரசையாக்கப்படலாம்' எனப் பட்டது.

அதிக பயனளிக்காத சட்டங்களில் இதுவும் ஒன்று. அந்நேர இலங்கை மக்கள் விவாகப் பதிவை எண்ணியதே இல்லை. அப்படி விவாகப்பதிவு செய்து கொண்டாலும்கூட இச் சட்டம் ஏழைத் தொழிலாளரைப் பேணத் தவறியது. காரணம், 'தமது வாழ்க்கையை நடத்தப் போதிய வருவாய் கொண்டவரென நிரூபித்தால்தான் பதிவுப் பிரசையாக்கப்படுவர்.' எனவே அச்சட்டம் ஏழைத் தொழிலாளருக்கு உதவாததாயிற்று. 90% பிரசாவுரிமை கோரிய மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

## இரண்டு இழப்புக்கள்

இதனலான முக்கிய உரிமை இழப்பு ஒன்றல்ல இரண்டு. (1) மலையகத் தமிழ்மக்கள் அல்லோலகல்லோலப்படும் சீரற்றவாழ்வு. (2) குடியுரிமை மொழியுரிமை, கல்வியுரிமை பிறபிரசைகளைப்போல பெற முடியாமை.

சோசலிசம் பேசிப் பாடசாலைகளைத் தேசிய மயமாக்கிய சென்றஅரசாங்கம்தோட்டப் பாடசாலைகளைப் புறக்கணித்தன. இவர்கள் போதனமொழி தாய்மொழியல்ல, அரசகருமமொழி எனக் கூறியது தேசிய கல்விக்குழு. (N.E.C.)

அடியிற்குறிப்பிடப்பட்டபுள்ளி விவரங்கள் இந்திய வம்சாவளி தமிழரென வர்ணிக்கப்படுவோர் நிலையைத் தருகிறது. இதில் 1003269 மக்கள் பிரதிநிதித்துவம்நேரடியாகப் பாராளுமன்றத்தில் பெருதவர்கள்.

மலையகமக்கள் இலங்கைத் தேர்தல் சட்டப்படி 75000 மக்களுக்கொரு பிரதிநிதித்துவம் என்ற கோட்பாட்டைப் பின்பற்றினலும், 13 ற்குமேற்பட்ட பிரதிநிதிகளைப் பாராளுமன்றம் அனுப்பவேண்டியவர்களாவர். முடியவில்லை. காரணம் உரிமை மறுக்கப்பட்டதே!

இந்த 13 பிரதிநிதிகளும் சேர்ந்திருப்பின் பல உரிமைகள் சிறுபான்மையினருக்கு இன்றும் இருந்திருக்கும். எனவேதான் இலங்கைச் சிறுபான்மையினர் வரலாற்றில் இது ஓர் பேரிழப்பு.

## அடுத்த கட்டம்

1956ல் அடுத்த கட்டம் ஆரம்பமாகிறது. 1944ல் கொள்கையளவில் சட்டசபையில் (State Council) சிங்களம், தமிழ் ஆதியன இந்த நாட்டின் அரசகரும மொழிகளாக ஏற்கப்பட்டது.

ஆனல் 1956ல் 'தனிச் சிங்களம் மட்டுமே இந்நாட்டின் அரசகருமமொழி' எனப் பிரகடனப் படுத்தப்பட்டது.

வரலாற்றுக்காலம் தொட்டு இந்நாட்டைத் தாயகமாகக் கொண்ட தமிழ்பேசும் மக்களின் மொழியுரிமை பறிபோயது. மொழிவெறும் வெறியூட்டுவதல்ல. அது நாகரீக, கலாச்சார முதுசொத்து. மொழி ஆட்சிப்பதவி இழக்க, அம் மொழி பண்பு நாகரீகமே அழிய நேரிடும்.

நியூசிலாந்தில் ஆதிக்குடியினர் (Maoris) ஆங்கிலமொழி திணிக்கப்பட்டபின், இன்று அம் மக்களின் பண்பே அழிந்து அப்படி ஒரு இனம் இருந்ததா? எனும் நிலைக்குப் போய்விட்டது.

வரண்ட, வளம் குறைந்த வட கிழக்கு மாகாணங்களே தமிழ்பேசும் மக்கள் வாழும் பிரதேசம். இங்கு குடியேற்றங்கள் பெரும்பான்மையினரிடம் சிக்கியுள்ளன. கந்தளாய், அம்பாறை, பதவியா எனப்பல.

அடுத்து,வளமற்றபிரதேசத்தில் வாழ்வதால் இதுவரை நம்பி இருந்த பல அரச உத்தியோகம், சம்பள உயர்வின்மை கட்டாய ஓய்வ, பதவி உயர்வின்மை ஆகியவற்ருல் நிலையற்ற தொன்ருகிவிட்டது.

நீதிபரிபாலன மொழி, அரசகருமமொழியே என நாடெங்கும் அமுலாக்கச்சட்டம் நிறைவேறியது. இதனல் தமிழ் மொழி நிர்வாக உபயோகத்தில் புறக்கணிக்கப்பட்டதாகி விட்டது.

அரசியலமைப்பில்கூட எதிர்பார்க்கப்பட்ட பல உரிமைகள் மறுக்கப்பட்டன. சிறுபான்மையினரைப் பாதிக்கும் மசோதாக்களை செனட்சபை தடை செய்திருக்கலாம் ஒரு வருடம்; தடைசெய்யாமைக் காரணம் செனட் சபையிலும் பெரும்பான்மையினரே பெரும் பான்மை வகிப்பதாகும்.

## ஏனைய நாடுகளில்

இதே வேளை மொழி உரிமை, குடியியல் பிரச்சினைகளை நாகரிகமாகத்தீர்த்த நாடுகள் பல.

பின்லாந்தில் 91% மக்கள் பேசும் பின்னிஸ் மொழியுடன் 9%மக்கள் பேசும் சுவினிஸ் மொழியும் உத்தியோக ஆட்சி மொழி.

சுவிட்சர்லாந்தில் ஜேர்மன் மொழி 72%, பிரான்ஸ் மொழி 12% ரோமன்ஸ் 1% இத்தாலிய மொழி 6% பேசும் மக்கள்உளர். இம்மொழிகள் அத்தனையும் உத்தியோக மொழிகள் அந்த நாட்டிலே.

சோவியத் ரஷியாவில் 16 மொழிகள் ஆட்சி மொழிகள். 1924ல் எழுத்து வடிவம் (லிபி) ஒழுங்காக இல்லாதிருந்த உஸ்பெக்மொழி இன்று உஸ்பெக்தான் மாகாணத்தின் ஆட்சி மொழியாக இருக்கிறது. அது அப்பிரதேசப் பாடசாலைகளின் போதன மொழியும் கூட.

இவ்வாறு உலகில் பல நாடுகளில் நாகரீகமான முறையில் சிறுபான்மையினர் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. இலங்கையிலும் பொருளாதாரம் வளர வளர முட்டுக்கட்டை எனக் கருதப்படும் சிறுபான்மையினர் பிரச்சினை தீர்க்கபப்பட்டால் அதுவே சிறந்த முன்னேற்றத்திற்கு அத்திவாரமாக அமையும்.

**1964-ல் இலங்கை இந்தியர்பற்றிய முன்னைய பிரதமர் வெளியிட்ட புள்ளிகள்:**

| வருடம் | வருட ஆரம்பத்தில் உள்ள இந்தியர் | இந்திய-பாகிஸ்தானிய சட்டப்படி பிரசாவுரிமை பெற்றோர். | இலங்கை பிரசாவுரிமை சட்டப்படி பிரசையானவர். | இந்தியா திரும்பியவர்கள். | மிச்சமானோர். | பிறப்பு | இறப்பு | மிகுதி (பிறப்பு இறப்பை விட) | வருட முடிவில் இருந்தோர். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1953 | 1003757 | 7587 | 500 | 8396 | 987274 | 26257 | 9545 | 16712 | 1003986 |
| 1954 | 1003986 | 6652 | 500 | 8007 | 988827 | 31241 | 12516 | 18725 | 1007552 |
| 1955 | 1007552 | 4936 | 500 | 26627 | 975489 | 36678 | 14519 | 22159 | 997648 |
| 1956 | 997648 | 17207 | 500 | 18315 | 961626 | 35043 | 13086 | 21957 | 983583 |
| 1957 | 983583 | 35320 | 500 | 13712 | 934051 | 34835 | 13030 | 21805 | 955856 |
| 1958 | 955856 | 10724 | 500 | 12643 | 931989 | 34006 | 12531 | 21475 | 953464 |
| 1959 | 953464 | 14991 | 500 | 8637 | 929336 | 34664 | 12633 | 22031 | 951367 |
| 1960 | 951367 | 9287 | 500 | 6636 | 934944 | 36204 | 12441 | 23763 | 958707 |
| 1961 | 958707 | 6368 | 500 | 6773 | 945066 | 34936 | 11221 | 23715 | 968781 |
| 1962 | 968781 | 1545 | 500 | 7013 | 959723 | 35511 | 13076 | 22435 | 982158 |
| 1963 | 982158 | 374 | 500 | 8351 | 987461 | 34663 | 12723 | 21940 | 994873 |
| 1964 | 994873 | 144 | 500 | 6768 | 987461 | 24976 | 9168 | 15808 | 1003269 |
| மொத்தம் | —— | 115135 | —— | 131878 | | | | | |

# சுற்றறிக்கையை வாபஸ் பெறுக!

தமிழ் மொழிச் சட்ட விதிகளை அஞ்சற் திணைக்களங்களில் நடைமுறைப் படுத்துவது பற்றி அஞ்சற் திணைக்கள ஊழியர்களுக்கு அண்மையில் அனுப்பப்பட்டுள்ள சுற்று நிருபம், தமிழ் பேசும்மக்களின்சில அடிப்படை உரிமைகளைக் கூட மறுப்பதாக அமைந்திருக்கிறது.

விரைவில் தமிழ் மொழிச் சட்ட அமுல் பற்றி நிதியமைச்சர் வெளியிடவிருப்பதாகக் கூறப்படும் புதிய சுற்றறிக்கைக்கு முரண்பாடான அம்சங்கள் அஞ்சல் மா அதிகாரியின் சுற்றறிக்கையில் காணப்படுவதால், உடனடியாக அச் சுற்றறிக்கையை வாபஸ் வாங்க வேண்டு மென்றும், நிதியமைச்சரின் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட பின்னர், அதைத் தழுவிப் புதிய சுற்றறிக்கை அனுப்படல் வேண்டு மென்றும் தபால் தந்தியமைச்சர் திரு. மொன்டேகு ஜெயவிக்கிரமாவிடம் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் இரத்தினம் கோரியிருக்கின்ருர் என்று ஒரு செய்தி கூறுகிறது.

தேசிய அரசாங்கம், தமிழ் மொழி விசேட சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிய போது, தமிழ் பேசும் மக்கள் இழந்து விட்ட சில மொழியுரிமைகளையாவது திரும்பப் பெறலாம் என்று பரிபூரணமாக நம்பினர். ஆனல், அஞ்சற் திணைக்கள மா அதிகாரியால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை, இழந்ததைத் தராதது மட்டுமல்ல, இருந்த உரிமைகளைப் பறிப்பதாகவும் அமைந்துள்ளது.

இந்தச் சுற்றறிக்கையில் எடுக்கப்பட்ட முடிவுகள் அரசகருமமொழித் திணைக்கள ஆணையாளருடன் நடத்திய ஆலோசனையுடன் தான் எடுக்கப்பட்டதாக தபால் மா அதிகாரி கூறியிருக்கிருர்.

## ஆணையாளரிடம் நியாயம் கிடைக்குமா?

அரசகரும மொழித்திணைக்கள ஆணையாளரின் நோக்கம் என்ன என்பது தமிழ் பேசும் மக்களுக்கு நன்கு தெரியும். இந்நாட்டிலிருந்து தமிழ் மொழியை வேரறுப்பதையே நோக்கமாக கொண்டுள்ள அரசகரும மொழித்திணைக்கள ஆணையாளரின் ஆலோசனையின் பேரில் செய்யப்பட்ட முடிவுகளில் எப்படி தமிழ் பேசும் மக்கள் நியாயத்தை எதிர்பார்க்க முடியும்?

'மத்திய வங்கி' என்ற தூய தமிழ்ச் சொல்லை பாதுகாக்க அரசகருமமொழித் திணைக்களத்துடன் எவ்வளவு தூரம் போராட வேண்டியிருந்தது என்பதை தமிழ் பேசும் மக்கள் மறந்திருக்க முடியாது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தானும், புதிய சுற்றிக்கையின் படி தமிழுக்கு தகுந்த இடந்தரப்படாதது ஒரு புறமிருக்க, வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களில் தமிழுக்கு இடமேயளிக்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏழு மாகாணங்களில் வாழும் எந்த ஒரு தமிழ் பேசும் பிரஜையும் தனது அஞ்சற் தொடர்புகளை அஞ்சற் திணைக்களத்துடன் தமிழில் வைத்துக் கொள்ள முடியாத நிலையை புதிய சுற்றறிக்கை எற்படுத்தியுள்ளது.

காரை நகரிலுள்ள ஒரு தமிழன் காலியிலுள்ள தன் உறவினருக்கு ஒரு காசுக் கட்டளை அனுப்புவதானல் தமிழில் அனுப்ப முடியுமா? இதற்கு சுற்றறிக்கை விளக்கம் தரவில்லை.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

ஆனல் காலியில்வாழும் தமிழன் காரைநகரில் உள்ள இன்னெரு தமிழனுக்கு நிச்சயமாக தமிழில் ஒரு காசுக் கட்டளை அனுப்ப முடியாது; இதை மட்டும் உறுதிப் படுத்துகிறது சுற்றறிக்கை.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களில்வாழும் தமிழ் பேசும் மக்களும் அரசாங்கத்துடனன தங்கள் நிர்வாகத் தொடர்பை தங்கள் மொழியிலேயே வைத்துக் கொள்ளலாம் என்பது தேசிய அரசாங்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட மொழிக் கொள்கையாகும்.


தேசியஅரசாங்கத்தின் இந்தக் கொள்கையை புதைகுழிக்கு அனுப்ப வழிவகுக்கிறது அஞ்சல் மாஅதிகாரியின் சுற்றறிக்கை.

இது விஷயத்தில் தபால் அமைச்சர் உடனடி கவனம் செலுத்தி தமிழ்பேசும் மக்களை புண்படுத்தும் இச் சுற்றறிக்கையை வாபஸ்வாங்க உத்தரவிடுவாரென்று நம்புகிறோம்.

# கமிஷன் வேண்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரத்தின் மரணம் கொலையென்று நீதவானல் தீர்ப்புக் கூறப்பட்டிருப்பதால், பொலிசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், கடத்தல் காரர்களையொழிக்க கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும் பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகம் கடத்தல் காரரோடு சம்பந்தப்பட்டிருப்பதால், ஒரு பகிரங்க கமிஷன் வைத்து விசாரிக்க வேண்டுமென்றும், கொழும்பில்தான் கடத்தல் காரர்களின் தலைமை நிலையம் இருக்கிறதென்றும், பிரதமர் இது பற்றி தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரை

ஐயா சலாமுங்க! என்னங்க ஐயா? இன்னும் அரிசி கெடக்கல, போனக் கெழமத்தான் சல்லி கொடுத்துட்டுப் போனேன். இன்னும் எத்தனை நாளேக்கய்யா இப்படியே பட்டினியில சாகிறது.

—இதயத்தில் வேதனை; குரலிலே ஏமாற்றத்தின் விரக்தியும் நடுக்கமும்.

காலத்தின் விரிசலால், வாழ்க்கையின் ஏமாற்றத்தால் சினுக்கலிட்டுச்சுருங்கிய—கண்கள் ஆழப் புதைந்துக் கிடந்த முகத்தில், முத்துக்களாய் அரும்பி நின்ற வியர்வையைத் தலைப்பாகையை அவிழ்த்துத் துடைத்துக் கிடந்தார் சிதம்பரம்.

சிதம்பரத்தின் விண்ணப்பத்தைக் கேட்டு, 'அடடா...இன்னும் கொடுக்கலியா. சரிப் பயப்படாதிங்க...உடனே தந்தி ரெண்டு 'அடிச்சி' தாரேன். போட்டிங்கன நாளேக்கு தவராம அரிசிக் கொடுப்பாங்க' என்றுர் பிரதிநிதி.

எப்படியாவது முடிச்சிடுங்க. எத்தனை நாளேக்குங்க சமாளிக்கிறது. மாசம் ஆருது. ஓம்போது புள்ளங்கள வச்சுக்கிட்டு நா என்னங்க பண்ணுறது'—இதயத்தின் வேதனை அவரது குரலிலே பீறிடுகின்றது; தெய்வத்திடம் தன் குறையைச் சொல்லும் தோரணையில் வார்த்தைகள் வெளி வருகின்றன.

'பயப்படாதிங்க. இன்னேக்கு முடிச்சிடுறேன்.'

தன்முன் விரிந்து கிடக்கும் 'ஃபைலில்' மூழ்குகின்றுர் பிரதிநிதி. அவருக்கு முன்னே ஆறடி நீள, மூன்றடி அகல மேசை—அதன்மீது, 'ஃபைல்'களும் தட்டெழுத்து யந்திரம், எழுதும் காகிதங்கள், மசி—இத்தியாதியும் குவிந்துக் கிடக்கின்றன. அவருக்கு இருபுறமும், இழுப்பறைகள் இழுத்தப்படி — உள்ளிருக்கும் பொருட்கள் எடுத்தது, எடுத்தப்படி அலங்கோலமாகக் கிடக்கின்றன.

—இடக்கரத்தின் விரலிடுக்கிலிருந்த 'சிகரட்'டை இழுத்து, புகையை வேகமாக வெளியே தள்ளிய வண்ணம் தன் வேலையில் மூழ்கிவிட்டார் பிரதிநிதி.

தன்னுடைய வேலையைத் தான் கவனிக்கிறுர் என்ற திருப்தியில் நிம்மதியுடன் பெருமூச்சி விட்டவாறே, கோட்டுப் பையிலிருந்த ஒரு துண்டு புகையிலையைக் கிள்ளி தன் வாயோரம் சுற்றித் துடைத்து, வாயினுள்ளே, போட்டவாறே 'பிரதிநிதி ஐயா' எழுதுவதையே உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றுர்.

நேரம் சென்று கொண்டே இருக்கின்றது; நேரம் செல்லச் செல்ல அவருக்கே சந்தேகம் வந்து விட்டதோ, என்னவோ தெரியவில்லை. 'ஐயா நமக்கு தானுங்களே எழுதுறீங்க.'

'இல்ல...இல்ல...இது வேற வொரு முக்கிய விசயம். கொஞ்சம் பொறுத்துக்கங்க. ஒங்க வேலைய முடிச்சுத் தர்றேன்.'

என்னமோங்க...எப்படியாவது முடிச்சிட்டீங்கன நல்லதுங்க.'

'கவலப்படாதீங்க...நாங்க இருக்கிறதே அதுக்குத்தானுங்களே. தொழிலாளருக்கு பாடுபடதானே. இல்லாட்டி எதுக்கு இவ்வளவு பெரிய ஆபீஸ் வச்சிக்கிட்டு, மூனு நாலு பேருக்கு வேலக் கொடுத்து வச்சிருக்கோம்... ...இந்தா பாருங்க, இன்னும் மூனு நாலு மாசச் சம்பளம் வரல்ல. சம்பளம் இல்லாம எதுக்கு இப்படி கஷ்டப் படறோம். உங்களப் போல தொழிலாளிக படும் துன்பத்த தொடக்கிறக்குத்தான்...'

ஒரு நீண்ட சொற்பொழிவே ஆற்றிவிட்டார்.

'அட நம்பலாவது வேலையே இல்ல. இவுங்க, வேல செஞ்சும் சம்பளம் இல்லாம இல்ல கஷ்டப்படுராங்க. உண்மை தான். இல்லாட்டி ஏன் இந்த வேலைய செய்யனும்...பிரதிநிதி ஐயா விட்டுட—மாட்டாரு. எப்படியும் இன்னிக்கு முடிச்சிடுவாரு.'

பிரதிநிதியின் சேவையை எண்ணியவண்ணம் அவரையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தவர், அவருக்கு மேலாக தலையை நிமிர்த்தினர்.

பிரதிநிதியின் தலைக்கு மேலாக சுவரிலே மாட்டப்பட்டிருந்த மகாத்மா காந்தியின் பெரிய மூவர்ணப் படத்தை நோக்குகின்றுர்; மகாத்மாவின் பொக்கை வாய் சிரித்துக் கொண்டிருந்தது. சிதம்பரம் அதில் ஐக்கியமாகி விடுகின்றுர். 'நம்ம இந்தியாவுக்காக பாடுபட்ட புண்ணியவானுள்ள.'

அதைப்பார்த்தமறுகணமே, அவரது பார்வை அடுத்திருந்த படத்தில் தாவுகின்றது.

நேரு—சிந்தனையில் மூழ்கிய நிலையில் காட்சிதந்தப் படத்தை பார்க்கின்றுர்; எப்போதோ ஒருமுறை நேரு இலங்கைக்கு வந்தப்போது, ஒரு வரவேற்புக் கூட்டத்தில் தானும் கலந்துக் கொண்டு, 'ஜே' போட்டது நினைவுக்கு வருகின்றது; மனம் அந்த நிகழ்ச்சியை ஒரு கணம் அசை போட்டுப் பார்க்கின்றது.

அங்கே, மாட்டப்பட்டிருந்த ஒவ்வொரு படமாகப் பார்த்துக் கொண்டே, வந்தவர், ஒரு பக்கத்தில் மாட்டப்பட்டிருந்த அறிக்கை அட்டையைப் பார்த்தவர், அதன் ஒரு பகுதியை நோக்கியதும் தன் நெற்றியைச் சுருக்கி, இமைகளைக் குறுக்குகின்றுர். அங்கே—'தனியொருவனுக் குணவிலையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதியின் பாடல் பொறிக்கப்பட்டிருந்தது—எதோ ஒரு தோட்டத்தில் நடக்கவிருக்குமொரு 'போராட்டத்திற்காக' ஒட்டப்பட்டிருந்த பிரசுரத்தில், மேற்கோளாக அச்சடிக்கப்பட்டிருந்தது.

'அடடா...எப்பிடி சொல்லி இருக்கிறுன்.' ஒருவனுக்கு உணவுவில்லாடி இந்த உலகத்னதயே அழிச்சிடனுமுனு. அட, எவ்வளவு இரக்கம்... ...எவ்வளவு ஒத்தும மத்தவங்க மேல.'

எங்கெங்கோ சென்ற அவரது சிந்தனை தடைப்பட்டு அந்த 'ஆபீஸை' வட்டமிட்டது: 'இங்கக்கூட எல்லாத்துக்கும் 'அதுல' ஒத்தும போவ இருக்கு. இல்லாட்டி இதெல்லாம் ஓட்டுவாங்கலா. காந்திமகான், சவர்லால் நேரு...படம்லாம் மாட்வாங்கலா...நம்ம பிரதிநிதி ஐயாவும், நல்லவருத்தான். இல்லாட்டி மூனு, நாலு, மாசமா சம்பளமில்லாம கஷ்டப்படுவாங்களா...நம்ம பிரச்சனைய விட்டுப்புட மாட்டாரு...எப்படியாவது முடிச்சி அரிசி வாங்கிக் கொடுத்துடுவாரு. எப்படியும் அரிசி கெடைச்சிடும்.!

நெஞ்சத்தில் நம்பிக்கை நிறைய, கண்கள் பரவசத்துடன், மீண்டும் ஒருமுறை 'ஆபீஸ்' சுவர்களை நோட்டமிடுகின்றுர்; அவரது மனதிலும், காந்தி, நேரு உருவங்கள், பாரதியின் வாக்கியங்கள் மாறி மாறி தோன்றி கொண்டே இருக்கின்றன.

●

உழைப்போ, ஊதியமோ இருந்தால் தானே உண்ண முடியும். உழைப்பிற்கே வழியில்லையேயல், ஊதியமேது,? உணவேது? உழைப்பில்லை என்றுலும் சில நாட்களை 'சமாளிக்கலாம்.' ஆனுல் எத்தனை நாட்களுக்குத்தான் சமாளிக்கமுடியும்?

ஆறு மாதங்கள்—எத்தனை நாட்கள்! அதுவும், ஒருவரா, இருவரா? தன்னேடு தன் மனைவி, மக்களையும் சேர்த்து பதினொரு பேரு உண்ணவேண்டும்...இன்று விடம் போல ஏறி இருக்கும் விலை வாசிக்கு பரவம் பரிதவித்தார் சிதம்பரம்.

## இராஜ்-மகேச் செல்வன்

தொழிற் தகராறென்றுல், தோட்டத்தில் வேலை நிறுத்தி ஆறுமாதமாகப் போகின்றது- -மாதம்தான் ஆருகியதே தவிர அந்தப் பிரச்னையும் தீரவில்லை; வேலையும் கிடைக்கவில்லை.

வேலைதான் கொடுக்க தோட்ட நிர்வாகம் மறுத்து விட்டதென்றுல், பங்கீட்டு அரிசியும் கொடுப்பதைநிறுத்தி விட்டது; 'கைகாசு'க்குக் கூட இணங்கவில்லை. இந்த நிலையில் அவரால் தான் என்ன செய்ய முடியும்?

தான் அங்கம் வகிக்கும் அந்த தொழிற் சங்கத்தை நாடினுர். சங்கமும், நிர்வாகத்திற்கு கடிதங்களை 'அடித்து'ப் போட்டு 'நடவடிக்கை'யில் இறங்கியது.

அதற்குள் ஆறுமாதமாகிவிட்டது; நாட்கள் தான் தோன்றித் தோன்றி மறைந்துக் கொண்டிருக்கின்றதே தவிர, வேலைக் கொடுப்பதோ அரிசி வழங்குவதோ, எதுவும் முடிவாகவில்லை.

கடந்த ஆறுமாதமும் எப்படி எப்படியோ ஓடிவிட்டது. கையிலிருந்த எல்லாம் முடிந்தது; மனைவி மக்கள் கழுத்து, காதிலிருந்த 'நகை நட்டு'க்களெல்லாம் ஈடுக் கடைக்கு போயாகி விட்டது.

அவருக்கே 'சீ' என்றுசலித்து விரக்தி ஏற்பட்டு விட்டது. ஒரு பக்கத்தில், தன் நிலையை எண்ணிப் பார்க்க வேதனையாக இருந்தது; மறுபக்கம் தோட்டத்தையும், 'தனது' சங்கத்தையும் நினைக்க ஆத்திர மாத்திரமாக வந்தது. கடைசி முடிவாக, இரண்டிலொன்று கண்டுவிட வேண்டுமென்று போன வாரம்தான் 'ஜில்லா'விற்கு வந்துவிட்டுப் போனுர்.

'என்னங்க ஐயா! முடிவா முடிச்சு தர்ரீங்களா இல்லையா?' என்றே கேட்டு விட்டார்.

'அட வருத்தப்படாதிங்க. எல்லாம் முடிஞ்சுவிட்டது. இந்த மாசத்திற்கு இருபத்தஞ்சு ரூபா கொடுங்க. நானே பணத்தைக் கட்டுறேன். அடுத்த வாரம் அரிசி கொடுத்திடுவாங்க.'

சிதம்பரம், கையில்கொண்டு வந்திருந்த தன் மகளொருத்தியின் கழுத்து சங்கிலியையும் ஈடு வைத்து, கேட்டத் தொகையை 'பிரதிநிதி ஐயா'விடம் கொடுத்துவிட்டுப் போனுர்.

அடுத்த வாரமும் அரிசி கிடைக்கவில்லை. தோட்டத்து 'ஆபீஸி'ல் அதுப்பற்றி 'திருப்தியான' பதில்கிடைக்கவில்லை.

எல்லாம் அவருக்கு குழப்பமாக இருந்தது. மீண்டும் ஜில்லா ஆபீஸுக்கு ஓடிவந்தார்.

'பிரதிநிதி ஐயா'வும் இன்று எல்லாம் முடிந்து விடும் என்று திடமாகக் கூறினுர். சிதம்பரத்திற்கு அவர்மீது நல்ல விசுவாசம். 'மூன்று நாலு மாசமா சம்பளம் இல்லாம கஷ்டப்படுறுருனு, தொழிலாளர் நலனுக்குத்தான். எப்பிடியும் அரிசிக்கு முடிச்சு தந்துடுவாரு' என்று எண்ணிக் கொள்ளுகின்றுர்.

உள்ளத்தில் நம்பிக்கை; அந்த நம்பிக்கை—விசுவாசத்தோடு ஆபீஸை ஒரு முறை சுற்றி நோக்குகின்றுர்—

மகாத்மா, நேரு படங்கள்... ...பாரதியாரின் வாக்கியம்—

எல்லாம் காட்சிகளாய் கண்களில் மோதி உள்ளக் கண்ணுடியில், கருத்துகளாக பரிணமிக்கின்றனர்; ஒருவித பயபக்தி குடி கொள்கின்றது மனதில்; உடல் வெட்டிச் சிலிர்க்கின்றது.

'டாங்'

சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் மணி 12.30 என்பதை சொல்லி ஓய்கின்றது.

'அடே அப்பா! பத்து மணிக்கு வந்தது.'

தலை நிமிர்ந்தார் சிதம்பரம், பிரதிநிதி ஐயாவும், இந்தாங்க எல்லாம் எழுதியிருக்கிறேன். கொண்டுபோயி உடனடியாய் அடிச்சிடுங்க' என்று, தான் 'டைப்' அடித்தத் தந்திப் பாரங்களை நீட்டுகின்றுர்.

சிதம்பரம், நன்றிப் பெருக்கோடு 'மிச்சம் உபகாரங்க' என்று வாங்கிக்கொண்டு வெளியேறுகின்றுர்.

மகிழ்ச்சியோடு சுமை இறங்கிய மனதோடு வேகமாக தபால் நிலயத்தை நோக்கி விரைகின்றுர். அதற்குள் ஒரு நினைப்பு: 'அட இதுல என்னு எழுதியிருக்கிறுருனு தெரியலியே. சரி பரவாயில்ல. என்னு எழுதி இருக்கப்போறுரு. அரிசிக்குத்தான் எழுதியிருப்பாரு.'

தந்தி கொடுக்கவேண்டிய இடத்தில் இரண்டொருவர் நிற்கின்றனர். அவர்கள் தங்கள் வேலை முடிந்து அகன்றதும், தன் தந்திகளை நீட்டுகின்றுர் சிதம்பரம்.

தந்திகளைப் பெற்ற உத்தியோகத்தர் அவற்றைப் பார்த்துவிட்டு, 'என்ன கொழும்புக்கோ' என்று கூறிய வண்ணம், பக்கத்திலிருந்த 'என்ஜியா' யந்திரத்தில் திணிக்கின்றுர்.

அவர் சொல்லியதைக் கேட்டு, 'கொழும்புக்கா?' என்று வாயைத் திறந்தார். கண்களில் ஆச்சரியம்; புரியாத மனுநிலை. தன் குழப்ப நிலை தீர்ந்து, சுயநினைவுக்கு வருவதற்குமுன், 'என்ஜியா' யந்திரத்தின் இலக்கங்களை அழுத்தி, தந்திகளை இழுக்கின்றுர்.

குழப்பத்திலிருந்து, மீண்ட சிதம்பரம் ஐந்து ரூபாய் 'நோட்'டுக்குக் கொடுத்த மிகுதி இரண்டரை ரூபாயையும் ஒரு கணம் வெறித்து நோக்குகின்றுர்.

இவை நடந்து சில விநாடிகள் தான் அந்த உத்தியோகத்தரின் பேச்சிலிருந்து அவர் தமிழர் என்று, தெரிந்துக் கொண்டார். அது அவருக்கு சுலபமாகப் போய்விட்டது.

'ஐயா! இந்த தந்தியில என்னு எழுதியிருக்குனுகொஞ்சம் சொல்லுறீங்களா?'

'இதுலயா? இது ரெண்டும் கொழும்புக்கு...காய்கறி அனுப்பி இருக்கிறதாம். அத வந்து பெற்றுக் கொள்ளாடாம்...என்று இருக்கு. வேறென்றுமில்ல.'

'காய்கறியா?...எனக்கு அரிசியில்லயா வேனும்'—அவரதுஉள்ளத்தில் யாரே தீயைக் கொட்டுவதுப் போலிருந்தது; இந்த உலகமே உருளுவது போல, உலகத்தின் 'உருவத்தைப்' புரிந்துகொள்ள முடியாத குழம்பிய நிலை; கண்களை கட்டிவிட்டாற்போன்ற பிரமை.

செயலற்று நின்ற அவருகில், குப்பைத் தொட்டியொன்று உருண்டு, குப்பைக் கூலங்கள் அங்கு மிங்குமாக சிதறிநாற்றமெடுத்துக்கொண்டிருந்தன. அப்போது தான், கொண்டுவந்துப் போட்ட எச்சில் இலைகளை நாயொன்று சுவைத்துக் கொண்டிருந்தது. சரியாக இரை கிடைக்காத வாட்டம்; எலும்பும் தோலுமாக வயிறு ஒட்டிப்போயிருந்தது. வாலை சுருட்டிக்கொண்டு மருட்சியுடன் நாற்புறம் பார்த்த வண்ணம் இலைகளை நக்கிக்கொண்டிருந்தது. அதையும் உரிமைக் கொண்டாட... ...அப்போதுதான் எங்கிருந்தோ ஓடிவந்த ஒரு கொழுத்த நாய், அதன்மீது தாவியது. அவ்வளவுதான் அது 'வல்' என்று 'தப்பினேம் பிழைத்தோம்' என ஓடியது. தூரத்தில் போய் நின்றுக் கொண்டு குரைத்துக்கொண்டிருந்தது, 'தட்டிப்பறித்த' நாயைப் பார்த்து.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த சிதம்பரத்தின் உள்ளம் வேதனையால்வருந்தி அழுதது. 'வயிறெரிச்சல்' குமுறிக் கொண்டு வந்தது: 'ம்...ஒருத்தனுக்கு சாப்பிட இல்லாட்டி உலகந்தான் கொல்லுது. உலகத்த எப்பிடி கொல்லுறதோ தெரியலே...என்னமோ சொல்லிப்புட்டு பொய்ட்டான்.'

(யாவும் கற்பனே)

எமது சிறுகதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் இனம் தனியரசு நிறுவியது

## வகுப்புக் கலவரத்தின் விளைவு
## நைஜீரியாவில் சம்பவம்

**ஆ**ரசியற் தில்லுமுல்லுகளும், குழப்பங்களும் நிறைந்த 'இருண்ட கண்டம்' என்று வர்ணிக்கப்படும் ஆபிரிக்காவில் சென்ற வாரம் ஒரு புது அரசு தோன்றியிருக்கிறது. கடந்த ஏழு வருடங்களாக நைஜீரியாச் சமஷ்டிக் குடியரசில் இணைந்திருந்த கிழக்குப் பிராந்திய மக்கள், சமஷ்டியிலிருந்து பிரிந்துபோய் 'பையா பரா குடியரசு' என்ற பெயருடன் ஒரு தனி அரசைப் பிரகடனம் செய்திருக்கிருர்கள். ஒரு வகுப்புக் கலவரத்தின் விளைவாகவே இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தைச் செய்துள்ளனர். ஆனல் மத்திய அரசாங்கம் இதனை எதிர்ப்பதுடன் அந்தப் பிரதேசத்தைப் பொருளாதாரத் துறையில் பகிஷ்காரம் செய்துள்ளது.

1963ம் ஆண்டு, கடங்காவை ஷொம்பே ஆட்சி புரிந்த காலத்தில், கடாங்கா கொங்கோவிலிருந்து பிரிந்து செல்ல முயன்றதும், அதனல் யுத்தம் ஏற்பட்டதும் தெரிந்ததே. இந்த சண்டையின் முடிவில் கடாங்கா தனது தனி அரசு உரிமையை இழந்தது. அந்த நிகழ்ச்சிக்குப் பின், ஆபிரிக்க நாடுகளில் அது போன்ற நிகழ்ச்சியொன்று தான் இப்பொழுது தான்நடைபெற்றிருக்கிறது.

நைஜீரியா 1960ம் ஆண்டு பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்றது. இதைத் தொடர்ந்து அங்கு சமஷ்டியாட்சிமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. நைஜீரியா 5 கோடியே 50 லட்சம் மக்களைத் தன்னகத்தே கொண்டது. ஆபிரிக்க நாடுகளிலே அதிக சனத்தொகையைக் கொண்டது நைஜீரியாவே.

உலகெங்கும் நடைபெற்று வரும் இராணுவப் புரட்சிகளுக்கு தான்மட்டும் சளைத்ததல்ல என்பதை கடந்த வருடம் நைஜீரியாவும் எடுத்துக் காட்டியது. இராணுவப்புரட்சி அங்கும் தலை தூக்கியது. பல நைஜீரியத் தலைவர்கள் கொல்லப்பட்டனர். இந்தப் புரட்சியில் நைஜீரியச் சமஷ்டி குடியரசுத் தலைவரான அபூபக்கரும் கொல்லப்பட்டார். இந்தப் புரட்சியின் பலஞக கேர்னல் கோவான் ஆட்சிப்பொறுப்பை யேற்ருர்.

நைஜீரியாவுடன் இணைந்திருந்த கிழக்கு பிராந்திய மக்களுக்குப் பிரிவினை எண்ணம் தீவிரமாகஏற்பட்டதே கடந்த ஆண்டு ஜுலைக்குப்பின்புதான். கடந்த ஜுலை மாதம் ஒருபயங்கர வகுப்புக் கலவரம் முஸ்லிம்களால் ஆளப்படும் வடக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்டது. அந்த இனக் கலவரத்தில் 'இஸாஸ்' என்று அழைக்கப்படும் கிறிஸ்தவர்களான கிழக்கு நைஜீரிய மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். இதன்எதிரொலியாகவே கிழக்குநைஜீரியாவில் பிரிவினை எண்ணம் முகிழ்த்தது. அந்த எண்ணத்தை இன்று செயற்படுத்திவிட்டனர் கிழக்கு நைஜீரியமக்கள்.

கிழக்குப் பிராந்திய இராணுவக் கவர்னரான ஒடுமெக்லூ ஓஜுவு படுகொலை செய்யப்பட்ட இபோக்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் வட பிராந்தியம்நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றும் இல்லாவிடில் கிழக்குப் பிராந்தியம் தனியே பிரிந்து விடுமென்றும் ஏற்கெனவே எச்சரித்து வந்தார்.

ஓஜுக்வு பிராந்தியங்களை இணைக்கும் சமஷ்டி யாட்சி முறையை ஆதரித்தார். ஆனல் கோவனே மத்திய ஆட்சியின் அதிகார வரம்பு கொண்ட ஆட்சியை நிறுவ விரும்பினர். இதைத் தொடர்ந்தே பிளவு விரிவுபட்டது.

கிழக்கு நைஜீரியா பிரிந்து சென்று 'பையா பிரா' குடியரசு என்ற ஒரு தனியமைப் பாகிவிட்டதென்ற செய்தியை கடந்த வாரம் கிழக்கு நைஜீரியாவின் 33 வயதுடைய கவர்னர் லெப்டினன்ட் கெர்னல் ஓஜுக்கோ உலகுக்கு அறிவித்தார். ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற தங்கள் தலைவரின் இந்த அறிவிப்பைக் கேட்ட பின்பு கிழக்கு நைஜீரிய மக்களிடையே குதூகலம் ஏற்பட்டிருக்கிறது.

உதயசூரியன் இலச்சினையிட்ட, கறுப்பு சிகப்பு, பச்சை ஆகிய மூன்று நிறங்களைக் கொண்ட கொடியொன்றையும் 'பையா பிரா' நாடுதனது தேசியக் கொடியாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. 'பையா பிரா' அரசின்கீழ் வரும் பகுதி எண்ணெய் வளம் கொண்டதாகும்.

'பையா பரா' அயல்நாடுகளுடன் தனியாக ராஜ தந்திரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், ஐ. நா. வில் சேர வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

4 ராஜ்சியங்கள் அடங்கியிருந்தநைஜீரியாவை, 12ராச்சியங்களாக்க நைஜீரியாத் தலைவர் திரு. கோவான் முடிவு செய்திருந்த நேரத்தில் கிழக்கு நைஜீரியா தனியே பிரிந்து சென்றது. நைஜீரியாவுக்குள் ஒரு உள்நாட்டு குழப்பம் ஏற்படும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

கிழக்குப் பிராந்தியத் துறைமுகமான ஹல்கோட் துறைமுகத்துக்கு கப்பல்கள் செல்லாமல் தடைவிதிக்கவும் நைஜீரியத் தலைவர் திரு. சோபான் முடிவு செய்துள்ளார்.

இதற்கிடையில் கிழக்கு நைஜீரியா சமஷ்டியிலிருந்து பிரியும் பட்சத்தில் தாமும் பிரிந்து விடுவோமென்று மேற்கு நைஜீரியா பயமுறுத்தியுள்ளது. இப்பொழுது கிழக்கு நைஜீரியா பிரிந்து விட்டதால் இந்த உரிமைஉணர்ச்சிமேற்கு நைஜீரியாவுக்கும் எந்த நிமிடத்திலும் பரவலாம்.

நைஜீரியாவில் ஏற்பட்டுள்ள இந்த அரசியல் நெருக்கடியினுல் அங்கு இரத்தஆறு பெருக்கெடுத்தோடவும் கூடும். ஆனல், நைஜீரிய மக்கள்இதற்குப் பழக்கப்பட்டவர்கள் தாம்.

## மாவட்டக் குழுவின் பணி

ஒரு கட்சியின் மேலிடமும், ஒரு மாவட்டக் குழுவும் சரிசமஞன நிலையில் இயங்கக்கூடியவை. ஆகவே ஒரு மாவட்டம் அதன் குழுவை செம்மையான முறையில் இயக்கி வரும் பட்சத்தில் அந்தமாவட்டத்தில் உள்ள குறைபாடுகளை இலகுவில் போக்க முடியும். என்பது நான் கண்ட உண்மை ஆகவே எமது மாவட்டக்குழு நேர்மையும், கடமையுணர்ச்சியுடனும் சேவை செய்ய வேண்டும்.

இவ்வாறு கடந்த 16-5-67 மாலை தலவாக்கொல்லையில் நடைபெற்ற அப்பகுதி இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் மாவட்டக்குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய கழகத்தின் துணைத் தலைவர் திரு. சாமன் அவர்கள் கூறினர்.

சுமார்300க்கு அதிகமான மாவட்டத் தலைவர்கள், மாதர் முன்னணி உறப்பினர் வாலிபமுன்னணி உறுப்பினர் ஆகியவர்கள் கலந்துகொண்டனர்.

நடப்புவருடத் தலைவராக திரு. சாமன் மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். துணைத் தலைவராக பெ/மட்டுக்கலையைச் சேர்ந்த திரு. பெரமன், செயலாளராக எல்ஜின் தோட்டத்தைச் சேர்ந்த திரு. ராமசாமி ஆகியோரும் 12பேரைக் கொண்ட குழுவும் தெரிவுசெய்யப்பட்டனர்.






## இரண்டு ஆண்டுக்குள்:
# 'இந்திக்குள்ள உரிமை எல்லா மொழிக்கும் வேண்டும் இல்லையேல் மீண்டும் போராட்டத்தில் குதிப்போம்'
## தமிழக மாணவர் தீர்மானம்

**1969**ம் ஆண்டு சனவரி 24-ந் திகதிக்குள் இந்திக்கு கொடுக்கப்பட்டுள்ளது போல இந்தியாவிலுள்ள எல்லா தேசிய மொழிகளுக்கும் ஆட்சி மொழி அந்தஸ்தை உத்தரவாதம் செய்யும் வகையில் அரசியல் சட்டத்தை திருத்தியமைக்க வேண்டும். அப்படிச் செய்ய டெல்லி அரசு தவறினல் மீண்டும் தமிழ் நாட்டு மாணவர்கள் போராட்டத்தில் இறங்குவார்கள்.' இப்படியொரு தீர்மானத்தை தமிழக மாணவர்களின் இந்தி எதிர்ப்பு மாநாடு நிறைவேற்றியுள்ளது.

தமிழக மாணவர்களின் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடு கோடைக்கானலில் இவ்வாரம் நடைபெற்றது. மாநாட்டில் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு, உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இரண்டு நாட்களாக நடைபெற்ற இம்மாநாட்டில் மும்மொழித் திட்டம் இந்தி ஆதிக்கத்துக்கு வழி செய்யுமாகையால், தமிழக அரசு மும்மொழித் திட்டத்தை கைவிட்டு இரு மொழித் திட்ட ஏற்பாட்டை அமுல் செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


இதோ ஒரு
தலைசிறந்த வாய்ப்பு!

சுதந்திரன்

★ நியாயமான கட்டணத்தில்...
★ குறித்த நேரத்தில்...
★ கவர்ச்சியான அமைப்பில்...
★ திறமையான வேலைப் பாட்டுடன்...
★ சகல அச்சுவேலைகளும் உடனுக்குடன் செய்து கொடுப்போம்.

அச்சகம்

சுதந்திரன் அச்சகத்துக்கு நீங்களும் ஒரு சந்தர்ப்பத்தை ஏன் கொடுக்கக் கூடாது?

20 ஆண்டுகளாக பணியாற்றி வரும் அச்சகம்.

194ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு - 12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொடி நடிகை சகீலாவை ஓட விடுவேனு?

இலங்கையில் இப்பொழுது திரையிடப்பட்டுள்ள 'எங்க பாப்பா' கதை என்னிடம் பத்து ஆண்டுகளாகப் பத்திரமாக இருந்து வந்தது.

பூனு வரையில் போய் அக்கதையை வாங்கிவந்த நான் உடனே தமிழில்படமெடுக்க முன் வரவில்லை. காரணம் ஹீரோயினுக நடிக்க நான் நினைத்த அளவுக்குச் சிறுமி அகப்படாததுதான்.

சில ஆண்டுகளுக்கு முன்னுல் பேபி ஷகீலாவைச் சந்திக்க நேர்ந்தது. அவளது நடிப்பும் துடிப்பும் திறமையும் என்னைக் கவர்ந்தன. அவளிடம் ஒருநாள், 'நான் ஒரு படம் எடுக்கப் போகிறேன். அதில் நீதான் ஹீரோயின்' என்றேன்.

'நானு ஹீரோயின்? நிஜமாகவா ஸார்?' என்று விழிகளை விரித்து வியப்போடு கேட்டாள் பேபி ஷகீலா.

'ஆமாம், ஆமாம்' என்றேன்.

'சும்மா சொல்றீங்க!' என்று அவள் சொல்லிவிட்டு ஓடிவிட்டாள்.

அந்தச் சிறுமி என்னை நம்பவில்லை. ஆனுல் அவளை நான் நம்பினேன்! அவள்தான் அந்தப் பூனுக் கதைக்கு ஏற்ற கதாநாயகி என்று உறுதி கொண்டேன். அவளைக் கதாநாயகியாகப் போட்டு 'எங்க பாப்பா'வைப் படமாக்கினேன்.

படப்பிடிப்பின் பொழுது பேபி ஷகீலா நான் எதிர்பார்த்ததைவிடப் பிரமாதமாகச் சில காட்சிகளில் நடித்தாள். ஒரு தடவை அவளுக்கு முன்னுல் குறிப்பிட்ட காட்சிக்குரிய வசனத்தைப் பேசிக் காட்டி

**பி. ஆர். பந்துலு**

விடவேண்டியதுதான், உடனே அப்படியே அவள் அபாரமாகத் திருப்பிப் பேசித்திருப்தியோடு நடித்துவிடுகிருள்! அது அந்தக் குழந்தைக்கு ஒரு வரப்பிரசாதம்!



எங்க பாப்பாவில்' எம். வி. இராஜம்மா, குட்டி நடிகை சகீலா, பாரதி

ஆனுல் படப்பிடிப்புக்கு நடுவே என்ன இருந்தாலும் சிறுமிதான் என்பதைச் சில சமயங்களில் காட்டி விடுவாள். அப்பொழுதெல்லாம் ஏற்கெனவே அவளுக்கு என்று வாங்கித் தயாராக வைத்திருக்கும் பிஸ்கெட் சாக்லேட் போன்றவைகளை எடுத்து அவளுக்கு முன்னுல் நீட்டிச் சமாளிக்கவேண்டியதிருந்தது! இன்னும் சில சமயங்களில் திடீரென்று குழந்தைத்தனமாகப் படப்பிடிப்பு அறையிலிருந்து காணுமற் போய்விடுவாள்! பலர் பல இடங்களில் தேடி அவளைக் கண்டுபிடிக்கநேர்ந்திருக்கிறது. ஆனுலும் முன்பெல்லாம் தமிழ்ப் படத்தில் நடிக்க ஒரு குழந்தை நட்சத்திரத்திற்காகவடக்கே படையெடுக்கவேண்டியிருந்தது. தேடிக்கண்டுபிடிக்கவேண்டியிருந்ததே! இப்பொழுது பேபி ஷகீலா அந்தச் சிரமத்தைக் குறைத்திருக்கிருள் அல்லவா?

'எங்க பாப்பா' படம்முடிவடைந்தது. பேபி ஷகீலாவுக்குப் படத்தைப் போட்டுக்காட்ட விரும்பினேன். 'படம் பார்க்கறியா?' என்று கேட்டேன்.

'நானு ஸார்? நான் என்ன எம். ஜி. ஆரா, சரோஜா தேவியா? படம் போட்டுப் பார்க்க'' என்று டக்கென்று கேட்டு விட்டு ஓடிவிட்டாள் ஷகீலா.

அவள் அப்பொழுது என்னவோ ஓடினுள், ஆனுல் என் மனத்தை விட்டு ஓடவில்லை! பத்து ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த கதைக்கு உயிர் கொடுத்த ஒப்பற்ற நட்சத்திரமாயிற்றே அவள்! அவளை ஓடவிடுவேனு?



'செல்வம்' படத்தில் ரங்கராவ், சிவாஜி கணேசன்.

# விஜயகுமாரியை 'பழி' வாங்கினுர் ஜெமினிகணேசன்

சாரதா ஸ்ருடியோவில் ராஜலட்சுமி பிக்சர் சாரின் 'சீதா' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த சமயம் சாவித்திரி அதில் வக்கீலாக நடித்துக் கொண்டிருந்தார்.



அதே ஸ்ருடியோவிலிருந்த விஜயகுமாரி சாவித்திரியைக் கண்டு பேசிக் கொண்டிருந்த சமயம் அங்கே ஜெமினி கணேசன் வந்து சேர்ந்தார். அவரைப்பார்த்த விஜயகுமாரி 'அடே அப்பா அதுக்குள்ளே இங்கே வந்து, ஒரு தடவை சாவித்திரியம்மாவைப் பார்க்கணுமோ?' என்றூர்.

இப்படிப் பேசிக் கொண்டிருந்தபோது அங்கே எஸ். எஸ். இராசேந்திரனும் வந்து விட்டார். 'விஜி, நீ, இங்கேயா இருக்கே?' என்றூர்.

அவ்வளவு தான். ஜெமினி கணேசனுக்கு பிடி கிடைத்து விட்டது. விஜயகுமாரியிடம், 'பார்த்தீர்களா? இக்கரைக்கு அக்கரை பச்சை. உங்களைத் தேடி அவர் வந்திட்டாரு இதுக்கு என்ன சொல்றீங்க?' என்று கேட்ட போது அங்கு பலத்த சிரிப்பு எழுந்தது.



# சிவாஜி தலைமையில் நடன அரங்கேற்றம்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தலைமையில் செல்வி. துஷித்தா திருநாவுக்கரசுவின் நடன அரங்கேற்றம் இம்மாதம் 12ந் திகதி கொழும்பில் நடைபெற இருக்கிறது.



இந்நடன அரங்கேற்றத்துக்கு, தலைமை வகிப்பதற்காக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 12ந் திகதி கொழும்பு வருகிருர் என்று தெரிகிறது.

நடிகை கே. ஆர். விஜயாவுக்கு எதுவுமே தவருகத் தோன்ருது. மிகப் பெரிய விஷயங்களைக்கூட சாதாரணமாக எடுத்துக்கொள்வார். தவறு என்று நினைத்து விட்டால், தவறே இல்லாத விஷயத்தைக்கூட தவறு என்று பலமாக வாதிடுவார். [illegible] படத்தில் எப்போதும் எளிமையாகவே பழகுவார். சிரிக்காமல் அவரால்பேசவே முடியாது

# திரைவாணன் பதில்கள்

ஆர். பாலகிருஷ்ணன் மாத்தளை

கே: சரோஜாதேவி தற்போது எத்தனை படங்களில் நடித்துக் கொண்டிருக்கிருர், அவர் நடித்து அடுத்து வெளிவரவிருக்கும் படம் எது?

ப: தற்போது ஏ. எல். எஸ். தயாரிக்கும் 'பெண் என்ருல் பெண்' படத்தில் தேவி நடிக்கிருர். அவர் நடித்த 'அரச கட்டளை' தமிழகத்தில் இப்போது திரையிடப்பட்டிருக்கிறது.

கே: சிவாஜிக்கு என்னென்ன மொழிகள் தெரியும்?

ப: தமிழ், ஆங்கிலம். இந்தி சுமாராகப் பேசுவார்.

ஃ

எம். ஐ. ஜானெட், மருதமுனை.

கே: நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஏன் தேர்தலில் போட்டியிடுவதில்லை?

ப: சிவாஜி புத்திசாலி! தேர்தலில் போட்டியிட்டு தனது செல்வாக்கை குறைத்துக் கொள்வதை அவர் விரும்புவதில்லை;

ஃ

ஆர். பாலகிருஷ்ணன், மாத்தளை.

கே: ஒரு படத்தில் சிவாஜி கணேசன் கதாநாயகனுகவும், எம். ஜி. ஆர். வில்லனுகவும் நடித்தால் அப்படம் சோபிக்குமா?

ப: சோபிக்காது. சிவாஜியால் மட்டுமே வில்லனுகவும் நடிக்க இயலும். எம். ஜி. ஆர். வில்லனுக நடித்தாலும் அவருடைய நடிப்பை அவருடைய ரசிகர்கள் ஒருபோதும் வரவேற்க மாட்டார்களே!

ஃ

ஞா. சாந்திர சேகரம், ஏருவூர்.

கே: நடிகர் திலகத்திற்கு பத்மஸ்ரீ பட்டம் பொருந்தாது என்று ஒரு ரசிகர் எழுதி இருந்தார். உண்மையிலேயே அது அவருக்குப் பொருந்தாதா?

ப: பத்மஸ்ரீ பட்டத்துக்கும் நடிப்புத் திறனுக்குடம் சம்பந்தமேயில்லையே. சிவாஜிகணேசனுக்கு 'நடிகர் திலகம்' என்ற பட்டம் பொருந்துவது போல வேறு எந்தப் பட்டமும் பொருந்தும் என்று நான் நினைக்கவில்லை.

ம. இராசரத்தினம், திருவையாறு.

கே: நான் எம். ஜி. ஆரின் கொள்கையைப் பாராட்டுகிறேன். நடிப்புலகில் அவரை வெறுக்கிறேன். என்னைப்பற்றி எம். ஜி. ஆர். என்ன நினைப்பார்?

ப: உங்கள்மனத்திலிருப்பதை வெளிப்படையாகச் சொன்னதற்கு உங்களைப் பாராட்டுவார். அவரது நடிப்பை ஏன் நீங்கள் வெறுக்கிறீர்கள் என்பதையும் தெரியப்படுத்தினுல் அதிக மகிழ்ச்சியடைவார்.

ஃ

ஆனந்த சுப்பிரமணியம், நீர்கொழும்பு.

கே: நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஜெயலலிதாவை இழுத்து காதல் செய்யவே மாட்டாரா?

ப: மாட்டார். நடிகர்களுடன் காதல் காட்சிகளில் தொட்டு நடிப்பதில்லையென்று சமீபத்தில் தான் உறுதி பூண்டுள்ளார் நடிகர் திலகம்.

ஃ

சு. தவராசா, நாவலப்பிட்டி.

கே: இந்த ஆண்டில் எந்தப் படம் தங்கப் பதக்கம் பெற இருக்கிறது?

ப: நான் இந்திய ஜனதிபதியல்லவே!

ஃ

ஜி. நிர்மலராஜன், பருத்தித்துறை.

கே: தன்மீது வீண் வதந்திகளை பரப்புவோர்மீது சிவாஜி என்ன நினைப்பார்?

ப: தன்னைப்பற்றி வதந்தியைப் பரப்பியாவது சிலர் பிழைத்துப் போகட்டுமே என்று அலட்சியமாக இருந்துவிடுவார்.

கே: எவ்வித நடிப்பிலும் சிறப்பாக நடிக்கக்கூடிய நடிகர் யார்? நடிகை யார்?

ப: தெரியாமல் தான் இக்கேள்வியை கேட்டிருக்கிறீர்களா? நடிகர் திலகமும், நடிகையர் திலகமுமேதான்.

திரைவாணன்,
சுதந்திரன் கலைப்பூஞ்சோலை,
த. பெ. இல. 1183,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'மீன் பிடிப்பதில் ஆர்வமுண்டு' மெல்லிசை மன்னர் அளித்த பதில்கள்

(இன்றைய தமிழ்ப்படங்களில் இசை மன்னனாக விளங்கும் மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன் அளித்த பதில்கள் இங்கு இடம்பெறுகின்றன.)

கே: நீங்கள் இசை இயக்குநராக பணியாற்றிய முதற்படம் எது?

ப: முதற்படம் சந்திரா பிக்சர்ஸ் ஜெனேவா. வெளி வந்தது 'பணம்.'

கே: இசைத்துறையில் நீங்கள் யாரிடம் பயிற்சி பெற்றீர்கள்?

ப: கானனூர் நீலகண்ட பாகவதரிடம்.

கே: சினிமாவுக்கு வருமுன்பு என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

ப: 'பாய்ஸ்' கம்பெனியில் நடிகராக இருந்தேன். ஜுபிடரின் கண்ணகியில் 'பாலமுருகனாக' நடித்தேன்.

கே: யார் எழுதிய பாட்டுக்கு முதன் முதலாக இசையமைத்தீர்கள்?

ப: ஜெனேவா படத்துக்கு ரமணி எழுதிய பாடலுக்குத்தான் முதன் முதலாக இசையமைத்தேன்.

கே: இராமமூர்த்தியுடன் சேர வேண்டிய அவசியம் என்ன?

ப: 'வேலைக்காரி' படத்தின்போது இந்த யோசனை கூறப்பட்டது.

கே: நீங்கள் என்னென்ன வாத்தியங்கள் வாசிப்பீர்கள்?

ப: ஹார்மோனியம், பியானோ.

கே: பாடலுக்கு எப்படி மெட்டு ஏற்படுத்துவீர்கள்?

ப: ஹார்மோனியத்தில் வாசித்துப் பார்த்து கற்பனை செய்வேன். பியானோவிலும் மெட்டு அமைத்துப் பார்ப்பதுண்டு.

கே: யார் பாடிய பாடலுக்கு முதலில் இசையமைத்தீர்கள்?

ப: ஜெனேவா படத்தில் பி. லீலாவின் பாடலுக்கு.

கே: இசைத்துறையில் உங்கள் முதல் அனுபவம் என்ன?

ப: சென்ட்ரல் ஸ்டுடியோவில் எஸ். எம். சுப்பையா நாயுடுவுடன் வேலை செய்த பொழுது எனக்கு உற்சாக மூட்டி, மெட்டமைக்க சந்தர்ப்பம் தந்தார். ஜுபிடரின் 'அபிமன்யு' தயாராகி வந்தபோது ஜீவரத்தினத்தின் 'புது வசந்தமே வாழ்விலே' என்ற பாட்டிற்கு ஆர்மோனியம் வாசிக்க வாய்ப்பு கிடைத்தது.

கே: உங்கள் மெட்டை எந்த பின்னணிப் பாடகி அல்லது பாடகர் சுலபமாக கிரகித்துக் கொள்வார்?

ப: எல்லாப்பாடக பாடகியருமே ஒத்துழைப்பார்கள்.

கே: உங்கள் மனைவி நீங்கள் இசையமைப்பில் கவனம்செலுத்துவதை ஒரு தொல்லையாக கருதியதுண்டா?

ப: இல்லை. ரசிக்கும் தன்மை உண்டு. ரசிக்கும் தன்மை சங்கீத ஞானத்தை விட பெரியது. எனது மனைவிக்கு சிறுவயதிலிருந்தே ரசிகத்தன்மையிருந்து வந்திருக்கிறது.



ரவிச்சந்திரனும், தங்கவேலுவும், பாரதியும் இப்படி காட்சியளிப்பது 'எங்க பாப்பாவில்' தான்!

கே: உங்கள்குழந்தைகளுக்கு சங்கீதத்துறையில் பயிற்சியளிக்கும் திட்டம் உண்டா?

ப: அவர்கள் இப்போது படிப்பில் அக்கறைசெலுத்துகிறார்கள். நன்றாகப் படிக்கிறார்கள். யாருக்கு சங்கீதத்தில் பற்று என்பது இன்னும் தெளிவாகவில்லை. பெரியவனுக்கு 10 வயசு.

கே: உங்களின் பொழுது போக்கு என்ன?

ப: மீன் பிடிப்பதில் ஆர்வமுண்டு. சினிமாப் படங்களை பார்ப்பேன். ஒரு படத்தையும் விடுவதில்லை. ரேடியோ நிறைய கேட்பேன். தமிழ் பாட்டுக்கள் இல்லாதநேரங்களில் வேற்று மொழி இசைகளைக் கேட்பேன்.

கே: பிறநாட்டிசையின் மெட்டுக்களை ஆராய்வீர்களா?

ப: இசைக்குநாடுபேதமே கிடையாது. பிறநாட்டு இசை, நம் நாட்டு இசையென்று சொல்வது தவறு. உலகமே இசை. காற்று, மழை, அனைத்திலும் இசை உள்ளது. எல்லா இசைகளையும் ரசிக்கும்சக்தி தென்னிந்தியனுக்கு மட்டுமேயுண்டு, என்பது பெருமைப்படக் கூடிய விஷயம்.

## 'ஜெய்' வயிற்றில் இடமில்லை!

விஜயலட்சுமியும் - விஜய குமாரியும்பரிமாறஜெய்சங்கர், அசோகன், சுந்தரராஜன் ஆகிய மூவரும் சாப்பிடும் காட்சியொன்று 'பவானி' படத்துக்காக துரிதமாக எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

இடைவேளைக்குள் இக்காட்சியை எடுத்து முடிக்க வேண்டுமென்று மும்முரமாக முயன்று கொண்டிருந்தார் டைரக்டர் ராமண்ணா. முதலில் ஜெய்சங்கருக்கு விஜயலட்சுமி சாம்பார் போடும் காட்சி மூன்று முறை எடுக்கப்பட்டது.

மோர் போடும் காட்சி வந்த போது. 'இனிமேல் என்னால் முடியாது. இடை வேளைக்குப் பிறகு தான் இதை வைத்துக் கொள்ள வேண்டும்' என்று எழுந்து விட்டார் ஜெய்சங்கர்



ஏன் என்று கேட்ட போது 'எனக்கோ நல்ல பசி. இன்று சமையலும் நன்றாக இருந்தது. அதனால் ரீடேக்குகளின் போது வயிறு நிரம்பச் சாப்பிட்டுவிட்டேன் இனி வயிற்றில் இடமில்லை' என்று விளக்கம் கூறினார் ஜெய்சங்கர்.

வீட்டில் இருந்தாலும், படப்பிடிப்பில் இருந்தாலும். 'பைஜாமா'வோடு சாதாரணமாகத் திரிபவர் எம். ஆர். ராதா. அதைப்போலவே நடிகர் ஜெமினி கணேசன் [illegible] சிறு பிள்ளை மாதிரி காரில் போய்க் கொண்டிருப்பார்.



'அன்பே வா' வண்ணப்படத்தில் எம். ஜீ. ஆர். சரோஜா தேவி. இப்படம் விரைவில் சினிமாஸ் திரைக்கு வரவிருக்கிறது.

திரை விமர்சனம்:


# செல்வம்

சோதிடத்திலும், ஜாதகத்திலும், கிரகங்களிலும் வைத்திருக்கும் மூடநம்பிக்கை ஒரு நல்ல குடும்பத்தை எப்படி ஆட்டி வைக்கிறது என்பதை வி. கே. ஆர். பிக்சர்ஸ் 'செல்வம்'படத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறார் கே. எஸ் கோபாலகிருஷ்ணன்.

சோதிடத்தில் ஒரு குடும்பம் வைத்துள்ள நம்பிக்கையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயற்சிக்கும் ஒருவன் சோதிடர்களை அழைத்து வந்து பொய் சொல்ல வைக்கிறான். இறுதியில் அவன் விதைத்த வினைக்கு அவனே பலியாகிறான்.

ஆனால் ஒன்று. உண்மையாக, சரியாக, சோதிடம் பார்த்து சொல்பவர்கள் கவலைப்படத்தேவையில்லை. தங்கள் லாபம் கருதி சோதிடத்தை விற்றுப்பிழைப்பவர்களுக்கே கே. எஸ். ஜி. நல்ல 'அடி' கொடுத்துள்ளார் இப்படத்தில்.

பணக்கார வீட்டுப் பிள்ளை 'செல்வமாக' வரும் சிவாஜி கணேசன் தனக்கே உரிய முறையில் வெகு அனாயாசமாக நடித்திருக்கிறார். படம் முழுவதும் அவரது நடிப்புச் செல்வம் சிதறிக் கிடக்கிறது.



டாக்டரிடம் தன் விரகதாபத்தை சொல்ல முடியாமல் தவிக்கும்கட்டத்திலும் தாயிடம் அகப்பட்டு முழிக்கும் கட்டத்திலும் அவரது நடிப்பு பிரமாதம்.

சிவாஜிக்கு ஜோடியாக முதல் முறையாக இப்படத்தில் நடித்திருக்கும் விஜயா, அவரதுநடிப்புக்கு ஈடு கொடுக்க முயற்சித்திருக்கிறார். ஆனால் பத்மினியைப் போல நடித்தால் தான் சிவாஜிக்கு ஈடுகொடுக்க முடியும் என்று விஜயா ஏன் கருத வேண்டும்?

சகஸ்ரநாமம், நாகையா, ரங்கராவ் போன்ற பழம்பெரும் நடிகர்கள் எல்லோரும் படத்தில் வருகிறார்கள்.

எம். வி. இராஜம்மாவின் அம்மா நடிப்பு வழமை போல!

பாட்டுக்களில் 'அவளா சொன்னாள்' நன்றாக இருக்கிறது.

சிவாஜியின் நடிப்புச் செல்வம் இருக்கும் போது செல்வத்துக்கு என்ன குறைச்சல்?

—மகேஸ்

## மாதவியின் நீச்சல் அனுபவம்

சில நாட்களுக்கு முன்னால் தேனாம் பேட்டையிலுள்ள நீச்சல் பயிற்சி பெறும் குளத்தில் நான் நீந்திக் கொண்டிருந்த போது, பல கல்லூரிப் பெண்கள் கரை முழுவதும் கூடிவிட்டார்கள்.

எனக்குப் பயிற்சி தந்த ஆசிரியர் 5 அடி ஆழத்தில் என் கைகளைத் தனியாக விட்டு விட்டு கரையேறி விட்டார். அதிகமான ஆழத்தில் தவித்து விடப்பட்டதாக எனக்குத் தோன்றியது. தண்ணீரில் தத்தளித்தேன். சரியாக நீந்த முடியாமல் தண்ணீருக்குள் ஒரு சில நிமிடங்கள் மூழ்கி விட்டேன். அதற்குள் கரையிலிருந்த கல்லூரிப் பெண்கள் எனக்கு ஆபத்து வந்துவிட்டதாக கருதி விட்டார்கள். என் பெயரைச் சொல்லிக் கூவினார்கள்.

அந்தக் கூவலுக்கு நடுவே, இப்படியும் சில குரல்கள் கேட்டன. 'மாதவி நீ தண்ணீரில் மூழ்கிப் போய் விடாதே உன்னோடு சேர்ந்து நடிக்கும் காமிக் ஜோடி நாகேஷ் நீ இல்லாமல் தவித்துப் போவார்'

நான் சிரித்துக் கொண்டே மெல்லத் தலையைத் தூக்கினேன் எப்படியோ சிரமப்பட்டு நீந்திக் கரையை வந்தடைந்தேன்.

ஈர உடைகளை களைந்து மாற்றுடை அணிவதற்குள் கல்லூரிப் பெண்கள் என்னைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். 'இப்படியெல்லாம் நீந்தினால்



உங்களுக்கு ஜலதோஷம் பிடிக்காதா!' என்று கவலையோடு கேட்டுவைத்தார்கள். அதைக் கேட்டு நான் சிரித்தேன், 'ஒரு தோஷமும் பிடிக்காது' என்று பதில் சொன்னேன்.

ஆனால் அந்தச் சமயத்துக்கு அந்தப்பதிலைச் சொல்லி அவர்களைச் சிரிக்க வைத்ததைத் தவிர, வீட்டுக்கு வந்ததும் தொண்டை கட்டிக் கொண்டு விட்டது. பேச முடியாதபடி போய் விட்டது. வழக்கமாக டெலிபோனில் என்னோடு பேசி மகிழும் சினேகிதிகளிடம் கூட என்னால் பேச முடியாமல் போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழுக்கையும் முடி உதிர்தலும்

# எப்படி ஏற்படுகின்றன?

# தடுப்பது எங்ஙனம்?

வழுக்கைத் தலை ஆண்களிடையே அதிகமாகக் காணப்பட்டபோதிலும், பெண்களையும் இது பல வித உருவங்களில் பாதிப்பதுண்டு. மயிர் உதிர்தல், பிறைபோன்ற நெற்றித்தடம் வளர்ந்துவிடுதல் போன்ற பல வகைகளில் பெண்களின் முடி பாதிக்கப்படுகிறது!

வழுக்கை மூன்று வகைப்படும். முதலாவது 'பரம்பரை வழுக்கை.' இதை மாற்ற மருந்து இல்லை. அடுத்தது 'படை வழுக்கை.' மூன்ருவது 'முட்டை வழுக்கை.' அதாவது இந்த வகையான வழுக்கை உள்ளவர்களின் தலை முட்டையைப்போல மழமழப்பாக இருக்கும்.

முடி ஏராளமாக உதிர்ந்துவிடுவது வழுக்கை ஏற்படப் போகிறது என்பதற்கு அறிகுறி. முடி உதிர்ந்து விழப் பல காரணங்கள் உண்டு. கொடிய சாய்ச்சல், கனேரியா சிபிலிஸ், போன்ற நரம்பு வியாதிகள், தலைக்கு போதியளவு இரத்த ஓட்டம் இல்லாமை, மூளை அமுக்கம், முடி அமுக்கம், மண்டையோட்டைச் சுற்றியிருக்கும் தோலில் போதியளவு கொழுப்பு இல்லாமை, ஆகியவற்றைக் குறிப்பாகச் சொல்லலாம்:

எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டிருத்தல், அல்லது கவலையாக இருத்தல், மூளை அமுக்கத்தை உண்டாக்குகிறது. இதனுல் மண்டையோட்டைச் சுற்றியிருக்கும் தோலில் அழுத்தம் ஏற்படுகிறது. மயிர்க்கால்வெளியே உந்தப்படுகின்றன. இதனுல் மயிர் உதிர்ந்துவிழும்.

பெண்கள் குதிரைவால் கொண்டை போட்டுக் கொள்வதாலும், ஆண்கள் எப்பொழுதும் தொப்பி முதலியவற்றைத் தரிப்பதாலும் 'முடி அமுக்கம்' ஏற்படுகிறது.

மண்டையோட்டைச் சுற்றியிருக்கும் தோலுக்கடியில் நிறையக் கொழுப்பு தங்கியிருக்கிறது. இந்தக் கொழுப்பு மயிர்க்கால்களுக்கு ஊன்றுகோல் போன்று துணைபுரிகிறது. சிலருக்கு இந்தக் கொழுப்புப்பொருள் நீண்டநாள் இருப்பதில்லை. கொழுப்புப் பொருள் மறைந்ததும், மயிர்க்கால்கள் பலமிழந்து விடுகின்றன. இதனுல் மயிர் உதிர்கிறது.

நல்ல சத்துள்ள உணவுகளை உண்பதோடு, தலையில் எண்ணெய்தேய்க்கும்போது இரண்டு கைகளாலும் மயிரைப் பிடித்து உலுக்கி சுழற்றி இழுத்துவிட்டால் தான், சத்துநிறைந்த இரத்தம் தலையை அடைய வழியேற்படும். மயிர்க் கால்களில் படும்படி எண்ணெய் தேய்க்கவேண்டும். வாருவதற்கு முன் பிரஷ்ஷினுல், நன்ருகச் சூடாகும்படி தலையைத் தேய்க்கலாம்.

ஆசனங்களில் சிரசாசனம் மயிர்வளர்ச்சிக்கும் அழகிற்கும் சிறந்தது. இந்த ஆசனம் செய்யும்போது நிறைய இரத்தம் தலைக்குப் பாய்வதால், முடி புத்துணர்ச்சி பெற்று வளரும்.

வழுக்கைக்கும் மயிர் உதிர்வதற்கும் சிறந்த மருந்து ஒன்று இருக்கிறது. அது, வீட்டில் சாதாரணமாக சமையலுக்கு உபயோகிக்கும் உப்புத்தான். குளிக்கும் பொழுது இந்த உப்பில் ஒரு கைபிடி எடுத்து தலையில் வைத்து அழுத்தித் தேய்க்க வேண்டும். இதனுல் சிறந்த பலனை எதிர்பார்க்கலாம்.

முற்றின தேங்காயை அரைத்துப் பிழிந்து எடுத்த பாலை, தலையில் தடவி சுமார் 15 நிமிடங்கள் வரை ஊறவிட்டு, பிறகு வெதுவெதுப்பான நீரில் முழுகினுல், தலையில் உள்ள 'பொடுகு' நீங்கி விடும். பூரண நிவாரணம் ஏற்படக் குறைந்தது ஐந்தாறு நாட்களாவது. தொடர்ந்து இம்முறையைப் பின்பற்ற வேண்டியது அவசியம்.

தேங்காய்ப்பாலை உபயோகிப்பது போலவே எலுமிச்சம்பழ ரசத்தையும் தலைமயிரின் அடிமீது தோல் வரையில் அழுந்தத் தேய்த்து உலர விட்டுக் குளிக்கலாம். 'பொடுகு' நீங்க இதுவும் சிறந்த முறையாகும்.

பருவமடைய இரண்டு மூன்று ஆண்டுகள் இருக்கும் பொழுது பெண்களின் தலையை மழித்து, தலைக்குத் தேய்க்க, தேங்காய் சிரட்டையை எரித்துக் கிடைக்கும் கரியை, தேங்காய் எண்ணெயில் கலந்து உபயோகிக்கும் பழக்கம். கேரளத்தில் பல இடங்களில் காணப்படுகிறது. இதனு ல் பருவமடையும் தறுவாயில் பெண்களுக்கு அடர்த்தியான கருங்கூந்தல் வளர்வதாக கூறுகிறுர்கள்.


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

போலிகளை வாங்கி ஏமாருதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கர்பெனி,

கொழும்பு-14


## இராசேந்திர...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் அருகில், சுமார் 10 கல் தொலைவில் உள்ள சென்னு குன்றில் (மோகனூர் சர்க்கரை ஆலைக்கு அருகில்) பண்டைக் காலக் குகை ஒன்றும், சமண முனிவர்கள் வாழ்ந்த படுக்கைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேற்சொன்ன புகளூருக்கு மற்ருெரு பக்கத்தில் 10 கல் தொலைவில் சின்னகவுன் பாளையத்தில், மற்ருெரு குகையில்—இயற்கையாக அமைந்த முறையில்—சமண முனிவர்கள் வாழ்ந்த படுக்கைகள் காணப்படுவதுடன் அவற்றில் மிகவும் சிதைந்த பண்டைத் தமிழ் எழுத்தில், 'அருள்' என்று எழுதப்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

கொங்குநாட்டில் சமண முனிவர்கள் இந்தப் பகுதிகளில் சிறப்பாக வாழ்ந்தார்கள் என்பதற்குச் சான்றுகும் இது!

சமையல் குறிப்பு:

# கீரைகள் பலவிதம்!

### கீரைமிளகூட்டு

ஒரு தேக்கரண்டி மிளகு ஒரு மேசைக் கரண்டி உளுத்தம பருப்பு இவைகளை எண்ணெய் விட்டு வறுத்து, துருவிய தேங்காயுடன் சேர்த்து அரைத்து மசித்த கீரையில் கலந்து ஒரு கொதி வந்ததும் இறக்கித் தாளிக்கவும். இதற்கும் வேக வைத்த பருப்பைச் சேர்க்கலாம்.

### வெங்காய பாஜி

இதற்கு, கீரையை வேக வைத்துக் கொண்டு, சாதாமசியல் போல் கடைந்து பிறகு ஒரு எலுமிச்சம் பழ அளவு புளியைக் கரைத்து கீரையில் விடவும். ஒரு ஐந்து பலம் வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி, ஐந்து பச்சை மிளகாய் கீறி இரண்டையும், வாணலியில் கொஞ்சம் எண்ணெய்விட்டு வதக்கி, இதையும் கீரையில் கொட்டிக் கொதிக்கவிடவும் சிறிது நேரம் கிளறிவிட்டுக் கொதி வந்ததும், கீழே இறக்கித் தாளிக்கவும், காயம் கரைத்து விடவும், தாளிப்பில் உளுத்தம் பருப்பு சேர்க்க வேண்டியதில்லை.

### புளியிட்ட கீரை

கீரையை நன்ருகக் கடைந்த பிறகு அதே அளவு புளியைக் கரைத்துவிட்டு பச்சைமிளகாயைக் கீறிப் போட்டு, கொதி வந்து சிறிது நேரம் ஆனதும் கொஞ்சம் மாவு கரைத்து விட்டு கீழே இறக்கி, மூன்று மிளகாய் வத்தலைக் கிள்ளி ஒரு ஸ்பூன் கடுகு, 1/2 ஸ்பூன் வெந்தயம் இவைகளைத் தாளித்து காயம் கரைத்து விட்டுக் கலக்கவும்.

### மோர்க்கீரை

மசித்த கீரையில் ஒரு ஆழாக்கு சிறு புளிப்புள்ள கூழ் மோரைக் கலந்து மாவு கரைத்துவிட்டுக் கீழே இறக்கி முன் போல் மிளகாய் வத்தல் கடுகு, வெந்தயம் தாளிக்கவும். காயம் விடவும். தேங்காய், பச்சை மிளகாய் அரைத்துச் செய்வதும் ஒரு ருசி.

மேலே தெரிவிக்கப்பட்டவைகள் எல்லாம் முளைக் கீரைக்குப் பொருத்தமானவை.

### அரைக்கீரை மசியல்

நல்ல கீரையை வாங்கி கட்டை கரணைகளை நீக்கிவிட்டு சுமாராக நறுக்கிக் கழுவி வடிகட்டி, கற்சட்டியில் இட்டு தேவையான உப்புப் போட்டு வேகவைத்து மசிக்கவும். இந்த மசியல் கொஞ்சம் கெட்டியாகவே தயார் செய்வது நல்லது.

இரண்டு மிளகாய் வத்தல், கடுகு, உளுத்தம் பருப்பு தாளித்துச் சேர்க்கவும் காயம் ஊற்றவும். இந்த மசியலில் கறிவடகம் வறுத்துச் சேர்ப்பது அதிக ருசியைக் கொடுக்கும்.

### மணத்தக்காளிக் கீரை

இதை வேண்டிய அளவு நறுக்கிக் கழுவி வடிகட்டி ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் விட்டு அதில் கீரையைப் போட்டு அடுப்பிலேற்றி அளவான உப்பும் சிறிது மஞ்சட் பொடியும் போட்டு வெந்ததும் ஒரு மூடி தேங்காயைத் துருவி 5பச்சைமிளகாய் சிறிது சீரகம் இவைகளையும் சேர்த்து அரைத்து கீரையில் கலக்கவும். பின்பு வேகவைத்த பாசிப் பருப்பையும் கீரையில்சேர்த்து கொஞ்சம்மாவும் கரைத்து விட்டு ஒரு கொதி வந்ததும் முன் போல் தாளிக்கவும்.

## மாவட்டசபையை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது ஏனைய தமிழர்களையும் அரசியல் ரீதியாக 'கழுத்தறுக்கும்' பணியில் ஈடுபட்டதன் முடிவை எதிர்காலத்தின் தீர்ப்புக்கு விட்டுவிடுவோம்.

பொன்னம்பலம் போன்றவர்கள் இப்பூமியில் தோன்ருதிருந்தால் ஈழத்தமிழனின் பிரச்சினைகள் என்ருே தீர்ந்து சுபீட்சம் கிடைத்திருக்கும். வரும்காலம்தான் இதற்குப் பதில் கூறவேண்டும்.

மதிவதனன்—
மன்னர்.

புகளூரில் சங்ககாலக் கிரன், ஓரி, நல்லி ஊரன் என்ற பெயர்கள்காணப்படுவதும் தெரிந்ததே!

இத் தகவல்கள் தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநரால் அண்மையில் அறிவிக்கப்பட்டது.

## மஹாகவிக்கு பிரிவுபசார வைபவம்

'இலங்கையின் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ள மன்னர் இன்று பின் தங்கிய பிரதேசங்களில் ஒன்ருகி விட்டது. இப்பிரதேசத்திற்கு பதவி உயர்வு பெற்று மாற்றலாகிச் செல்லும் தமிழ்ப் பெருங்கவிஞரான மஹாகவி அப்பிரதேசத்தை இலக்கியவளம் மிக்க பகுதியாக்கி அதன் முந்திய பெருமைக்கு இட்டுச் செல்ல முயல்வார் என்று நம்புகின்றேன்.' என்று திரு எஸ். பொன்னுத்துரை அவர்கள் பம்பலப்பிட்டி கிறீன்லந்து ஓட்டலில் நடைபெற்ற பிரிவுபசார விழாவில் பேசுகையில் கூறினுர்.

கொழும்பு இலக்கியவட்டத்தின் ஆதரவில் நடைபெற்ற விழாவிற்கு இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கத் தலைவர் ஜனுப் ஹாபிஸ் எம். கே. செய்யிது அகமது தலைமை தாங்கினுர். திரு. பொன்னுத்துரை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

'கிழக்கிலங்கைக் கவிஞர்களில் ஒருவரான திரு. நீலாவணன் இல்லத்திற்கு ஒரு நாள் சென்றிருந்த பொழுது அங்கு திருவள்ளுவர், பாரதியார் வரிசையில் வேறு ஒருவரின் பெரிய உருவப்படமும் இருப்பதைக் கண்டேன். அது யாருடைய படம் என்று நான் வினவிய பொழுது அது ஈழத்தின் பெரும் கவிஞர் மஹாகவியினுடையது என்றும் அவரே எனது கவிதையுலகின் முன்னேடி என்றும் எனக்குப் பதில் கிடைத்தது. அதன் பின்னர் அவரின் கவிதைகளைத் தொடர்ந்து படித்தேன். நீலாவணன் கூறியது உண்மை தானென்பதை உணர்ந்தேன். மஹாகவி ஈழத்தின் பெரும் கவிஞரல்ல அவர் தமிழ்ப் பெரும் கவிஞர் என்று கூறுவதேசரி'

வானெலித் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு, கே. எஸ். நடராசா இவ்விழாவில் பேசுகையில் 'ஈழத்தின் கவிதை வரலாற்றை எழுதுகையில் மஹாகவிக்கு அதில் தனியிடம் உண்டு' என்ருர்.

திருவாளர்கள் இ. இரத்தினம், செ. கோடீசுவரன், எம். ஏ. ரஹ்மான், க. நவசோதி ஆகியோரும் பேசினுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை

அழ. நோனிஷ்

ஒற்றுமை என்னுஞ் சொல் எத்துணை இனிமையான ஒரு சொல். இந்த ஒற்றுமை இனிமை பயப்பதோடு மட்டும் நின்று விடுவதொன்றல்ல, சக்தி வாய்ந்ததுங்கூட, மக்கள் சமுதாயத்தில் இதற்கு முக்கிய மதிப்பும் பங்கும் உண்டு. இந்த ஒற்றுமையை நாம் விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியமில்லை' விலைகொடுத்து வாங்கும் கடைச்சரக்கும் அல்ல இது. நாம் நினைத்தால் பெறக்கூடியது. இஃது நம் இதயத்தைப் பொறுத்தது. நாடு முன்னேற வேண்டும்.

நாட்டு மக்கள் ஒன்று பட்டு வாழ வேண்டும். கல்வி, கலை கலாசாரம், மொழி, மதம் என்பவை புத்துயிர் பெற்று ஓங்க வேண்டும் என்ற நல்லெண்ணம் ஒருவனது இதயத்தில் எழக்கூடுமானுல், அவனது இதயம், 'ஒன்றுமை' என்னும் பயிர் நன்கு விளையக் கூடிய ஓர் நன்னிலம் போல்வதாகும் எனலாம்.

பகைமை பாராட்டாது அன்பொன்றையே ஆயுதமாகக் கொண்டு வாழ்பவன் நெஞ்சில் ஒற்றுமை களிநடஞ் செய்யும்.

ஒற்றுமை ஒன்றே ஒரு நாடு, முன்னேற பொருளாதாரத்தில், கலையில், கல்வியில், வீரத்தில் மேம்பட்டு விளங்க சிறந்த சாதனமாகும்.

'ஒற்றுமை' என்ற ஒளியில்லாத நாடு, நிலவில்லாத வானம் போலவும் தாலியறுந்த தையல் போலவும் நாலறுந்த சரம் போலவும் முன்னேற்றத்தில் தடைப்பட்டு, வீரத்தில் குன்றி - கலையில், கல்வியில் பொருளாதாரத்தில் பின் தங்கி சீர் குலைந்து, இருளடைந்து கிடக்கும். எனவே - கவிஞர் கண்ணதாசன் சொல்வது போல.........

'ஒற்றுமையாய் வாழ்வதாலே
உண்டு நன்மையே!
வேற்றுமையை வளர்ப்பதனாலே
விளையும் தீமையே!'

பகைவர் படை ஒரு நாட்டைப் பிடிக்க வருகிறது என்று வைத்துக் கொள்வோம்.

அதே நேரத்தில் நாட்டினுள் ஒற்றுமையின்றி மக்கள் தத்தம் கட்சிகளுக்கேற்ப கொள்கை பேசி குழம்பி கலவரப்பட்டுக் கிடந்தால்; படை கொண்டு வந்த பகைவனுக்கு வெற்றி சுலபமாகக் கிடைத்து விடும் அல்லவா?

காரணம்.

ஒற்றுமைக்கு நேர் விரோதியான வேற்றுமை மக்கள் மனதில் குடிபுகுந்து காட்டிய தீவினையே! 'ஊர் ரெண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் தானே!

எல்லோரும் ஒன்றுபட்டு, ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகளாக ஒற்றுமையாக நின்று' பகையாளிகளை எதிர்த்திருந்தால் சுலபமாக வெற்றி கிடைக்கும். ஒற்றுமையின் சக்தி, அப்போதுதான் புரிந்திருக்கும்.

எனவேதான் நாம் முதற்கண் செய்யவேண்டியது 'வேற்றுமை' யென்ற தேசத்துரோகியைப் பிடித்து ஒழித்துக்கட்டி 'ஒற்றுமை'யென்ற தேசக்காவலனை வழிபட வேண்டும்! ஆம்!

'ஒன்றுபட்டால் உண்டு
வாழ்வு-நம்மில்
ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வு!'

## ஊரின் பெயரென்ன?

முதலாம் எழுத்து மகிழ்ச்சியிலுண்டு துன்பத்தில் இல்லை.

இரண்டாம் எழுத்து கட்டிலிலுண்டு மெத்தையில் இல்லை.

மூன்ரும் எழுத்து அடக்கத்திலுண்டு துடிப்பில் இல்லை.

நான்காம் எழுத்து துக்கத்திலுண்டு இன்பத்தில் இல்லை.

ஐந்தாம் எழுத்து கடுகிலுண்டு வெந்தயத்தில் இல்லை.

ஆறும் எழுத்து களவிலுண்டு பொய்யில் இல்லை.

ஏழாம் எழுத்து அப்பிளிலுண்டு திராட்சையில் இல்லை.

எட்டாம் எழுத்து புளியிலுண்டு இனிப்பில் இல்லை.

[illegible]

அனுப்பியவர்:
மட்டக்களப்பு வி. கே. மூர்த்தி

## பொன் மொழிகள்

'நான் எதை மேற்கொண்டேனே அதில் வெற்றி பெற்றேன். காரணம் நான் அதை மனப்பூர்வமாகவிரும்பினேன்'

—நெப்போலியன்.

'உலகிலுள்ள எல்லா சக்திகளாலும் மிகைக்க முடியாத சக்தி ஒன்று உளது. அதுவே மனிதனுடைய மனே சக்தி'

—ஸ்டாலின்.

'நான் பிறரைப் பற்றிப் பேசுவ தென்ருல் அவர்களின் நல்ல குணங்களை எடுத்துரைப்பேனேயன்றி குறைகளை ஒரு போதுங் கூறுவதில்லை'

—பெஞ்சமின் பிராங்ளின்.

ம. அ. யேசுதாசன்,
யாழ்ப்பாணம்.

## புதிரும் விடையும்

மலையாளப் பண்டிகையான ஓணம் எந்த மாதத்தில் கொண்டாடப்படுகிறது?

ஆவணி மாதத்தில்.

ஒலிம்பிக் ஆட்டங்கள் எத்தனை ஆண்டுகளுக்குஒரு முறை நடைபெறுகின்றன?

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை.

சென்னையிலிருந்து பம்பாய் செல்லும் இரும்புப் பாதையின் நீளம் யாது?

794 மைல்.

ஸ்டெதாஸ் கோப்புக்கும் டெலிஸ் கோப்புக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

நோயாளியைப் பரிசிலிக்க டாக்டர் வைத்து இருக்கும் ரப்பர் குழாய் ஸ்டெதாஸ் கோப் வெகு தூரத்திலுள்ள பொருளைக் காண உதவும் தூரதர்சினி டெலிஸ்கோப்.

பதினறும் பெற்று வாழ் எனும் கூற்றினில் அந்தப் பதினறும் எவை?

புகழ், பொன், அழகு, நெல், கல்வி, பொறுமை, வலிமை, நல்லூழ், வெற்றி, இளமை, நுகர்ச்சி, துணிபு, நன்மக்கள், அறிவு, நோயின்மை, வாழ்நாள் என்பன.

ஏலச்செடி எத்தனை ஆண்டுகளுக்கு பலன் தரும்.

40 ஆண்டுகளுக்கு.

அட்டதாதுக்கள்எவை?

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, தரா, வங்கம், வெண்கலம், துத்தநாகம்.

கணித மேதை ராமானுஜம் எப்போது மறைந்தார்?

1920ம் ஆண்டு.

புகையிலைக் கஷாயம் எதற்குப் பயன் படும்?

பூச்சிவராமல் இருக்கச் செடிகளுக்கு அடிக்கலாம்.

மின்சார விட்டுகள் எவ்வாண்டு எங்கே முதல் புழக்கத்துக்கு வந்தன?

1889ல் அமெரிக்காவில்.

கண்ணைப் பரிசோதனை செய்ய வைத்தியர்கள் உபயோகிக்கும் கருவி எது?

ஆப்தெல் மாஸ் கோப்.

சணலைப் போல நாருக்காகப் பயன்படும் முக்கியமான செடி எது?

புளித்த கீரை.

சூரிய ஒளியிலுள்ள ஏழு நிற வர்ணக் கதிர்கள் இருப்பதைக் கண்டு பிடித்த விஞ்ஞானி யார்?

நியூட்டன்.

பண்டிதர் ஒருவர் கடைக்குப் போய் ஒரு வீசை நவநீதம் கொடு என்று கேட்க கடைக்காரர் விழிக்கிருர். அவர் கேட்கும் பொருள் என்ன!

வெண்ணெய்.

ருஷ்யாவின் செயற்கைச் சந்திரனில் வைத்து அனுப்பப்பட்ட நாயின் பெயரென்ன!

லெய்கா.

விமானி தான் எத்தனை அடி உயரத்தில் பறக்கிருேம் என்பதை அறிந்து கொள்ள உதவும் கருவி யாது?

ஆல்டிமீட்டர்.

உலகத்திலேயே செயற்கை வைரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் எந்நாட்டில் அதிகம்?

சுவிற்ஸர்லாந்தில்.

சேவலின் உதவியின்றி கோழி முட்டையிடுவது உண்டா?

ஆம் முட்டையிடுவதுண்டு; ஆனல் அதனின்றும் குஞ்சு வெளிவராது.

சாதாரண உப்பு, சுத்தப்படுத்தப்பட்ட மேஜை உப்பு இவையிரண்டில் எதில் அயோடின் சத்து அதிகம்?

சாதாரண உப்பில்.

ஈக்கு இரவில் கண் தெரியுமா?

தெரியாது.

குளிரம் என்ருல் என்ன?
நண்டு.

ந. சாந்தாதேவி
ஏருவூர்.

## இவர் யார்?



உங்கள் திறமையை சோதித்துப் பார்ப்பதற்காகவே இப் போட்டி நடத்தப்படுகிறது.

இங்கு துண்டு துண்டாகக் காணப்படும் பகுதிகளை சரியான முறையில் சேர்த்துப் பார்த்தால், தமிழகம் செய்த தவப்பயனுகத் தோன்றிய பெருமகன் ஒருவருடைய உருவம் தோன்றும்.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம், இத்துண்டுகளைச் சேர்த்து முறைப்படி ஒழுங்காக அப்பெரியாரின் உருவந் தோன்றுமாறு ஒட்டி, அதன் கீழ் அந்த அறிஞரின் பெயரையும் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவேண்டியதே.

இப் போட்டியில் வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலியான மாணவருக்கு ரூபா 10-00 பெறுமதியுள்ள புத்தகப் பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

போட்டி முடிவு திகதி
30-6-67.

எங்கே, உங்கள் திறமையைப் பார்ப்போமே!

அடுத்த வாரம் முதல்
**'மஹாகவி'**
எழுதும்
**குழந்தைக் கவிதைகள்**
இடம்பெறுகின்றன.

# மாணவர் அரங்கு

## இளமையில் கடமையை உணர்வோம்

'அரிது அரிது மானிடராய்ப் பிறப்பதரிது என்ருர் தமிழ் மூதாட்டி ஔவை. அதிலும் கூன், குருடு முடம் போன்ற உடற் குறை இல்லாதவராய் பிறப்பது அதனிலுமரிது.

மனிதப்பிறவிசிறப்பும் மேன்மையும் உயர்ந்தது. மக்களினம் மேம்பட்டது என்பதை பலவற்ருலும் நாம் உணரலாம். மனிதப்பிறவியின் மிக முக்கியமான பகுதிஇளமையே இந்த இளமைப் பருவத்தில் தான் வாழ்வின் இறுதி வரைக்குமுள்ள கடமைகள் அமைய வேண்டி வரும்.

'இளமையிற் கல்', என்ற தமிழ் மூதுரை நமக்கு இதை நன்கு உணர்த்துகின்றது. துள்ளி விளையாடும் பள்ளிப் பருவத்தில் தான் செவ்வனே கல்வி கற்றிட வேண்டும். களங்கமற்ற இளமைப்பருவந்தான் கல்விக்கு தகுந்த பருவம் ஒளி பொருந்திய முகமும் தெளிவான நெஞ்சமுமுள்ள இளமைப் பருவத்தில் கல்வி கற்ருல் தான் பசுமரத்தாணிபோலப் பதியும். 'கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற திருவள்ளுவரின் குறளுக்கேற்ப நாம் பிழையறக் கற்க வேண்டும். கற்றபடி அதற்குரிய நெறியோடு வாழ வேண்டும். குறள் கூறும் இந்த உன்னதக் கருத்து, இளமைப் பருவத்திலுள்ள மாணவ, மாணவியர்க்கு மிக முக்கியம்.

இளமைப் பருவத்திலே எத்தனையோ கடமைகளுள்ளன. அவற்றை நாம் கடைப்பிடித்தொழுகினுல் தான் எதிர்காலம் நமக்கும் நாம் வாழுகின்ற நாட்டிற்கும் சிறப்பாக இருக்கும். இளமையில் கடைப்பிடித்தொழுக வேண்டியது ஒழுக்கம். ஒழுக்கத்தைஉயிரைவிட உயர்ந்தது என்கிருர் வள்ளுவர், வயல்களிலே பயிர்களை எவ்வாறு தண்ணீர் பாய்ச்சி களையெடுத்து கண்களை இமை காப்பதுபோல்காத்துவளர்த்த பின அதன் பலனை நெல்மணியாக அறுவடைசெய்து அடைகிருேமோ, அதேபோல் தான் இளமைப் பருவத்தில் கல்வி, நல்லொழுக்கம், திறமை, அறிவு, நன்றிமறவாத்தன்மை முதலியவற்றைப் போற்றிக் காத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இளமைப்பருவம் கடந்து வாழ்வியல் துறையில் புகும்போது எண்ணற்ற இடர் வந்தாலும் அதைத் துச்சமென ஒதுக்கித்தள்ளி வாழ்க்கையில் முன்னேற முடியும். வாழ்வின் பிற்பகுதி இன்பதுன்பத்திற்கு இளமையும் அதனைச் சார்ந்த கடமையும் காரணமாக அமைந்திருப்பதைப் பலருடைய வாழ்வில் காணலாம்.

கடமை பெரிது. அதனை நல்வழியில் கடைப்பிடித்தொழுக வேண்டியது ஆண் பெண் இருபாலரையும் சார்ந்தது. இளமையில் கடமைகளை உணர்ந்து, அவற்றைச் செய்து வாழ்வில். முன்னேறுவோமாக. வளம்பெறுவோமாக.

மட்டுநகர்.

இரா. கைலைநாதன்

## இதைச் செய் இறைவா!

பூமிக்குப் பாரமாய் வாழ்ந்திடும்-பல
போலித்தாசம் கொண்ட பாவிகள்,
ஆயிரமாயிரம் வாழ்கிருர்.-எங்கள்
அமரரைப் போன்ருேரே மாழ்கிருர்.

'தான்மட்டும் வாழ்ந்திட்டால் போதுமே'-என்னும்
தன்னலக் காரர்கள் வாழ்கிருர்,
தான்வாழா (து)ப் பிறர்க்காக வாழ்ந்திடும்-
கோப்பாய்
தலைவனைப் போன்ருேரே மாழ்கிருர்,

இருந்தாலும் இறைவா!நீ இப்படி-துரோகம்
எம்தமிழ் இனத்துக்கா செய்வது?
மறந்துமிவ் வேலையை தொடர்ந்து நீ-செய்து
மக்களின் துயரத்தைக் கூட்டாதே!

ஒன்று செய்-உத்தமர் அமரராம்-எங்கள்
வன்னியசிங்கம் போல் தமிழருள்,
ஒன்றல்ல நூறு, நூருயிரம்-இறைவா!
உண்டாக்கி...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜனத்திரள் மிகுந்த திரைகளில் 2-வது வாரமாக
இப்பொழுது காட்சி தருகிறது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) | வின்சர் (யாழ்ப்பாணம்) | இம்பீரியல் (மட்டுநகர்) | நெல்சன் (திருமலை)
ஸ்ரீ முருகன் (வவுனியா) | குமரன் (மன்னார்) | றீகல் (நீர்கொழும்பு)

ரவிச்சந்திரன், பாரதி, தங்கவேலு, நாகேஷ், மனோரமா
எம்.வி. ராஜம்மா, பேபி சகிலா, ஓ. ஏ. கே. தேவர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

# எங்க பாப்பா



தயாரிப்பு டைரக்ஷன்: பி. ஆர். பந்துலு பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
இசையமைப்பு: எம். எஸ். விஸ்வநாதன் பின்னணி: சௌந்தரராசன், சுசீலா

5-வது வாரம் கெயிட்டி (கொழும்பு)
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
## நாடோடி

---

# சிலோன் எண்டர்டெயின்மென்ட்ஸ் நிருவகத்தார்

தம் இரசிகப் பெருமக்களுக்கு அளிக்கவிருக்கும் சில தித்திக்கும் திரைவிருந்துகள்!

வீனஸ் பிக்சர்ஸ் அளிக்கும் சாரதா புரொடக்‌ஷன்ஸ்

# பட்டணத்தில் பூதம்

★ ஜெய்சங்கர் ★ கே. ஆர். விஜயா ★ பாலாஜி ★ மனோகர் ★ நாகேஷ் இன்னும் பலர் நடித்த
டைரெக்‌ஷன்: எம். வி. ராமன் தயாரிப்பு: ரி. கோவிந்தராஜன்

ஸ்ரீ வெங்கடேஸ்வரா சினிடோன் அளிக்கும்
சன்பீம் - ஜி. கே. கம்பைன்ஸாரின்

## பட்டத்து ராணி

ஜெமினி கணேஷன் பானுமதி கல்பனா தேவர் நடித்தது
மேற்பார்வை: ஏ. பீம்சிங் டைரெக்‌ஷன்: எஸ். ராமநாதன்

நவசக்தி பிலிம்ஸ்

## நான் யார் தெரியுமா?

ஜெய்சங்கர் பாரதி
விஜயஸ்ரீ ராதிகா ஓ. ஏ. கே. தேவர் சோ நடித்தது
கதை: சின்ன அண்ணாமலை டைரெக்‌ஷன்: எம். வி. ராமன்

அண்ணா புரொடக்‌ஷன்ஸ்

## பவானி

ஜெய்சங்கர், எல். விஜயலட்சுமி,
அசோகன் சுந்தரராஜன் விஜயகுமாரி நடித்தது
கதை-வசனம்: கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் டைரெக்‌ஷன்ஸ்: ராமண்ணா

கமால் பிரதர்ஸ்

## புரொடக்‌ஷன்ஸ் நெ. 5

ரவிச்சந்திரன், பாரதி,
பத்மினி, நங்கராவ், நாகேஷ், எஸ். வி. சுப்பையா நடித்தது
திரைக்கதை—வசனம்—டைரெக்‌ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

---

# இப்பொழுது வெற்றி முழங்குகிறது 12ந் திகதி முதல்

கிங்ஸ்லி (கொழும்பு) | ஈரோஸ் (பாமன்கடை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டுநகர்) | ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
விஜிதா (அப்டன்) | திவொலி (நுவரெலியா) | கல்யாணி (நாவலப்பிட்டி) | மொடேன் (பதுளை) | வெம்பிளி (கண்டி)

★ சிவாஜி கணேசன் ★ கே. ஆர். விஜயா
எஸ். வி. சகஸ்ரநாமம், எம். வி. ராஜம்மா,
ரங்கராவ், நாகையா, சுந்தரிபாய்
நடிக்கும்



வி. கே. ஆர். பிக்சர்ஸ்

# செல்வம்

கதை, வசனம், டைரக்‌ஷன்:
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்



சப்பயர் (வெள்ளவத்தை) | கெப்பிட்டல் (கொழும்பு)
மொடேன் (பண்டாரவளை) | லஷ்சுமி (இரத்தினபுரி)
பிறின்ஸ் (காலி) | அசோகா (புத்தளம்)

ஜெய்சங்கர் ஜெயலலிதா
நடிக்கும்

# நீ

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ... பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ, இலக்கத்தில்
1967-ம் வருடம் ... மாதம் ...-ம் திகதி ... அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org